கோகுலம்


GOKULAM

ஜூலை '91 ரூ. 3/-






தலையாட்டித் தஞ்சை பொம்மை
தங்கள் உறவோ சொல்லுங்கள்!




கோகுலம்

1991 ஜூலை மாத இதழ்
மலர் : 9 இதழ் : 6







அருமைச் சிறுவர் சிறுமியரே!

இந்த இதழ் கோகுலம் உங்கள் கரங்களில் தவழும் போது நீங்களெல்லோரும் புது வகுப்பிற்குச் சென்றிருப்பீர்கள். உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகள். படிக்கின்ற பள்ளிக்கும், கல்வி கற்பிக்கம் ஆசிரியருக்கும், பெற்றோருக்கும் பெருமையளிக்கும்படி புது வகுப்பில்; புது ஆண்டில் நடந்து கொள்ளுங்கள்.

நேரு மாமாவின் பேரனாகப் பிறந்து, நாடு நெருக்கடியான கட்டத்தில் இருந்த போது பிரதமராகி, மிகக் குறுகிய காலத்தில் தன் திறமையான பணிகளால் உலகத் தலைவர்களில் ஒருவராக உயர்ந்திருந்த ராஜீவ் காந்தியவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். குழந்தைகளோடு அவர் கலந்து கொண்ட சில புகைப்படங்கள், அவருக்கு அஞ்சலி செய்யும் வகையில் இந்த இதழில் வெளியாகின்றன.

அயல்நாட்டுக் கதைகளை எழுதுவதில் தனித் திறமை பெற்ற தம்பி சீனிவாசன் அவர்கள், இந்த இதழிலிருந்து உங்களுக்காக எழுத இருக்கிறார். ஏற்கெனவே அவர் உங்களுக்கு நன்கு அறிமுகமானவர்.

அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்,

(கௌரவ ஆசிரியர்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் - பாரதியார்.

தாங்காத சுமை!

டாம்பில் மன்னர் தன் அரண்மனைத் தோட்டத்தை விரிவாக்கி அழகுபடுத்த விரும்பினார். அதனால் தோட்டத்தை அடுத்துள்ள எல்லா நிலங்களையும் வாங்கிக் கொண்டு அவற்றின் உரிமையாளர்கள் என்ன விலை கேட்டாலும் அதைக் கொடுத்தார். ஆனால், ஏழை விதவை ஒருத்தி தன் முன்னோர்களிடமிருந்து தனக்குக் கிடைத்த நிலத்தை விற்கலாகாது என்னும் தூய எண்ணத்தால், எவ்வளவு பொருள் கொடுப்பதாகக் கூறியும் தன் நிலத்தை விற்க மறுத்து விட்டாள். அரசன் நிலத்தை அவளிடமிருந்து பலவந்தமாகப் பிடுங்கிக் கொண்டான்; ஏழை விதவை அழுது கொண்டே நீதிபதியிடம் சென்றாள்.

அச்சமயம் இபின்பெஷிர் என்ற நீதி தவறாத பெருமகன் ஒருவர் நகர நீதிபதியாக இருந்தார். வழக்கு விசாரணைக்கு வந்தது. மன்னரும் வந்திருந்தார். ''அரசே, நீங்கள் கட்டாயப்படுத்தி வாங்கிக் கொண்ட இந்த விதவை அம்மையாரின் நிலத்திலிருந்து, ஒரு சிறு பை நிறைய மண் எடுத்து என்னிடம் தாருங்கள்'' என்று வேண்டிக் கொண்டார் நீதிபதி.

அரசர் அப்படியே செய்தார். சிறு பையில் மண்ணை நிரப்பினார். நீதிபதியிடம் கொடுக்க பையைத் தூக்கினார். ஆனால், பையை நகர்த்த முடியவில்லை. ''அப்பா! எப்படி கனக்கிறது! தூக்க முடியவில்லையே''என்று வியந்து கூறினார் மன்னர்.

நீதிபதி உடனே, ''மன்னா! ஓர் ஏழை விதவையிடமிருந்து நீங்கள் அநியாய மாய்ப் பறித்துக் கொண்ட நிலத்தில் மிகச் சிறிய ஒரு பகுதிதான் உங்கள் கையில் இருக்கிறது; இந்தச் சுமை யையே தூக்க முடியவில்லை, கனக் கிறது என்கிறீர்களே! இறுதித் தீர்ப்பு நாளன்று உலகனைத்துக்கும் நீதிபதி யானவர் தாங்கள் கவர்ந்து கொண்ட எல்லா நிலங்களையும் தங்கள் தோள் களின் மேலேற்றி வைக்கும் போது, அந்தச் சுமையை எப்படிச் சுமக்கப் போகிறீர்கள்?'' என்று துணிச்சலோடு கேட்டார். அரசர் தனது தவறை உணர்ந்து, நீதிபதியிடம் மன்னிப்புக் கேட்டார். விதவையிடம் நிலத்தைத் திருப்பியளித்து விட்டார்.

(ஜெர்மானியக் கதை)

- ஜே. பாபு.



பள்ளிக்கு மட்டம்!

பி.ஆர். பார்த்தசாரதி

கந்தன் வாழ்க்கையே வெறுத்தது போல் இருந்தான்.

ஏழாம் வகுப்பில் பாஸ் ஆகவில்லை. கணக்கில் வீக்... இங்கிலீஷ் அரை குறை... போதாக்குறைக்கு ஆசிரியர் வேறு இவன் தப்புச் செய்யும் போதெல்லாம் கண்டிப்பதுமாகவே இருந்தார். அளவுக்கு அதிகமாக அவன் தவறு செய்யும் போது 'மரமண்டை' என்று கிள்ளுவார். பள்ளிக்கூடம் என்றாலே அலர்ஜியாகி விட்டது கந்தனுக்கு.

பள்ளிக்குப் போகும் போதும் வரும் போதும் பல மாடிக் கட்டிடம் கட்டும் இடத்தைப் பார்த்துக் கொண்டே செல் வான் கந்தன்.

இவன் வயதுச் சிறுவர்கள் வடையும் டீயும் சாப்பிட்டுக் கொண்டு, ஒருவ ருக்கு ஒருவர் தமாஷாகப் பேசிக் கொண்டு வேலை செய்வதைப் பார்த்துள்ளான்.

நிறையப் படித்தவர்கள் கூடப் படித்து முடித்து விட்டு வேலைக்குத் திண்டாடுவதையும் அவன் பார்த்துள் ளான்.

கந்தனுக்கு ஒரு எண்ணம் தோன் றியது. 'நாமும் அந்தக் கட்டிட வேலைக்குப் போனால் என்ன? சம்பளமும் கிடைக்கும். வடை, டீயும் கிடைக்கும். நாள் முழுவதும் கட்டிப் போட்ட மாதிரி பள்ளிக்கூடத்தில் இருந்து கொண்டு ஆசிரியரிடம் அடிபடுவதை விட இது மேல்' என்று எண்ணினான் அவன்.

அம்மாவிடம் சொன்னால் மறுத்து விடுவார்கள். குடிகார அப்பா கட் டாயம் சந்தோஷப்படுவார். குடிக்க அவருக்குக் காசு தாராளமாக இவன் மூலம் கிடைக்குமே! கண்டிப்பாக வேண்டாம் என்று சொல்ல மாட்டார்.

மறுநாள்.

கந்தன் நேரே கட்டிட மேஸ்திரியிடம் போனான். தனக்கு வேலை வேண்டும் என்று கேட்டான்.

'என்ன படிச்சிருக்கே',

'ஏழாவது'

'மேலே படிக்கல்லையா'

''அப்பா - அம்மா முடியாதவங்க. வருமானம் போதல்லே. அதான் வேலைக்கு வந்தேன்'' என்று துணிந்து ஒரு பொய்யைச் சொன்னான்.

அவன் மனது உறுத்தியது.

''பொய் சொல்லக் கூடாது பாப்பா'' என்று பாரதி பாடியது ஞாபகம் வந்தது.

கூடவே, பாடம் மூளையில் ஏறா ததும் ஆசிரியர் 'மரமண்டை' என்று அழைத்துக் கிள்ளியதும் நினை வில் வந்தது.

தான் பொய் சொன்னதை சமா தானப்படுத்திக் கொண்டான்.

'சரி... சரி... நாளையிலேர்ந்து வேலைக்கு வா. பன்னிரெண்டு ரூபா சம்பளம். இரண்டு வேளை வடை, டீ கிடைக்கும்.'

''சரிங்க ஐயா.''

பள்ளிக்கும் ஆசிரியருக்கும் ஒரு முழுக்கு! பெரிய கவர்னர் பதவி கிடைத்து விட்டது போல் மகிழ்ந்தான் கந்தன்.

மறுநாள்.

அம்மாவிடம் கூடச் சொல்லாமல் கட்டிட வேலை நடக்கும் இடத்திற்குப் போனான்.

''போய், கிழக்கே கட்டிட வேலை நடக்குதே, அங்கே போ'' என்றார் மேஸ்திரி.

கந்தன் போனான்.

அவன் வயதுப் பையன்கள் உட்கார்ந்து, கையில் சுத்தியல் வைத்துக் கொண்டு செங்கல்லை உடைத்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்களில் கொஞ்சம் வளர்ந்தவனாக இருந்தவன், ''வா.. நீதான் புதுப் பையனா..? இந்தா கல்லை உடை'' என்று அவனிடம் சுத்தியலைக் கொடுத்து விட்டு ஒதுங்கிப் போனான்.

கந்தன் கல்லை உடைக்க ஆரம்பித்தான். முதலில் உடைக்க சுலபமாக இருந்தது. போகப் போக முடிய வில்லை.

வியர்க்க ஆரம்பித்தது.

கால் மணி சென்றிருக்கும்.

வடை, டீ வந்தது. எல்லாப் பையன்களுக்கும் வந்தது. ஆனால், கந்தனுக்கு மட்டும் வரவில்லை!

''நீ புச்சா? மேஸ்திரி சொல்லலையே....! அடுத்த வேளையிலிருந்து உனக்கும் வரும்'' என்று சொன்னான் டீ கொண்டு வந்த பொடியன்.

கந்தனுக்கு வயிற்றைப் பசித்தது.

வீட்டில் இருந்தால் இந் நேரம் தனக்கு இருக்கிறதோ இல்லையோ அம்மா கந்தனுக்குப் பழையதும் பச்சை மிளகாயும் போடுவாள். அதை நினைத்துப் பார்க்கும்போதே கந்தனுக்குப் பசி அதிகமாயிற்று. அவனால் வேலை செய்ய முடியவில்லை. அதுவும் சுட்டெரிக்கும் காலை வெய்யிலில் அவனால் உட்கார முடியவில்லை.

பள்ளி திறந்து நான்கு நாள் ஆயிற்று. ஆனால், கந்தன் பள்ளிக்கூடம் போகவில்லை.

அவனது அம்மாவுக்கும் அவன் எங்கே போகிறான் என்பது தெரியாது.

இப்படியே ஒரு வாரம் ஓடியது.

திடீரென்று ஒரு நாள் கந்தன் காலை அதிக நேரம் ஆகியும் எழுந்திருக்க வில்லை.

அம்மா அவன் உடம்பைத் தொட்டுப் பார்த்தாள்.

கந்தன் திடீரென்று அழ ஆரம்பித்தான்.

அவன் அழும் காரணம் அம்மாவுக்குத் தெரியவில்லை.

முந்தின நாள் வேலை செய்யும் போது மேஸ்திரியிடம் அடி வாங்கியதில் உடம்பு இன்னமும் வலித்தது.

ஐந்தைந்து கற்களாகக் கந்தன் தூக்கிக் கூடையில் அடுக்கிக் கொண்டு வந்து கொண்டிருந்த போது, வழியில் கல் தடுக்கிக் கூடையோடு கீழே விழுந்தான்.


அங்கே வந்த மேஸ்திரி ''மடப் பயலே.. கல்லு என்ன வெலை விக்குது தெரியுமா? நீ போட்டு உடைத்து விட்டாயே?'' என்று அவன் கீழே விழுந்துள்ளான் என்பதையும் லட்சியம் செய்யாமல் எட்டி உதைத்தார். காலில் இரத்தம் வந்தது. மேஸ்திரி போய் விட்டார்.

பாடம் தப்பாக எழுதியதற்காகவும், தவறான பதிலைச் சொன்னதற்காகவும் வகுப்பில் ஆசிரிய

இங்கென்ன வேலை?

● வெண்டல் பிலிப்ஸ் என்பவர் ஹாலந்து நாட்டில் நீக்ரோக்களின் உரிமைக்காக போராடுபவர். இவரது கொள்கையை வெறுக்கும் ஒரு பாதிரியார் இவரிடம், ''இங்கே பிரசாரம் செய்வானேன்? நீக்ரோக்கள் இருக்குமிடத்திற்குப் போவது தானே!'' என்று கேட்டார் கிண்டலாக. உடனே பிலிப்ஸ் பாதிரியாரைக் கேட்டார் ''நரகத்தில் துடிப்பவர்களைக் கரையேற்றத் தானே நீங்கள் இருக்கிறீர்கள்?'' ''ஆமாம்!'' என்றார் பாதிரியார். ''அப்படியானால் நரகத்துக்குப் போவது தானே! இங்கே உங்களுக்கு என்ன வேலை?'' என்று கேட்டார் பிலிப்ஸ்!

எம். ஆனந்தன், வந்தவாசி.



ரிடம் அடி வாங்கியது நினைவுக்கு வந்தது.

'தவறு செய்தால் அடிக்கத்தானே அடிப்பார்கள்' என்று மனதைச் சமாதானம் செய்து கொண்டான். மேஸ்திரி கட்டிடத்திற்கு ஆசிரியர். அவரிடம் அடி வாங்குவது நியாயம் என்றால், தவறான பதிலைக் கூறியதற்காகவும், வீட்டுப் பாடத்தைச் செய்யாததற்காகவும் ஆசிரியர் 'மரமண்டை' என்று திட்டி, கிள்ளுவதும் கூட நியாயம்தானே?

கந்தனுக்கு உணர்வு வந்தது.

படிப்பை நிறுத்தியது தப்பு என்பதை டனப்பூர்வமாக உணர்ந் தான்.

அம்மா கை வைத்தியம் பண்ணி தலைக்குப் பத்து அரைத்து நெற்றியில் போட்டாள். அரை மணியில் காய்ச்சல் இறங்கியது.

கொஞ்சம் தெம்பு வந்தவுடன் கந்தன், ''அம்மா... பள்ளிக்கூடத்துக்கு நேரமாச்சு'' என்றான். அவன் குரலில் ஒரு தெளிவு இருந்தது.

நேருவின் பேரனைப் பாருங்கள் !



✱ தாத்தா நேருவுடன் ராஜீவ் காந்தி

படங்கள் உதவி: இந்திய அரசினின்
தகவல் துறை - சென்னை.



✱ மாஸ்கோ விமான நிலையத்தில் இந்தியக் குழந்தைகளின் வரவேற்பு



நெஞ்சில் நிறைந்தார் காணுங்கள்!



✱ உலக அமைதி வேண்டும் என்று கோரியவர், குழந்தைகளுடன்

✱ வீரச் செயல்களுக்கான விருது பெற்ற குழந்தைகளுடன்



தோல்விக்குக் காரணம்

தத்தாத்ரேயன்

''அப்பா,'' என்ற குரலைக் கேட்டு நிமிர்ந்தார் ஞானசேகரன்.

''என்ன? மறுபடியும் பிராக்ரஸ் கார்ட் விஷயம் தானே?''

''ஆமாம்,'' என்று தலையாட்டி விட்டு பிராக்ரஸ் கார்டை அவரிடம் கொடுத்தான் ரவி.


அவர் உரக்கப் படிக்க ஆரம்பித்தார்.

''அறிவியல் - 45, வரலாறு புவியியல் - 39, தமிழ் - 51, ஆங்கிலம் - 41, கணிதம் - 37. மொத்தம் - 213. இதெல்லாம் ஒரு மார்க்கா?''

தலை குனிந்தான் ரவி.

''நானும் எவ்வளவோ தடவை சொல்லிட்டேன். அன்னி அன்னி பாடத்தை அன்னி அன்னிக்குப் படிச்சா தானே? 'நாளை' 'நாளை'ன்னு தள்ளிப் போட்டால் எப்படி மார்க் வாங்க முடியும்? எப்படியோ போ!''

ஞானசேகரன் அதற்கு மேல் பேச வில்லை. பேசினால் செவிடன் காதில் சங்கு ஊதின மாதிரிதான் என்று அவருக்குத் தெரியும்!



மறுநாள் காலை ரவி எழுந்திருந்த போது நேற்றைய சம்பவங்களை சுத்தமாய் மறந்திருந்தான். அப்பொழுது தான் அவனுக் கே ஞாபகம் வந் தது.....

'இன்று வளரும் சிறுவர் சங்க எழுத்தாளர்கள் மீட்டிங்!'

ரவி கதை எழுதுவதைத் தெரிந்து வைத்திருந்த அவனுடைய தமிழாசிரியர், சிறுவர் சங்க எழுத்தாளர்கள் கூட்டத்திற்காக அவனை அழைத்து, ஒரு அடையாள அட்டையையும் கொடுத்திருந்தார்.

''பிரபல எழுத்தாளர் 'புதின தேவன்'



கலந்துக் கொள்ளப் போகிறார்,'' என்று தமிழாசிரியர் சொன்னதை எண்ணிய போது அவனுக்கு மகிழ்ச்சியாக இருந் தது.

'புதின தேவன்' எப்படி இருப்பார் என்ற எண்ணத்திலேயே குளித்து, சாப்பிட்டுவிட்டு, ட்ரெஸ் பண்ணிக் கொண்டு சைக்கிளில் ஏறினான்.

''ரவி. சைக்கிள்ல காத்தே இல்லை... காசு தரேன் அடிச்சுக்கோ,'' என்றாள் அம்மா.

''பத்து மணிக்கு மீட்டிங்... இப்பவே மணி ஒம்போதரையாச்சு... சாயந்தரம் அடிச்சுக்கறேன்,'' என்று சொல்லி விட்டு சைக்கிளை வேகமாய் மிதிக்கத் தொடங்கினான் ரவி.

பெற்றோர்கள் இருவரும் கவலை யோடு ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

பாதி வழியில் வரும்பொழுதுதான் சைக்கிளில் காற்று வேகமாய் இறங்கு வது தெரிந்தது ரவிக்கு. ஸ்டாண்டைப் போட்டுவிட்டு டயரைப் பார்த்தான். டயரில் ஒரு நீளமான முள் குத்திக் கொண்டிருந்தது.

'ஐயயோ... சைக்கிள் பஞ்சர், இப்போ என்ன செய்றது?'

ரவி சுற்றுமுற்றும் பார்த்தான். கண்ணுக்கெட் டிய தூரம் வரை சைக்கிள் கடையே தெரியவில்லை! மேற்கொண்டு யோசிக்காமல் சைக்கிளை வேகமாகத் தள் ளிக் கொண்டு போனான்.

அவன் கூட்டம் நடக்கும் மண்டபத்தை அடைந்த போது கூட்டம் ஆரம்பமாகி யிருந்தது. யாரோ பேசிய பேச்சுக்குக் கைதட்டுவது கேட்டது.

ரவி வேக வேகமாய் மண்டபத்திற் குள் நுழைய முற்பட்ட பொழுது ''தம்பி நில்லுங்கள்'' என்ற குரல் கேட்டது.

கூர்க்காதான் நின்றிருந்தான்.

''ஹால் நிரம்பியாச்சு.... இனிமே யாரும் நுழையக் கூடாது.''

''இல்லைங்க... எனக்காக ஒரு சீட் இருக்கு... அடையாள அட்டை கூட இங்க இருக்கு,'' என்று சட்டைப் பையைத் தடவிய ரவி அதிர்ந்தான். அடையாள அட்டையைக் கொண்டு வர மறந்திருந்தான்!

''ஓ... அந்தத் தம்பி நீதானா? இவ்வளவு நேரம் பார்த்துட்டு நீ வரலைன்னு வேற ஒரு பையனுக்கு அந்தச் சேரைக் கொடுத்துட்டாங்களே...!'' என்றான் கூர்க்கா.

பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கொண்டு வீட்டிற்குத் திரும்பி வந்தான் ரவி.

''என்ன? அதற்குள் கூட்டம் முடிஞ்சுடுத்தா?'' என்று கேட்டாள் அம்மா.


''சைக்கிள் பஞ்சர்... டயத்துக்குப் போக முடியல,'' என்றான் கண்களில் எட்டிப் பார்த்த கண்ணீருடன்.

''இதற்குக் காரணம் என்னன்னு யோசிச்சுப் பார்த்தியா?''

அழுகை நிறைந்த கண்களுடன் அம்மாவை ஏறிட்டான் ரவி.

''நீ நேரம் தவறிப் போனதுதான் காரணம்... சைக்கிள் காற்றை முன்னமே அடித்திருந்தால் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கலாம். படிப்பிலும் சரி, மற்ற விஷயங்களிலும் சரி, திட்டமிட்டு எல்லாவற்றையும் செய்து வைத்துக் கொண்டால் தான் வாழ்க்கையில் வெற்றி காண முடியும். இல்லாவிட்டால் எல்லாமே வெறும் போராட்டமாகவும் தோல்வியாகவும்தான் முடியும்,'' என்றாள் அம்மா.

''புரிந்தது அம்மா,' என்றான் ரவி. எதிர்கால வாழ்க்கையைப் பற்றிய ஒரு புது நம்பிக்கை அவன் முகத்தில் தெரிந்தது.





காலத்தை வென்றனர்!

- வெற்றியூர் சுப. திருஞானம்.

அறிவியல் வளர்ச்சியில் சந்திரனை
அமெரிக்க வீரர்கள் தொட்டனரே!
பெருமையில் நெஞ்சம் நிமிர்ந்திடவே
பெரியதோர் சாதனை படைத்தனரே!

அறுபத் தொன்பதாம் ஆண்டினிலே
அழகிய ஜூலை மாதத்திலே
இருவர் சென்றனர்
விண்வெளிக்கே
எட்டினர் வெற்றியை எளிதாக!





நீல்என்ப தொருவர் பெயராகும்
ஆல்டரின், காலின்ஸ்
மற்றிருவர்
மேகத்தைப் பிளந்து சென்றார்கள்
வெண்ணில வில்கால் பதித்தார்கள்

அப்பல்லோ எனும் ராக்கெட்டில்
அவர்கள் ஏறி வலம்வந்தார்
இப்புவி போற்றச் சந்திரமண்
எடுத்துக் கொண்டு திரும்பினரே!

அற்புதம் அவர்கள் செயலாகும்
யாரும் நினைத்தால் அரிதாகும்
கற்பனை செய்தால் வியப்பாகும்!
காலத்தை வென்றவர் பெயர் வாழும்!



மாம்பழம் தின்றாயா?

— 4 பேர் பேட்டி

மாம்பழ சீசன் வந்தாலே சிறுவர் - சிறுமியர்க்கு ஏக குஷிதான். அதுவும் கோடை விடுமுறையில் இந்த சீசனும் சேர்ந்து கொண்டு விடுவதால், ஒரே கொண்டாட்டம்தான்! மாம்பழம் தின்ற தங்களுடைய சுவையான அனுபவங்களை இங்கே நான்கு சிறுவர்கள் பகிர்ந்து கொள்கிறார்கள்.

ஆர். மோகன்: பம்பாய்ல அல்ஃபோன்ஸோ மாம்பழம் ரொம்ப ஃபேமஸ். மராட்டி மொழில அதை 'ஆபூஸ்' அப்படீம்பாங்க. சூப்பர் டேஸ்ட். செம ஸ்வீட்டா இருக்கும். மெட்ராஸிலே பங்கனபள்ளிதான் பாப்புலரா இருக்கு. எங்க அம்மா மெட்ராஸிலே இருந்த போது மல்கோவா மாம்பழம் சாப்பிடுவாங்களாம். ரொம்ப நல்லா இருக்கும்னு சொல்வாங்க. இப்ப, வெகேஷனுக்கு மெட்ராஸிலே இருக்கற என் பாட்டி வீட்டுக்கு வந்திருந்த போது அம்மாவுக்குப் பிடிக்குமேன்னு எங்க வீட்டுக்குப் பக்கத்திலெல்லாம் தேடித் தேடிப் பார்த்தோம் - கிடைக்கவே யில்லை. அம்மா, பாட்டி, மாமா, மாமியெல்லாம் அந்தப் பழத்தைப் பத்திச் சொல்லச் சொல்ல எனக்கும் அதைச் சாப்பிட்டுப் பார்க்கணும்னு ஆசையா இருந்தது. ஒருவழியா, பாரீஸ் கார்னர்ல கெடச்சதுன்னு என் மாமா வாங்கி வந்தார். அதைப் பார்த்ததுமே,



முழுசா சாப்பிட்டா வாய், கையெல்லாம் சாறு ஒழுகும்! - வி. வித்யா.

'ஐயே'ன்னு முகம் சுளிச்சேன். பச்சைப் பசேல்னு இருந்தது அதோட தோல். செமத்தியா புளிக்கப் போவுதுன்னு நினைச்சுக்கிட்டேன். அம்மாகிட்ட இரகசியமா, ''இந்த மல்கோவாவைக் காயா வாங்கி அரிசி டிரம்ல போட்டுப் பழுக்க வெச்சு, அப்புறமாத்தான் எடுத்து சாப்டுவீங்களா?''ன்னு கேட்டேன். ''இல்லியே, இப்பவே நறுக்கி சாப்பிட வேண்டியதுதானே? வாசனை



ஒரு பழத்தைச் சாப்பிட அரை மணியாக்க! அசோக விஸ்வநாதன்.

எப்படித் தூக்குது பார்'' என்றார் அம்மா. இதற்குள் பாட்டி அதை எடுத்து வெச்சுண்டு தோல் சீவ ஆரம் பிச்சாங்க. 'எல்லாரும் ஏமாறப் போறாங்க'ன்னு மனசுக்குள்ளவே சிரிச்சுக்கிட்டேன். ஆனா, பாட்டி துண்டம் துண்டமா கட் பண்ணி போட்டாங்களே பார்க்கலாம்! அடடா... என்ன மாதிர் பொன் கலர், என்ன வாசனை! ஒரு துண்டு எடுத்து வாயில் போட்டுக்கிட்டேன்... சூப்


முழுசா சாப்பிடறதுன்னாலே எனக்கு அலர்ஜிதான்! - வி. விஜயலட்சுமி

பர்! ஏ கிளாஸா இருந்தது. ருசியும் அல்ஃபோன்ஸோ மாதிரியே இருந் தது. மல்கோவா மாம்பழத்தை நான் இப் பத்தான் முதல் தடவையா சாப்பிட றேன்... அமர்க்களம்தான்! அந்த ருசி யை அனுபவிச்சாத்தான் தெரியும். பம் பாய்க்குப் போய் அண்ணன்கிட்ட சொல்லணும்; அவனுக்கும் நாலஞ்சு வாங்கிண்டு போகணும். மல்கோவா மல்கோவாதான்!

வி. விஜயலட்சுமி : எந்த சீசன்ல மாம் பழம் எப்பக் கிடைச்சாலும் நான் ரசிச்சுச் சாப்டுவேன். அதிலேயும் அப்ப டியே முழுசா கடிச்சு சாப்டத்தான் எனக்குப் பிடிக்கும். அப்பா திட்டு


சொத்தியா புளிக்கப் போவுதுன்னு நினைச்சேன்! - ஆர். மோகன்

வாங்க. 'முழுசா திங்காதே; ஒடம்புக்கு ஒத்துக்காது'ம்பார். அம்மாவுக்கும் அவர் சொல்றது சரின்னு பட்டாலும், என் ஆசையையும் நிறைவேத்தணும்னு நினைப்பாங்க. ஆனால் சின்ன சைஸ்ல மாம்பழம் கெடச்சா, முழுசா சாப் பிடச் சொல்லி வாங்கித் தருவாங்க. முதல் முறையா நீலம் மாம்பழத்தை, முழுசா, அப்படியே கடிச்சு சாப்ட போது, ரொம்ப மறக்க முடியாத அனுபவம் கிடைச்சது. மாம்பழம் என்னவோ மணமாகத்தான் இருந்தது. கடிச்சேன் பாருங்க, ஒரேயடியா கசந்து வழிந்தது! என்னன்னு பார்த்தா.. உள்ளே வண்டு இருந்தது! 'ஐயே, தூ..'ன்னு அருவருப்போட தூக்கி எறிஞ்சிட்டேன். 'நீலம்' வகை மாம் பழம் எல்லாத்திலேயும் அப்படித்தான் இருக்குமாம். அன்னியிலேர்ந்து முழுசா மாம்பழம் சாப்டறதுன் னாலேயே எனக்கு அலர்ஜிதான். அதோட முழுசா சாப்டும் போது கை பூரா மாம்பழச் சாறு ஒழுகி ஓடும். எதிரே இருந்து பார்க்கறதுக்கு அசிங்கமா இருக்கும். அதைவிட, கட் பண்ணி, துண்டம், துண்டமா எடுத்து ருசிச்சு சாப்பிடலாம். ஏதாச்சும் அழுகல், அடிபட்டு வெம்பிப் போனது, சொத்தை, பூச்சின்னு இருந்தா, விலக்கிட்டுச் சாப்பிடலாம். அது சரி, வெளிப்பக்கம் மாம்பழத்

துக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படுத்தாம நீலம் மாம்பழத்துக்குள்ள வண்டு எப்படி உள்ளே புகுந்துகிட்டுது, தெரியுமா?

அந்த வகை மாம் பூவிலே வண்டு வந்து உட்கார்ந்து முட்டையிடுமாம். பூ, பிஞ்சாகி, காயாகி, பழமா பெரிசாகும் போது, முட்டை உடைஞ்சு, மாங்கொட்டைக்குள்ளேயே வண்டாக வளருமாம். பழமானப்புறம் நல்லா, முழு அளவிலே, இறக்கையோட வண்டு வளர்ந்திருக்குமாம். அப்புறம் கொட்டையையும் பழத்தையும் துளைச்சுக்கிட்டு வெளியே பறந்து போயிடுமாம்.

அசோக் விஸ்வநாதன் : எங்க சொந்த ஊருக்குப் போயிருந்தோம். அங்கே எங்க வீட்டுக்குப் பின்னால தோட்டத்திலே மாமரங்கள் ஏராளமா உண்டு. ஒவ்வொன்னுலேயும் மாங்காயும், மாம்பழமுமா கொத்துக் கொத்தாய் காய்ச்சுத் தொங்கும். அதைப் பார்த்தாலே நாக்கிலே எச்சில் ஊறும். எட்டிப் பிடிக்கற சிரமம் கூட இல்லாம தலை உசரத்திலேயே மாங்காய் 'ஹலோ' சொல்லும். எங்க தாத்தா என்னைப் பார்த்துட்டு, என் ஆசையைத் தெரிஞ்சுக்கிட்டார். ''ஒனக்கு மாம் பழம் சாப்டணும்னு ஆசை இருந்தா, என்கிட்ட கேளு. நான் நல்லதா பறிச்சு உனக்கு நறுக்கித் தர்றேன், சரியா?'' அப்படீன்னார். ''வேணுன்னா கேட்கறேன்'' அப்படீன்னு ரொம்ப வீம்பா பதில் சொல்லிட்டேன். யாருக்கும் தெரியாம, நைஸா தோட்டம் பக்கம் போய் நாமே மாம்பழத்தைப் பறிச்சு சாப்ட எவ்ளோ த்ரில்லிங்கா இருக்கும்னு நான் எண்ணினேன். அதுக்காக நானே ஒரு பிளான் போட்டேன். ஒரு நாள் மத்யானம் எல்லாரும் அசதியா தூங்கிண்டிருந்தாங்க. அந்த நேரம் பார்த்து நான் தோட்டத்துக்குப் போனேன். பின்னால, கடைசி மரத்துக்கிட்ட போய், கைக்கெட்டற தூரத்தில இருந்த மாம்பழத்தைப் பறிச்சேன். இந்தக் கோடியில நான் இருக்கறதால யாருக்கும் தெரியாதுன்னு நினைச்சேன். பழத்தைப் பறிச்சப்புறம் ஏதோ சந்தடி கேட்டது. பயந்திட்டேன். பழத்தைச் சாப்பிடவே முடியாதபடி ஏதாவது தடங்கல். அரை மணி நேரமாச்சு, அந்த ஒரு மாம்பழத்தைச் சாப்பிட! வாயெல்லாம் துடைச்சுக்கிட்டு, வீட்டுக்குள்ள வந்தா - தாத்தா! ஊஞ்சல்ல முழிச்சுண்டு உட்கார்ந்துகிட்டு 'ஸ்விங்' பண்ணிக்கிட்டிருந்தார். என் உடம்போட நெளிசல், வளசல்களைப் பார்த்து, நான் பண்ண வேலையைக் கண்டுபிடிச்சுட்டாரோ! ''இங்க வாடா''ன்னார். கிட்ட போனேன். ''சிரி''ன்னார். எதுக்கு சிரிக்கச் சொல்றார்னு தெரியாம பல் காட்டினேன். ''தோட்டத்து கோடீல இருக்கற மரத்திலேருந்து பழம் பறிச்சுத் தின்னியான்னு கேட்டாரே பார்க்கலாம்! எப்படிக் கண்டுபிடிச்சாராம், தெரியுமா? என் பல் இடுக்கிலே மாம்பழ நார் ஒட்டி இருந்ததாம். அந்த மரத்துப் பழத்திலே நிறைய நார் இருக்குமாம். மாம்பழத்தைத் தின் னுட்டு வீசிப் போட்ட கொட்டைல முளைச்ச மரமாம் அது. அதனால அந்த மரத்து மாம்பழம் அப்படித்தான் இருக்குமாம்! அதுவே ஒட்டு மாமரம்னா மாம்பழம் ரொம்ப ருசியா இருக்குமாம். அந்த ஒரு மரம் தவிர மிச்சமெல்லாம் ஒட்டு மரந்தானாம்! ''நான்தான் தரேன்னு சொன்னேனில்லே? எதுக்கு நார் பழத்தையெல்லாம் சாப்பிடறே?''ன்னு கேட்ட தாத்தா, கூடை கூடையா நல்ல மாம் பழமா தந்தார். ரொம்ப ஜாலியா இருந்தது. மெட்ராஸுக்குக் கொண்டு வந்து என் ப்ரெண்ட்ஸுக்கெல்லாம் குடுத்தேன். அவங்க ரொம்ப ருசிச்சு ருசிச்சு சாப்டாங்க.

வி. வித்யா : எனக்கு மாம்பழத்தை ஜூஸா ச் சாப்பிடத்தான் பிடிக்கும். எப் படித்தான் மாம்பழத்தைக் கடிச்சு சாப் பிடறாங்களோன்னு நினைச்சுப்பேன். பல்லிடுக்கிலே மாம்பழ நார் மாட்டிக்கும்; கொட்டையோட முழுசா கடிச்சு சாப்டா, வாய், கையெல்லாம் சாறு ஒழுகும். அலம்பிக்கணும். அதுக்குப் பதிலா கடைல

பழமொழி என்ன கண்டுபிடி

போட்டி

கீழே 56 எழுத்துக்கள் இடம் மாற்றித் தரப்பட்டுள்ளன. இதற்குள் 4 பழமொழிகள் மறைந்திருக்கின்றன. இரண்டு நாயைப் பற்றியவை. 3வது நாயையும் செல்வத்தையும் பற்றியது. 4வது கழுதையைப் பற்றியது. நான்கையும் கண்டுபிடித்து எழுதி விட்டால் ஒரு எழுத்துக் கூட மிஞ்சாது. இந்தப் பழமொழிகளை அறியாத தம்பி தங்கைகளே இருக்க மாட்டார்கள். அவ்வளவு பிரபலமானவை. இவற்றைக் கண்டுபிடித்து எழுதியனுப்புங்கள். கூப்பனைச் சேர்த்து அனுப்ப மறக்க வேண்டாம். கண்டிப்பாகப் பரிசு உண்டு. பலரும் சரியாக எழுதி விட்டால் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

க நா கு ய் நி மா து
றை ய் மு கு தெ மா னை
தை யு க க் த் ற் ர
மூ த மி லை நா வா ர்
த் க் ன் நா க க் டி
கா ய் ற கி டி வி யு
து கு ப ற் ரை ண ம்
க் வா பூ ச கா ற ரி

பழமொழி என்ன கண்டுபிடி?

பெயர்: ____________________

வயது: ____________________

முகவரி: ____________________


பின்கோடு: ____________________

முடிவு தேதி: 15.7.91

விக்கற 'மாங்கோ ஜூஸ்' வாங்கி மடமடன்னு குடிச்சிடலாம். இது ரொம்ப ஈஸி. ஆனா, இந்த வெகேஷன்ல என் மனசு மாறிட்டுது. எங்க வீட்ல அப்பாவோ அம்மாவோ வெளில போனா நாலஞ்சு மாம்பழம் வாங்கிக்கிட்டு வருவாங்க. நாலு அஞ்சு ரூபா, ஆறு அஞ்சு ரூபான்னு சைஸ் வாரியா, விதம் விதமா வாங்கிட்டு வருவாங்க. கூடவே அட்டை 'டப்பா'விலே அடைச்ச மாம்பழ ஜூஸை எனக்காகத் தனியா வாங்கிக்கிட்டு வருவாங்க. நாலு மாம்பழத்து விலை, அந்த டப்பா ஜூஸின் வெலையா இருக்கும்! பழங்களை நறுக்கி வீட்ல எல்லாரும் சாப்டுவாங்க. அவங்க கடிச்சுக் கடிச்சு ருசிச்சுச் சாப்பிடறதைப் பார்த்த போது, நாமும் அப்படிச் சாப்பிட்டா என்னன்னு ஆசை வந்தது எனக்கும். முதல் முதலா ஒரே ஒரு துண்டத்தை எடுத்துச் சாப்டேன். துண்டத்தைக் கடிச்ச போதே ஜூஸ் வாய்க்குள்ளே இறங்கி ரொம்ப டேஸ்டா இருந்தது. அதோட இன்னொண்ணும் யோசிச்சுப் பார்த்தேன். ஜூஸ் டப்பாவோ, பாட்டிலோ வாங்கிச் சாப்பிட்டா, இப்படி மாம்பழத் துண்டங்களைப் பங்கு போட்டுச் சாப்பிடற த்ரில் இடைக்காது. அதோட புளிப்பு, இனிப்புன்னு வித்யாசமான ருசில ஒரே நேரத்துல மாம்பழங்களைச் சாப்பிடலாம். பாட்டில் ஜூஸ்னா ஒரே ஒரு ருசிதான். எங்கேயாவது வெளில போகும் போது மாம்பழம் சாப்பிடணும்னா அப்ப வேணுமானா ஜூஸ் வாங்கிச் சாப்டுக்கலாம். கையெல்லம் சாறு ஒழுகாது. நறுக்க வேண்டாம்; துடைச்சுக்க வேண்டாம். பிரச்னையே இல்லை. மாம்பழ சீசன் இல்லாத போதும் கூட ஜூஸ் கிடைக்கும்! அதனால், இனிமே சீசன் காலத்துல வீட்டுக்குள்ள இருக்கும் போது மாம்பழமா சாப்பிடறது; வெளில போனா, இல்லே. சீசன் இல்லாத சமயத்துல மட்டும் ஜூஸா குடிக்கறதுன்னு தீர்மானிச்சிட்டேன்!

படங்கள், பேட்டி : பிரபுசங்கர்

அட்டை வண்ணப்படம் : உத்ரா.



கூடும் ஓடும்

குழந்தை இலக்கிய முன்னோடிகள்

கி. வா. ஜ. என்று தமிழ் பேசும் மக்கள் அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட அமரர் கி. வா. ஜகந்நாதன் அவர்கள், தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதய்யர் அவர்களின் முதல் மாணவர். கலைமகள் பத்திரிகையின் ஆசிரியர். சங்க இலக்கியத்திற்கும் புதுமை இலக்கியத்திற்கும் பாலமாக இருந்த இந்த அறிஞர்பெருமகனார் குழந்தைகளுக்காகவும் வாசகன், ஜோதிமாமா என்ற பெயரில் எழுதியுள்ளது குழந்தை இலக்கியத்திற்குக் கிடைத்துள்ள பெருமை.

இங்கு வெளியாகும் சிறுகதை 'நல்ல பிள்ளையார்' என்ற அவரது சிறுவர் நூலில் இருந்து, அனுமதி பெற்று உங்களுக்காக வெளியிடப்படுகிறது.

ஒரு நத்தை தன் முதுகின்மேல் தன் கூட்டைத் தூக்கிக்கொண்டு மெல்ல ஊர்ந்து கொண்டிருந்தது. தலையில் இரண்டு கம்பிபோல இருந்த கொம்பை நீட்டிக் கொண்டு நிதானமாகப் போயிற்று. அப்போது ஓர் ஆமை அங்கே மெல்ல நகர்ந்து வந்தது. அதன்மேல் சிறிய பாறை போன்ற ஓடு இருந்தது. தன் முதுகிலிருந்து எடுக்க முடியாமல் ஒட்டிக் கொண்டிருந்த அந்த ஓட்டை விட்டுவிட்டுக் குசாலாக நடக்க முடியவில்லையே என்று ஆமை வருத்தப் பட்டது. அப்போது நத்தை கண்ணில் பட்டது. ''அடேயப்பா! இது தன் வீட்டையே தூக்கிக் கொண்டு நடக்கிறதே!'' என்று ஆச்சரியப் பட்டது.

அந்த நத்தையைப் பார்த்து, ''தம்பி, நீ ஏன் இந்த வீட்டைச் சுமந்துகொண்டு திரிகிறாய்?'' என்று ஆமை கேட்டது. நத்தைக்கும் தனியே இருக்க முடியவில்லையே என்ற வருத்தம் மனசுக்குள் இருந்தது. ''அண்ணா, இந்தக் கூட்டை என்னால் விட முடியாதே!'' என்று தன் துயரத்தை நத்தை சொல்லியது.

''அது சரி அண்ணா, நீ ஏன் இந்தக் கனமான ஓட்டைச் சுமக்கிறாய்?'' என்று அது ஆமையைக் கேட்டது.

''அது என் தலைவிதி. நீ கூட்டைச் சுமக்கிறாய்; நான் ஓட்டைச் சுமக்கிறேன். இதைச் சுமந்து கொண்டு வேகமாக நடக்கவே முடியவில்லை. எனக்கு நாலு கால் இருந்தாலும் மனம் போல வேகமாக எட்டி வைத்து நடப்பதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது'' என்றது ஆமை.

''நானும் அப்படித்தான் அண்ணா. என்னாலும் வேகமாகப் போக முடியவில்லை. உனக்காவது நாலு கால்கள் இருக்கின்றன. எனக்குக் காலே இல்லை. வயிற்றிலே ஊர்ந்து போகிறேன், இந்தச் சுமையையும் சுமந்து கொண்டு போகவேண்டியிருக் கிறது'' என்று நத்தையும் தன் துயரத்தைக் கூறியது.

அப்போது ஒரு மரவட்டை அங்கு வந்தது. அதை ஆமையும் நத்தையும் பார்த்தன. அந்த மரவட்டையின் தலை

அமரர் கி.வா.ஜகந்நாதன்

மத்தாப்புக் குச்சியின் நுனி போலச் சிவப்பாக இருந்தது. எத்தனை கால்கள்! அது நகரும் போது மிகவும் குட்டையான ரெயில் மெல்லப் போவது போல இருந்தது.

நத்தை, ''ஆமையண்ணா, அந்தப் பிராணியைப் பார். எவ்வளவு அழகாக இருக்கிறது!'' என்றது. ''அதன் மேலே ஒரு பாரமும் இல்லையே'' என்று ஆமை சொல்லி ஆச்சரியம் அடைந்தது.

''அதற்குக் கால்கள் எத்தனை பார் அண்ணா! அடேயப்பா! இத்தனை கால்களைக் கொண்டு அது வேகமாக ஓட முடியும் என்று நினைக்கிறேன்'' என்று நத்தை வியப்புடன் சொல்லியது.

அந்த இரண்டும் அந்த மரவட்டைக்கு அருகில் போயின. ''ஐயா, உங்கள் பேர் என்ன?'' என்று கேட்டது.

''என் பேர் மரவட்டை. இதென்ன, உங்கள் இரண்டு பேர் முதுகிலும் இவ்வளவு பெரிய சுமை?'' என்று பதிலுக்குக் கேட்டது.


''அதை ஏன் சொல்கிறீர்கள்? பிறக்கிறபோதே இந்தச் சுமையோடு தான் பிறந்தோம். நீங்கள் பாக்கியசாலி! உங்களுக்கு ஒரு சுமையும் இல்லை. உங்களுக்குக் கால்கள் நிறைய இருக்கின்றனவே! நீங்கள் வேகமாக ஓடு வீர்கள் அல்லவா?'' என்று ஆமை கேட்டது.

அவை இரண்டும் தன்னைக் கண்டு ஆச்சரியம் அடைந்து, மரியாதையுடன் பேசுவதைப் பார்த்து அந்த மரவட்டைக்குக் கர்வம் உண்டாயிற்று.

''உங்கள் பேர் என்ன?'' என்று அவற்றைப் பார்த்துக் கேட்டது.

''என் பேர் ஆமை'', ''என் பேர் நத்தை'' என்று இரண்டும் சொல்லின.

''நீங்கள் வேகமாக நடக்க முடியும்; எங்களால் முடியாது. உங்கள் வேகத்தைக் கொஞ்சம் காட்டுங்கள். எங்களால் வேகமாக ஓட முடியாவிட்டாலும் உங்கள் வேகத்தைக் கண்டாவது மகிழ்ச்சி அடைகிறோம்'' என்று இரண்டும் கூறின. மரவட்டையின் அழகைக் கண்டு பிரமிப்படைந்த அவற்றிற்கு அது வேகமாகப் போவதையும் கண்டு களிக்க வேண்டும் என்ற ஆசை



உண்டாயிற்று.

ஆனால் மரவட்டைக்கு வேகமாகப் போக முடியாது. அதுவும் மெதுவாகத்தான் ஊர்ந்து செல்லும் என்ற உண்மை ஆமைக்கும், நத்தைக்கும் தெரியாது. கால் நிறைய இருப்ப தனால் அது வேகமாக ஓடும் என்று நினைத்துக் கொண்டிருந்தன.

''எனக்கு வேகமாக நடக்க முடியாது'' என்று உண்மையைச் சொல்லித் தன் பெருமையைக் குறைத்துக் கொள்ள மரவட்டை விரும்பவில்லை. ''இப்போதுதான் வயிறு நிரம்பச் சாப்பிட்டேன்; ஆகையால் இப்போது வேகமாக நடக்க முடியாது'' என்று சொல்லி வைத்தது. ஆமையும் நத்தையும் அதையும் உண்மையென்று நம்பின.



அப்போது ஒரு காக்கை அங்கே தத்தித் தத்தி வந்தது. அது மிகவும் கூர்மையான மூக்கை உடையதாக இருந்தது. கீழே இருந்த புழு பூச்சிகளைக் கொத்தியது. அது இந்தப் பிராணிகளுக்குப் பக்கத்தில் வந்த போது, ஆமை அவசரமாகத் தன் தலையையும் காலையும் சுருக்கி ஓட்டுக்குள் மறைத்துக் கொண்டு, சிறிய கல்லைப் போல் கிடந்தது. நத்தையும் ஓட்டுக்குள் புகுந்து கொண்டு உருண்டைக் கல்லைப்போலக் கிடந்தது. மரவட்டையோ சுருண்டு படுத்துக் கொண்டது.

காக்கை அங்கே வந்து ஆமையைச் சிறிய கல் என்று எண்ணி அதை ஒன்றும் செய்ய வில்லை. அப்படியே நத்தையையும் ஒரு விதமான கல்லென்று நினைத்து அதன் பக்கத்திலும் போக வில்லை, ஆனால் மரவட்டையைக் கண்டதும் லபக்கென்று அதைக் கொத்திக் 'கொண்டு போய்விட்டது.



சிறிது நேரம் கழித்து ஒரு சந்தடியும் இல்லாமல் இருக்கவே, மெல்ல ஆமை தலையையும் கால்களையும் வெளியில் நீட்டி நகரத் தொடங்கியது. நத்தையும் கூட்டிலிருந்து வெளிப்பட்டது. ''ஆமை அண்ணா! அந்தக் காக்கையைக் கண்டு மிகவும் பயமாகப் போய்விட்டது. என் கூட்டுக்குள் ஒளிந்து கொண்டேன்'' என்றது நத்தை.

''ஆமாம் தம்பி, நான் கூடத்தான் பயந்து போனேன். என் ஓட்டுக்குள் மறைந்து கொண்டேன். அது சரி; அந்த மரவட்டை எங்கே? காணவில்லையே!'' என்றது.

''அந்த மரவட்டையைக் காக்கை கொத்திக் கொண்டு போய் விட்டதென்று தோன்றுகிறது. அது முனகுவது என் காதில் கேட்டது'' என்றது நத்தை.

''நல்ல வேளை! நாம் தப்பினோம்! இந்த ஓடும் கூடும் பெரிய சுமை என்று வருந்தினோமே; இவை இல்லாவிட்டால் நம்மை அந்தக் காக்கை என்ன பாடு படுத்தியிருக்குமோ? மரவட்டையின் கதிதான் நமக்கும் நேர்ந்திருக்கும்'' என்று சொல்லிப் பெருமூச்சு விட்டது ஆமை.

''ஆம் அண்ணா! நீ சரியாகச் சொன்னாய். இந்தப் பாதுகாப்பை நாம் சுமை என்று நொந்து கொண்டது தவறு'' என்று நத்தையும் சொல்லி ஆமையோடு சேர்ந்து மெல்ல நகர்ந்தது.



பிருந்தாவனம்

தேசியக் கொடியின் நீள அகலம்

★ நமது தேசியக் கொடியின் நீள, அகலங்கள் எந்த விகிதத்தில் இருக்க வேண்டும், தெரியுமா?

நீளம் 3 மடங்கும், அகலம் 2 மடங்கும் இருக்க வேண்டும்.

--செ. சரவணன், கல்லிடைக்குறிச்சி.



இங்கும் மொழி ஒரு பிரச்னை!

★ வாடிகன் நகரில் மொழி ஒரு பிரச்னை ஆகும். காரணம் இங்கு ஒரு குறிப்பிட்ட மொழியையே பயன்படுத்த வேண்டும்! உதாரணமாக, பேசுவதற்கு இத்தாலி மொழியையும், சடங்குகள் செய்வதற்கு லத்தீன் மொழியையும், வெளிநாடுகளுடன் கடிதத் தொடர்பு கொள்வதற்குப் பிரெஞ்சு மொழியையும்தான் பயன்படுத்த வேண்டும். இதேபோலச் சீனாவிலும் கூடப் பேசும் மொழியும், எழுதும் மெழியும் வேறு வேறாகும். இங்கு பேசப்படும் மொழிக்கு, 'யூ-யேன்' என்றும், எழுதும் மொழிக்கு, 'வென்-த்சு' என்றும் பெயர்!

-- சங்கமங்கலம் எஸ். மனோகரன்.

சுகமான "சிறைச்சாலை"

★ உலகிலேயே மிகச் சின்னஞ்சிறு சுதந்திர நாடு எது என்று கேட்டால் 'வாடிகன்' என்பீர்கள். அங்குள்ள சிறைச்சாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்று தெரியுமா? வெறும் இரண்டுதான். ஆனால், அந்தச் சிறையில் அடைப்பதற்குக் கைதிகள்தான் கிடைப்பதில்லை. வாடிகன் சிறையில் கைதியாக இருப்பதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அவ்வளவு சுகபோக வசதிகள் அங்கேயுண்டு. நல்ல சுகாதார வசதி, சுகமான படுக்கை, சுவையான உணவு வகை, விளையாட்டு மைதானம் என்றெல்லாம் பல வசதிகளைச் செய்து அளித்துள்ளார்கள். கடந்த 50 ஆண்டுக் காலத்தில் அச்சிறையில் அடைக்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை எத்தனை தெரியுமா? வெறும் பன்னிரண்டு பேர் மட்டுமே!

--கே. எல். குமணன், கல்லிடைக்குறிச்சி.

"சபாஷ்" பிறந்த கதை!

★ பாரசீக மன்னன் ஷா அப்பாஸ் என்பவர் இந்தியாவை ஆண்டு வந்த ஜஹாங்கீர் மன்னருடன் போர் புரிந்தார். அப்போரில் ஷா அப்பாஸ் தோல்வி அடைந்தார். பின் ஜஹாங்கிரிடம் அந்தப் போர் தனக்குத் தெரியாமலேயே தொடங்கப்பட்டது என்று

கூறினார். ஜஹாங்கீரும் பகையை மறந்து ஷா அப்பாஸைக் கட்டித் தழுவிச் சந்தோஷத்தில் 'ஷா அபாஸ்' என்று கூறினார். அதற்குப் பின் நடந்த ஒவ்வொரு மகிழ்ச்சியான நிகழ்ச்சியிலும் 'ஷா அபாஸ்' என்று கூறி வந்தார். அதுவே பிற்காலத்தில் 'சபாஷ்' ஆனது.

--ஆர். மூர்த்தி, கல்லிடைக்குறிச்சி.

வேட்பாளர் பொருள்


★ தேர்தலில் நிற்கும் வேட்பாளர் 'காண்டிடேட்' எனப்படுகிறார். இவ்வார்த்தை 'கேண்டியஸ்' என்ற ரோம் மொழிச் சொல்லிலிருந்து வந்தது. ரோம் மொழியில் இதற்கு வெள்ளை என்று அர்த்தம். ரோமாபுரியில் தேர்தலுக்கு நிற்பவர்கள் ஒரு வருடத்துக்கு முன்பிருந்தே வெள்ளை அங்கி அணிந்து கொள்ள வேண்டும் என்ற நியதி இருந்தது. அப்படி அணிந்து கொண்டவர்கள் கேண்டியஸ் எனப்பட்டனர். இதுவே ஆங்கிலத்தில் கேண்டிடேட் என்று ஆயிற்று.

--கே. எல். குமணன், கல்லிடைக்குறிச்சி.

விசிட்டிங் கார்டுக்கு ஒரு மியூசியம்

★ உலகில் விசிட்டிங் கார்டு மியூசியம் என்பது மேற்கு பெர்லினில் மட்டுமே உள்ளது. வோல்ப்காங்க் டான்ஸியர் என்பவரும் அவரது மனைவியும் நடத்தி வருகிறார்கள். டி. பி. நோய்க்கிருமிகளைக் கண்டுபிடித்த ராபர்ட் கோச், பிஸ்மார்க் போன்ற பெரிய அரசியல், நட்சத்திர நடிக நடிகையர் ஆகியோரின் விதம் விதமான விசிட்டிங் கார்டுகளை மட்டும் இந்த மியூசியத்தில் பார்க்கலாம். சில்க் துணிகளிலும் இரும்பு போன்ற உலோகங்களிலும் மரத்தினாலான வேலைப்பாடுடன் கூடியதும், பளிங்குக் கற்களால் செய்யப் பட்டதுமான பலவித விசிட்டிங் கார்டு களை இங்கு கண்டு களிக்கலாம்.

--எஸ். விஜயா சீனிவாசன்., திருச்சி - 14.



முதல் பெண் நாவலாசிரியர்!

★ முதன் முதலில் நாவல்களை எழுதிய பெண் நாவலாசிரியர் யார் தெரியுமா? பிரிட்டனைச் சேர்ந்த 'மிஸஸ் ஆப்ரா பென்' என்னும் பெண்மணிதான். இவர் எழுதிய முதல் நாவலின் பெயர் தி அன்பார்ச்சுனேட் பிரைட் என்பதுதான்.

--தா. ஷேக் ஹுசைன், செஞ்சி.



விரும்பியது கிடைத்தது!

★ அவ்வப்போது சமத்காரமாகப் பேசி அக்பரை மகிழ்வித்துப் பாராட்டைப் பெறுவது பீர்பல் வழக்கம். இதனைக் கண்ட ஏனைய அமைச்சர், பிரதானிகள் சிலருக்குப் பீர்பல் மீது பொறாமை உண்டாயிற்று. எப்படியாவது ஒரு முறை பீர்பலை மட்டம் தட்டியே தீர வேண்டும் என்று தீவிர முயற்சி செய்தனர்.

ஒருநாள் அவையில் முக்கிய அதிகாரி ஒருவர் பீர்பலைப் பார்த்துச் சிரித்தார். அதைப் பார்த்த அக்பர், ''என்ன திடீரென்று சிரிக்கிறீர்கள்?'' என்று கேட்டார். உடனே அதிகாரி, 'மன்னர் அவர்களே! தாங்கள் நல்ல நிறத்துடன் உள்ளீர். உங்களைச் சேர்ந்த அனைத்து அமைச்சர்களும் நல்ல நிறத்துடன் உள்ளனர். ஆனால், பீர்பலோ கறுப்பாக உள்ளார்'' என்று கூறிச் சிரித்தார்.

உடனே பீர்பல், ''கடவுள் அவரவருக்குத் தேவையானதைக் கொடுத்துள்ளார். நீங்கள் உங்களுக்குத் தேவையான நல்ல நிறத்தைக் கேட்டீர்கள். ஆனால், நானோ, நல்ல அறிவைக் கேட்டேன். அதனால் உங்களுக்கு நல்ல நிறம் கிடைத்தது. எனக்கு நல்ல அறிவு கிட்டியது'' என்றார் பீர்பல்.

பீர்பலின் மறுமொழியைக் கேட்ட அக்பர் மகிழ்ந்தார். ஆனால், எள்ளி நகையாடிய அதிகாரி வெட்கத்தில் தலைகுனிந்தார்.

-- எல். முத்து, ஊத்தங்கரை.

நேருவும் 28-ம்...



நேருவுக்கும் 28 என்ற எண்ணுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு!

நேரு பிறந்த போது அவருடைய தந்தை மோதிலால் நேருவுக்கு வயது 28.

நேருவின் 28 வது வயதில்தான் இந்திரா காந்தி பிறந்தார். நாட்டிற்கு முழுச் சுதந்திரம் வேண்டும் என்று நேதாஜியுடன் அறிக்கை வெளியிட்டது 1928 ல்! நேருவின் மனைவி கமலா காலமானது 1928 ம் ஆண்டு பிப்ரவரி 28 ந் தேதி. மனைவியை இழந்து நேரு தனியாக வாழ்ந்த ஆண்டுகள் 28.

பிறந்த மண்ணுடன் நேரு இரண்டறக் கலந்தது 1964 - மே 28 ந் தேதி.

என்ன அதிசயமான தொடர்புகள்!

நாகை. கே. ரவி. கோவை - 18,

பலே பலே கவிஞர்!



இரண்டாம் சார்லஸ் மன்னர் தம்மை ஒரு பெரிய கவிஞராக எண்ணிக் கொண்டிருந் தார். தம் மனத்தில் தோன்றியதையெல் லாம் எழுதி, அற்புதமான கவிதையைத் தாம் எழுதிவிட்டதாகக் கூறிப் பலரிடமும் காட்டித் தம் திறமையைத் தாமே வியந்து கொள்வார்.

ஒருநாள் மன்னர் சிறந்த கவிஞர் ஒருவரைத் தம்மிடம் அழைத்து, தாம் எழுதிய கவிதைகளைக் கொடுத்து, அவற்றைப் பற்றிக் கவிஞரின் கருத்தைக் கூறச் சொன்னார்.

கவிஞர் மன்னனின் கவிதைகளைப் படித்தார். அத்தனையும் ஒன்றுமில்லாத சரக்கு என்பதும் பேத்தல் என்பதும் தெரிந்தது! அரசரிடம் தம் கருத்தை அப்படியே கூறி விட முடியுமா? அதற்காக அவர் பொய் சொல்லவும் விரும்பவில்லை.

எனவே மன்னனிடம், ''பெருமை மிக்க மன்னர் அவர்கள் விரும்பினால் எந்தச் செயலைத் தான் திறமையாகச் செய்து முடிக்க முடியாது! தரக் குறைவான கவிதை களை எழுத வேண்டுமென்று முடிவு செய்து, அப்படியே எழுதியும் விட்டீர் கள்!'' என்று கூறித் தப்பித்துக் கொண்டார் அந்த பலே கவிஞர்!

தா.ஷேக் ஹுசேன். செஞ்சி - 2,

எருமை + இறங்கு துறை தெரியுமா?

ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகம் தேம்ஸ் நதியும் ஷேர்வெல் ஆறும் கலக்கும் இடத்திற்கு முன்பாக, ஆறுகளின் இடையே அமைந்திருக்கிறது. ஆற்றில் இறங்கி நடக்கும் துறைக்கு ஃபோர்ட் (FORD) என்று பெயர். அதனருகிலேயே எருமை (OX) இறங்கும் துறையும் இருந்ததால் இரண்டும் சேர்ந்து 'ஆக்ஸ்போர்ட்' என்ற பெயரைப் பெற்றது அப்பல்கலைக் கழகம்!


- ஆர். மகாதேவன், திருநெல்வேலி.

தெரியுமா?

மீமா, தவா, லாக்பா, குஸ்மார், புபு, பாவாஸ், பம்பா. இவையெல்லாம் என்ன தெரியுமா? நாம் ஞாயிறு, திங்கள் என்று கிழமைகளுக்குப் பெயர் வைத்திருப்பது போல் திபெத்தியர்கள் கிழமைகளுக்கு வைத்திருக்கும் பெயர்களாகும்.


தாயு செந்தில் குமார். திருச்சி - 4,

உலகின் முதல் பத்திரிகை!



★ லண்டனிலிருந்து 1622 ஆம் ஆண்டு மே மாதம் 23 -ஆம் தேதி வெளியான ''வீக்லி நியூஸ்'' என்ற பத்திரிகையே உலகின் முதல் பத்திரிகையாகும்.


-- அறுபாதி புகழேந்தி. மயிலாடுதுறை.


மணி திருந்தினான்
அமைப்பு 'ரே'
ஓவியம்
கருத்து: எஸ்.ஹரிஹரன் மன்னார்குடி.
மணியும் சாந்தியும் அண்ணன் தங்கைகள்.
மணி தங்கைக்கு எதுவும் தரமாட்டான்.
மாமா என்னைக் கூப்பிட்டுத் தானே சாக்லேட் தந்தார்? சாந்திக்கு எதுக்கு
மணியை மாற்ற முடியாது பெற்றோர் கலங்கினர்.
தங்கைக்கு கூடத் தர மாட்டேங்கறானே!


கோவில் வாசலில் மணியிடம் பாயசம் வாங்கிக் கொண்ட ஒரு நொண்டிச் சிறுவன் வாழ்த்தினான்.
பாயசமா? நீங்க நல்லா இருக்கணும்!
பாயசத்தை நொண்டிச் சிறுவன் தன் பார்வை இல்லாத தங்கைக்கு கொடுப்பதைக் கண்டான் மணி.
பாயசம் ரொம்ப இனிப்பா இருக்கு அண்ணா! நீயும் கொஞ்சம் குடி, ராங்க-னுக்கும் கொடு!
எல்லோரும் பாயசம் குடித்து விட்ட..
ரொம்ப நல்லா இருக்கு பாயசம்
?
வீடு திரும்பிய மணி பாயசம் குடித்துவிட்டு..
என்னம்மா இது! பாயசத்தில் இனிப்பே இல்லே!
ஆமாம் சீனி போட மறந்-துட்டேன் போலி-ருக்கு.
மணிக்கு வியப்பாக இருந்தது.
இதைப் போய் அவங்க-ளெல்லாம் புகழ்ந்-தாங்க ளே!


உடனே கிளம்பி வந்த மணி கோபுர வாசலில் இருந்த பிச்சைக்காரச் சிறுவன், சிறுமியிடம்..
பாயசத்தில் சீனியை போடலே! இதைப் போய் இனிப்பா இருக்குன்னு எல்லோரும் புகழ்றீங்களே!
பிச்சைக்காரச் சிறுவன் -
அப்படியா! இதற்குக் காரணம் கஞ்சியோ கூழோ மற்றவர்களுக்கும் தந்து நாமும் உண்பது தான்னு நினைக்கிறேன்!
அதிலென்ன சந்தேகம் அண்ணா! மற்றவர்களுக்குக் கொடுக்கிறோம் என்ற மன நிறைவே இனிப்புத் தானே.!
மணியின் மனம் மாறியது -
எத்தனை பரந்த மனம் இவர்களுக்கு! நாம் தங்கைக்குத் தர மறுப்பது எத்தனை கேவலம்!
அம்மாவிடம் மணி -
அத்தை லட்டுப் பாக்கெட்டை என்னிடம் தந்தால் எனக்கென்னு அர்த்தமா என்ன? எல்லோருக்கும் கொடும்மா!
மணி சொல்வதைக் கேட்ட தாய் வியந்தாள்.

மன உறுதி



சந்திரபுரி அமைச்சர் வேலப்பருக்கு வயதாகி விட்டதால், ஓய்வு பெற விரும்பி, மன்னரிடம் தெரிவித்தார்.

''இந்த நாட்டின் உயர்வுக்காகவும், மக்களின் நலனுக்காகவும் நீங்கள் எவ்வளவோ உழைத்திருக்கிறீர்கள். உங்களுக்கு ஓய்வு அவசியம். ஆனால் உங்களுக்குப் பதில் தகுந்த, திறமையான ஒருவரைத் தேர்ந்தெடுத்து அமர்த்தி விட்டுப் போங்கள்'' என்று வேண்டிக் கொண்டார் அரசர்.

அரசரின் வேண்டுகோள் நியாய மானதே என்பதை உணர்ந்த வேலப்பர், அன்று முதல் அதே சிந்தனையாக இருந்தார். எங்கு சென்றாலும், எதைச் செய்தாலும், யாரைச் சந்தித்தாலும் இதைப் பற்றியே எண்ணினார். கடைசியில் தேர்ப்பாகன் பூமிநாதனின் பிள்ளைகள் இருவர் அவரது மனதைக் கவர்ந்தனர். இருவருமே நல்ல அறிவாளிகள்; நாட்டுப்பற்று நிரம்பியவர்கள்; மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்கள். மூத்தவன் வேணுகோபால் வியாபாரம் செய்து வந்தான். இளையவன் நந்தகோபால் விவசாயம் செய்து வந்தான்.

ஜோசியரைப் போல மாறுவேடமணிந்து இருவரையும் தனித்தனியே சந்தித்தார் அமைச்சர். ''இன்னும் சில மாதங்களில் பரம ஏழையாகி விடப் போகிறாய்'' என்று இருவரிடமும் கூறி வைத்தார். இருவரிடமும் ஏற்படும் மாற்றங்களைக் கவனித்து வந்தார்.

வியாபாரியான வேணுகோபால் ஜோசியரின் வாக்கைக் கேட்டு அசந்து போனான். நாம் எப்படியும் ஏழையாகத்தானே போகிறோம், இருக்கும் வரை செல்வத்தை அனுபவிப்போம் என்று ஊதாரித்தனமாக மனம் போனபடி செலவழிக்கத் தொடங்கினான்.

ஆனால் இளையவன் நந்தகோபால் மனம் தளரவில்லை. அதிக நேரம் கூடுதலாக வயலில் உழைத்தான். பசுக்களை வாங்கிப் பால் வியாபாரம் செய்து வருவாயைப் பெருக்கலானான். அமைச்சரே அவனைப் பார்த்துக் கேட்டார்.

''வரும் மாதங்களில் நான் பரம ஏழையாகி விடுவேனாம். அந்தக் கஷ்ட காலத்தில் உதவக்கூடும் என்பதற்காகத்தான் இப்படி அதிக நேரம் உழைக்கிறேன். கூடுதல் வருவாய்க்கு ஏற்பாடு செய்கிறேன்'' என்றான் நந்தகோபால்.

''கஷ்டத்தை எதிர்த்துப் போராடவும், அதை வெல்லவும் திட்டம் போட்டு உழைக்கத் தயாராக இருக்கும் நந்தகோபாலே வருமுன் காப்பவன். அமைச்சராகும் தகுதி பெற்றவன். கஷ்டம் வருவதை எண்ணிக் கலங்கி நம்பிக்கை இழந்து தன் போக்கையே மாற்றிக் கொண்ட மன உறுதி இல்லாத வேணுகோபாலால் மக்களுக்கு உதவ முடியாது'' என்று அரசரிடம் தெரிவித்தார் அமைச்சர்.

நந்தகோபால் அமைச்சரானதைச் சொல்ல வேண்டுமா?

ச. கல்யாண சுந்தர், ஆலங்காயம் அஞ்சல்.

எறும்போ எறும்பு!



‘நறுக்க்க்!.....’

‘அஆ!....’ என்று அலறிய பூஞ்சோலை திகிலுடன் நாற்காலியைக் குனிந்து கவனித்தான்.

சுறு சுறுப்பில் உலகப் புகழ் பெற்ற எறும்பு இனத்தைச் சேர்ந்த கன்னங்கரிய, சின்னஞ் சிறிய கட்டெறும்பு ஒன்று காணப்பட்டது. அதுதான் அவனைக் கடித்திருக்கிறது!

புத்தக அறையின் வாசலில் வந்து நின்ற அப்பா ‘என்னடா கூச்சல்...?’ என்று வினவினார்.

‘இல்லேப்பா... ஒரு கட்டெறும்பு நறுக்கெனக் கடித்....’ - கடிபட்ட கடுப்புடன், சுவரில், ஜன்னல் நோக்கி ஏறிக் கொண்டிருக்கிற கட்டெறும்பை நோக்கி ஆத்திரத்துடன் தாவினான், பூஞ்சோலை.

‘டேய்!....’ என்று அதட்டியபடியே, அறைக்குள் வந்தார் அப்பா.

அந்தக் கட்டெறும்பு, நறுக்கெனக் கடித்ததோ....? வெடுக்கெனப் பிடுங்கியதோ....? நீ நாற்காலியில் உட்கார்ந்திருக்கையில், அந்த எறும்பு நாற்காலிக்கு அடியில், உனது தொடைக்கு அருகில் ஊர்ந்து போயிருக்கிறது. அதைக் கவனிக்காமல், நீ காலை அசைத்திருப்பாய் பாவம், அந்த எறும்பு, உன் தொடைக்குக் கீழே சிக்கி நசுங்கித் தவித்திருக்கிறது. வேதனை பொறுக்காமல், நறுக்கெனக் கடித்திருக்கிறது. அதற்காகப் பழிக்குப் பழி வாங்கப் பதைக்கிறாயே, நியாயமா....?’

நாற்காலியில் அமர்ந்த அப்பா, நயமாகக் கூறினார்: ‘பூஞ்சோலை.... இந்தப் பூமியில் வாழும் ஆயிரக் கணக்கான விலங்குகளைவிட இலட்சக் கணக்கான பறவைகளைவிட, கோடிக் கணக்கான மனிதர்களைவிடப் பல கோடி கோடிக் கணக்காகப் பல்கிப் பெருகி வாழும் பூச்சி இனங்களுள் அறிவில் சிறந்தது, எறும்பு!....’

‘‘அப்படியா!’’ என வியந்தான், பூஞ்சோலை.

‘ப்பூ - என்று ஊதினால் ஒன்றரை மீட்டர் தூரம் துரும்பாய்ப் பறக்கிற கட்டெறும்புக்கு, அத்தனை அறிவாற்றல் உண்டாப்பா...?’ என்று ஆவலுடன் கேட்டான்.

‘‘பிற உயிர்களின் அறிவாற்றலை விட மிகமிகச் சிறப்பான, இயல்பான அறிவாற்றலைப் பெற்றிருக்கிற பெருமை உடையது, கட்டெறும்பு!....’ என்று சொல்லிய அப்பா, நொடி நேரம் தயங்கிய பிறகு, தொடர்ந்தார்.


‘‘சிலந்தி, வெட்டுக் கிளி, முயல் இவைகளைவிட ஐயாயிரம், ஆறாயிரம் வகை இனங்களாகப் பெருகி வாழும் எறும்பின் அறிவாற்றலைப் பற்றிப் பல அறிஞர்கள் அலசி ஆராய்ந்து, ஏராளமான புத்தகங்களை எழுதி இருக்கிறார்கள். ஏறத் தாழ ஆறடி உயரமுள்ள மனிதரின் அறிவாற்றலை விட, அரை அங்குல நீளமுள்ள கட்டெறும்பின் அறிவாற்றல் எவ்வகையிலும் குறைந்தது அல்ல!’’

அறையின் வாசலில் வந்து, வாழை இலையும் கையுமாக நின்று பார்த்தாள் அம்மா.

‘நாங்கள்.... சற்று நேரம் கழித்துச் சாப்பிடுவோம்....’ என்று சொல்லி அம்மாவை அனுப்பிவிட்டு, ‘ம்... நீங்க சொல்லுங்கப்பா....’ எனத் தந்தையைத் தூண்டினான், பூஞ்சோலை.

அப்பா, புன்சிரிப்புடன் தொடங்கினார்: ‘ஒரு விளக்கத்துக்காகக் கேட்கிறேன் - இங்கிருந்து, நீ மயிலாப்பூருக்கு

தங்கமணி



ஒரு காரியமாகப் போகிறாய். உச்சந் தலையையும், கால் பாதங்களையும் சுட்டுப் பொசுக்குகிற கொடிய வெய்யில் நேரம். என்னவோ கண்டன நாள், வேலை நிறுத்தம் என்பதனால் பஸ், ரிக்ஷா எதுவுமே ஓடவில்லை. இத்தகைய நிலையில், நீ என்ன செய்வாய்...?'

பூஞ்சோலை, குறுஞ் சிரிப்புடன் சொன்னான்: 'வெய்யிலில் கருகி வதை யாமல், வந்த காரியத்தை நாளைக்குக் கவனித்துக் கொள்ளலாம் என்று வீட்டுக்குத் திரும்பி விடுவேன்....'

'ஆனால்..... கட்டெறும்பானால் திரும்பிப் போகாது!....'

'அப்படியா!....'

'க்கும், அப்படித்தான்!.... ஒரு கட்டெறும்பு, ஒரு காரியமாக, ஓர் இடத்தை நோக்கிப் புறப்பட்டு விட்டது என்றால், போகிற வழியில் ஆயிரம் தடைகள் ஏற்பட்டாலும், தடை களைக் கடந்து, போக வேண்டிய இடத்தை நோக்கிப் போய்க் கொண்டே யிருக்கும்! போகிற பாதையில், ஆற்று வெள்ளம் குறுக்கிட்டுப் பொங்கிப் புரண்டு வந்தாலுங்கூட. வெள்ளத்தில் சிக்கிய ஒட்டகமும், பன்றியும் செத்துப் போகும். ஏனெனில், அவைகளுக்கு நீந்தத் தெரியாது! ஆறறிவு படைத்த மனிதருள் பெரும்பாலோருக்கும் அதே கதிதான்! ஆனால், கட்டெறும்புக்கு நீந்தத் தெரியும்! மல்லார்ந்த படியும் நீந்தும். கவிழ்ந்தவாறும் நீந்தும். குளிர்ந்த நீரானால், மெதுவாக நீந்தும். வெப்பமான நீரில் வேகமாக நீந்தும் என்றாலும்.... வெள்ளம் வரப் போவ தையும், தீப்பற்றிக் கொள்ளுவதையும் முன்னதாகவே தெரிந்து கொண்டு, ஆபத்து உண்டாகும் அந்த இடத்தை வெகு வேகமாய்க் கடந்து, போக வேண்டிய இடத்தை நோக்கிச் சர சரவெனத் துரிதமாகச் செல்லும், கட்டெறும்பு!....' என்றார், அப்பா.

"அதிசயமாயிருக்கிறதே!.... தம்மத்தூண்டான கட்டெறும்பு, வெள்ளம் வரப் போவதையும், தீப் பிடிக்கப் போவதையும் முன்னதாகவே எப்படித் தெரிந்து கொள்ளுகிறது...?" என்று வியப்பும், வேட்கையுமாய்க் கேட்டான், பூஞ்சோலை.

பூஞ்சோலையின் கேள்விக்கு, அப்பா விடை அளித்தார்: காடுகளிலும், மலைகளிலும் வாழும் மிருகங்களும்,

மற்ற பிராணிகளும் பூகம்பம் உண்டாகப் போவதையும், மழை பெய்யப் போவதையும் முன்னதாகவே உணர்ந்து, பாதுகாப்பான இடத்தைத் தேடி நாடி ஓடிப் பதுங்கி விடுகின்றன. இதற்கான அறிவாற்றல், மனிதனைத் தவிர பிற உயிர்களுள் பலவற்றுக்கும் இயல்பாகவே அமைந்துள்ளது! கட்டெறும்புக்கும் அப்படித்தான்! மழைக் காலம் தொடங்குவதற்கு முன்னயே மேட்டுப் பாங்கான இடங்களிலும், மரப் பொந்துகளிலும் குடியேறிவிடும் கட்டெறும்பு, வெயில், பனிக் காலங்களில் பூமிக்கு அடியில் புற்று அமைத்துக் கொண்டு கதகதப் பாக வாழும்'! பூஞ்சோலை வியப்பு மாறாது தந்தையைக் கவ னித்தான்.

''பூமியைச் சுற்றி வரும் ராக்கெட்டுகளில், விசிறி மாதிரி ஒரு கருவி, வெளியே நீட்டிக் கொண்டிருக்கும். அது, ஆகாச வெளியின் தட்ப, வெப்ப நிலைகளையும், ஒலி ஒளி அலைகளையும் உள் வாங்கி ராக்கெட்டுக்கு வழங்கும். விசிறி போன்ற அந்த அற்புதக் கருவி, கெட்டுப் போயிற்று என்றால், ராக்கெட் என்பது பார்வை இல்லாத மனிதனைப் போல்தான். இந்த மாதிரியே - தூரதரிசினி - தொலைக் காட்சி - டெலிவிஷன் என்கிறோமே, அந்தப் பெட்டியுள்ள வீடுகளுக்கு மேலே, வளைவும் நெளிவுமான ஒரு கம்பிக் கருவியை அமைத்திருப்பார்கள். அந்தக்....''

அப்பாவின் பேச்சை நறுக்கென மறித்துக் கூவினான், பூஞ்சோலை: 'நம்ம வீட்டு மாடியில கூட அந்த ஆன்ட்டெனாவை அமைத்திருக்கிறோமே!......'

''அதுவேதான் அந்த அற்புத ஆன்ட்டெனா, கட்டெறும்புக்கும் உண்டு! ஒவ்வொரு கட்டெறும்பின் மண்டையிலும், மயிர் இழை போன்ற இரண்டு ஆன்ட்டெனாக்கள் அமைந்திருக்கும். கட்டெறும்பு, இந்த ஆன்ட்டெனாவின் உதவியால், வாசனை, நாற்றம், ஒலி ஒளி அதிர்வுகள், தட்ப வெப்ப நிலை, அழுத்தம், அழுத்தமற்ற நிலை, வேகம், ஆகிய நுட்பங்கள் யாவற்றையும் வெகு நுண்மையாக உணர்ந்து கொள்ளுகின்றன. கட்டெறும்புகள் வாழும் புற்றுக்குள், ஓர் அன்னியக் கட்டெறும்பு புகுந்துவிட்டால், அதைப் பிற எறும்புகள் அடையாளம் கண்டு பிடித்து விடுகின்றன!

''ஒரு தேசத்துக்குள், மற்றொரு அன்னியத் தேசத்தின் ஒற்றன் புகுந்து விட்டால், அவனை அடையாளம் கண்டுகொள்ள முடியாமல், மனிதர்கள் திணறுகிறார்கள். ஆனால், கட்டெறும்புகளிடம் இத்தகைய உளவு வேலை யெதுவும் பலிக்காது! தங்களது புற்றுக்குள் நுழைத்துவிட்ட புதுக் கட்டெறும்பைத் தங்களது ஆன்ட்டெனாவில் தொட்டு முகர்ந்து, அந்தப் பூச்சி அன்னியமானது என்பதைச் சட்டெனப் புரிந்து கொள்ளுகின்றன. குட்டு வெளிப்பட்ட நொடியே, எல்லாக் கட்டெறும்புகளும் சேர்ந்து, அந்த அன்னியக் கட்டெறும்பைக் கடித்துக் குதறிச் சாகடித்து விடுகின்றன!

எதிர் அறையிலுள்ள சுவர்க் கடிகாரத்தின் ஒற்றைச் சப்தத்தைக் கேட்டதும், சற்றுப் பரபரப்புடன் எழுந்தார் அப்பா.

'பத்துப் பதினைந்து நிமிஷங்கள் லேட் ஆனாலும் பரவாயில்லைப்பா.... சொல்லுங்கள்...' எனப் பிரியத்துடன் கெஞ்சினான், பூஞ்சோலை.

அப்பா, கூறினார்: 'யானை, சிங்கம், புலி, சிறுத்தை முதலிய விலங்குகள் கும்பல் கும்பலாக வாழ்கின்றன. ஆடு, மாடு, மான், குதிரை முதலியவைகள் மந்தை மந்தையாக வாழ்கின்றன. பறவையினங்கள் கூட்டங் கூட்டமாக வாழ்கின்றன. ஆனால், இவைகளுக்குள் ஒற்றுமையும், ஒழுங்கும் உண்டு



★ நியூயார்க் நகரத்தில் அழுகைப் போட்டி நடந்தது. இதில் நிறையப் பேர் கலந்து கொண்டனர். அவர்களில் ஒருவரான வென் சான்டஸ்கி என்பவர் 31/2 மணி நேரம் விடாமல் அழுதார். அவர் வடித்த கண்ணீரின் அளவு 1/2 லிட்டர்! வென் சான்டஸ்கியே முதல் பரிசைத் தட்டிச் சென்றார் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

-- ஜ. சலீம், வந்தவாசி.

எனச் சொல்வதற்கில்லை. மனிதர்களுக்குள்ளும் - குறிப்பாக, இந்திய நாட்டு ஜனங்களுக்குள்ளுங் கூட - ஒரு சமூக அமைப்பும், ஒழுங்கும் உண்டு என்றாலும் கூட, அவர்களுக்குள் - இந்திய மக்களுக்குள் - ஒற்றுமை கால் பாகம் என்றால், வேற்றுமைகள் முக்கால் பாகமாக அமைந்துள்ளது. ஆனால்.... சின்னஞ் சிறிய கட்டெறும்புகள், ஒற்றுமையும் ஒழுங்கும் மிகுந்த, கட்டுப்பாடும் கடமையும் நிறைந்த ஒரு சமூகமாக அமைந்து, மற்ற உயிரினங்களைவிட மேலான வாழ்வை வாழ்ந்து அனுபவிக்கின்றன!....''

''ஜாதிகள் என்பவை, இந்திய மக்களுக்குள் உயர்வு-தாழ்வு என்கிற கேவலமான உணர்வுகளைப் பரப்பி வைத்துள்ளன. கட்டெறும்பு சமூகத்திலும் இந்த ஜாதி அமைப்பு உண்டு. தொழிலாளி எறும்பு, ராணுவ எறும்பு, ஒற்றர் எறும்பு எனத் தொழிலுக்கு ஒரு ஜாதி உண்டு. என்றாலும், தத்தம் ஜாதியைச் சுட்டிக் காட்டிக் கொள்ளுகிற பேதைமை கட்டெறும்பு சமூகத்தில் கிடையவே கிடையாது! எல்லா ஜாதி எறும்புகளும் தங்களது எறும்பு சமூகத்தின் பொதுநல வாழ்வுக்காக உழைக்கின்றன. இரவும், பகலும் ஓயாமல் உழைத்துச் சேமிக்கிற உணவுப் பொருள்களை எல்லா எறும்புகளும் பகிர்ந்து உண்கின்றன. பல மனிதர்களின் உழைப்பின் பலனைச் சில மனிதர்கள் வஞ்சித்துச் சுரண்டிச் சுகம் காணும் கொடுமை, எறும்பு சமூகத்தில் இல்லவே இல்லை!.....'

'எறும்பு சமூகத்தில், அடிமை எறும்பே கிடையாதா...?' என்று என்னவோ ஓர் ஆதங்கத்துடன் கேட்டான், பூஞ்சோலை.

'உண்டு!.... ஆனால் எந்த எறும்பும் மற்றோர் எறும்புக்கு அடிமை வேலை செய்வது இல்லை. ஒற்றுமையும், கட்டுப்பாடும் மிகுந்த கட்டெறும்பு சமூகத்துக்கு அன்னியமான ஒரு சில கட்டெறும்புகள், வேறொரு பூச்சிக்கு அடிமையாக வாழ்வது உண்டு. அதாவது... எறும்புப் பசு என்றும், அழுகுணி என்றும் சொல்லப்படும் ஒரு பூச்சியின் அடி வயிற்றில் தேன் மாதிரி, பால் மாதிரி ஒரு வகையான இனிப்புத் திரவம் சுரக்கும். மயக்கந் தரும் மது என்பதில் ஆசை மிகுந்த புத்திகெட்ட சில மனிதர்கள் தங்களது அருமையான வாழ்வை அசிங்கப்படுத்திக் கொள்ளுகிற மாதிரி, ஒரு சில கட்டெறும்புகள் எறும்புப் பசுவின் பாலைக் குடிக்கிற ஆசையினால் அந்த அழுகுணிப் பூச்சிக்குத் தேவையான உதவிகளைச் செய்தவாறு, கொத்தடிமைகளாக வாழ்கின்றன "- என்று கூறியபடியே நாற்காலியைவிட்டு எழுந்தார், அப்பா.

பூஞ்சோலை, கடைசி கடைசியாக ஒரு கேள்வியைச் சுருக்காகக் கேட்டான்: 'அப்பா... சில கட்டெறும்புகளுக்கு இறக்கை முளைத்துப் பறப்பதைப் பார்த்திருக் கிறேன்.அவை என்ன ஜாதி எறும்புகள்...?'


'தாத்தா ஜாதி எறும்புகள்!....'

'என்னே...?'

'ஆமாம்... கட்டெறும்புகளுக்கு வயதாகி விட்டால், இறக்கை முளைக்கும்!....' என்றவாறே அலுவலகத்திற்குக் கிளம்பினார் அப்பா.

ஏமாந்த சிங்கம்!

பொன்னப்பர் ஒரு கணம் யோசித்தார். ''சாப்பிடு முன் இறைவனை வேண்டிக் கொள்வதுதான் முறை. நானும் இறக்கு முன் வேண்ட விரும்புகிறேன்'' என்றார்.



சிங்கம் சம்மதித்தது. இருவரும் கண்களை மூடிக் கொண்டனர். பொன்னப்பர் ஒரே ஓட்டமாக ஓடி, சிங்கம் அடைபட்டிருந்த கூண்டிற்குள் சென்று கதவுகளை மூடிக் கொண்டு விட்டார். கோபம் கொண்ட சிங்கம் பெரிதாகக் கர்ஜிக்கத் தொடங்கியது. சப்தம் கேட்டவுடன் சிங்கத்திற்காகப் பொறி வைத்தவர்கள் ஓடி வந்தனர். சிங்கம் காட்டுக்குள் ஓடியது. பொன்னப்பர் தப்பினார்!

– ஆர். எம். மதுமித்ரா.
கதையை முடியுங்கள் போட்டியில்
3 வது பரிசு பெற்ற கதை

கேள்விகள் சொல்லட்டும்

✱ கி. சிவகாமி, கி. மல்லிகா, குடந்தை.

சிறுவர் சிறுமியர் பாடும் வகையில் குழந்தைக் கவிஞர் ஏதாவது கீர்த்தனைகள் எழுதியிருக்கிறாரா? வேறு யாராவது எழுதியிருக்கிறார்களா?

கர்நாடக இசையாக: ராகமாகப் பாடக் கூடிய வகையில் இருக்கிறதா என்றுதானே கேட்கிறீர்கள்? இலங்கை வானொலி 20 ஆண்டுகளுக்கு முன் பாரதியார் கவிமணி, பெரியசாமித் தூரன், அழ. வள்ளியப்பா, ர. அய்யாசாமி, பூவண்ணன், போன்றோர்கள் எழுதிய சிறுவர்களுக் கான பாடல்களை ஸ்வரப்படுத்தி இசை வகுப்பும் நடத்தியுள்ளது. இவர்களது பாடல்களை நெட்டாலில் உள்ள இந்து வைதீக சபை என்ற அமைப்பு எல். பி. கிராமபோன் பளேட்டுகளாக வெளியிட்டுள்ளது. இதில் பல பிரபல பாடகர்கள் பாடி யிருக்கிறார்கள்.

✱ இல. பாலகுமார், குமாரவாடி.

சிறுவர்களுக்கான முழு நேர நாடகம் ஏதாவது மேடையேறியுள்ளதா?

நாடகத் துறையில் புகழ் பெற்ற டி. கே. எஸ். சகோதரர்கள் கவிஞர் திருச்சி பாரதனின் 'பலாப்பழம்,' 'அப்பாவின் ஆசை' ஆகிய இரு நாடகங்களை முழு நேர மேடை நாடகங்களாக நடித்துள்ளனர். பாரதனுக்குக் 'கலைமாமணி'ப் பட்டத்தை வாங்கித் தந்தவை இவையே. பூவண்ணனின் பல நாடகங்கள் மேடையேறி நடிக்கப் பட்டுள்ளன; இன்னமும் நடிக்கப்பட்டு வருகின்றன. கூத்தபிரானின் 'மூவர்ணக் கொடி உயர்த்துவோம்' நாடகம் பல முறை மேடையேற்றப்பட்டுள்ளது. உங்கள் கோகுலத்தின் கௌரவ ஆசிரியர் எழுதியுள்ள ஒரு நாடகம் 83 முறை நடிக்கப்பட்டுள்ளது.

✱ வி. சாமுவேல் சபாபதி, மதுரை.

4 வது தமிழ்ச்சங்கம் எங்கு தொடங்கப்பட்டது? மதுரையில்தானே?

மதுரையில் இருந்து கொண்டே இந்தக் கேள்வியைக் கேட்கிறாயே! உங்கள் ஊரில்தான் 14.9.1901 அன்று சேதுபதி உயர்நிலைப் பள்ளியில்தான் துவங்கப்பட்டது. இதற்குக் காரணமாக இருந்தவர்கள் பாண்டித்துரைத் தேவரும், அவரது மூத்த சகோதரர் இராமநாதபுரம் பாஸ்கர சேதுபதியும் ஆவார்கள்.

✱ து. பன்னீர் செல்வம், நாகர் கோவில்.

தாதா சாகிப் விருது என்பது என்ன?

திரைப்படத் துறையில் சிறந்த தொண்டாற்றியவர்களுக்கு இந்திய அரசால் வழங்கப்படும் விருது இது. இந்தியத் திரைப்படத் தொழிலுக்கு முன்னோடியாக விளங்கிய தாதா சாகிப் பால்கேயின் பெயரால் இது வழங்கப் படுகிறது. சுருக்கமாக பால்கே அவார்டு என்கிறார்கள். இவ்வாண்டு இதைப் பெற்றுள்ளவர் நடிகர் ஏ. நாகேஸ்வர ராவ்.

✱ ல. கருணாகரன், வாணியம்பாடி.

கொசு கடித்தால் 'சுரீ' என்று வலிக்கிறதே! அவ்வளவு வலிமை யா னதா அதன் கொடுக்கு/வாய்? (STINGER)

இயற்கையின் அதிசயம் இதுதான். ஒரு நெல்லின் பாதி கனம் கூட இல்லாத கொசு, மனிதனைக் கடித்தால் வலிக்கிறது! இந்தக் கொடுக்கின் எடை எவ்வளவு தெரியுமா? ஒரு அவுன்சில் 0.000,006 பாகமே!

✱ கொ. கண்ணப்பன், மதுரை – 2.

இந்தியக் குழந்தை எழுத்தாளர்களுள் உலகப் புகழ் பெற்றவர்கள் யாராவது இருக்கிறார்களா?

உலகப் புகழ்பெற்ற டைரக்டர் சதயஜித்ரே ஒரு குழந்தை எழுத்தா

சேரநம்பி

ளர். அதோடு 'சந்தேஷ்' என்ற சிறுவர் பத்திரிகையின் ஆசிரியரும் கூட. வங்காளப் பத்திரிகையான இதில்தான் தொடக்க காலத்தில் தாகூர், ஜே. சி. போஸ் போன்றவர்கள் எழுதியிருக்கிறார்கள். முல்கராஜ் ஆனந்த் (இந்தி), இராஜாஜி, ஆர். கே. நாராயண் போன்றவர்களும் உலகப் புகழ்பெற்ற குழந்தை எழுத்தாளர்கள்தானே ?

✱ ஆ. சுமதி, சேலம் - 2.

வலமிருந்து இடமாக எழுதுவது போல், மேலிருந்து கீழாக எழுது முறை கொண்ட மொழி ஏதாவது இருக்கிறதா?

சீன, ஜப்பானிய மொழிகள் மேலிருந்து கீழாக எழுதப்படுகின்றனவே! றனவே!

✱ சு. பொன்னடியான். குகைசேலம்.

தேர்தலுக்கும் குழந்தைகளுக்கும் தொடர்பு உண்டா?

இன்றைக்கு இல்லை. ஆனால் சோழர் காலத்தில் ஊராட்சித் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் 'குடவோலை' முறையில், குழந்தைகளுக்குத்தான் முடிவு செய்யும் உரிமை இருந்திருக்கிறது. அவர்கள்தான் குடத்தில் இடப்பட்டுள்ள பெயர்களில் இருந்து ஒன்றைத் தேர்ந்தெடுப்பார்கள்.

✱ த. குணசீலன், கடலூர் - 4.

எல்லா உயிரினங்களின் இரத்தமும் சிவப்பாகத்தான் இருக்குமா? பச்சை இரத்தம் உள்ள உயிரினங்கள் உண்மையாகவே உண்டா?

இது 'கேட்கட்டுமா டாக்டர்?' பகுதிக்குப் போக வேண்டிய கேள்வி. ஆனாலும் அறிந்தவரை கூறுகிறேன். பச்சை இரத்தம் என்பதெல்லாம் பசுமையான இரத்தம் என்ற அர்த்தத்தில்தான் குறிப்பிடப்படுகிறது. இரத்தம் சிவப்பாக இல்லாத ஓர் உயிரினம் வெட்டுக்கிளிதான். இதன் இரத்தம் வெள்ளை.

✱ மலர்விழி, திருவாரூர்.

'சிக்நேச்சர் மியூசிக்' என்கிறார்களே, அப்படியென்றால் என்ன?

வானொலியில் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியை ஒலிபரப்பு முன் ஒரு குறிப்பிட்ட இசையைக் கொடுப்பார்கள். குழந்தைகள் நிகழ்ச்சி, மகளிர் பகுதி, கிராம நிகழ்ச்சி போன்றவை ஒலிபரப்பாகு முன், இவை ஒலிபரப்பாகும். இதைக் கேட்டவுடனேயே அந்த நிகழ்ச்சி என்ன என்பது நமக்குப் புரிந்துவிடும். இதைத்தான் சிக்நேச்சர் மியூசிக் என்கிறார்கள். வானொலியில் மட்டு மல்ல, தொலைக்காட்சி, திரைப்படம், விளம்பர ஒலிபரப்பு போன்ற எல்லாவற்றிலும் இது உண்டு.

✱ சு. பெரிய பெருமாள், சிதம்பரம்.

ஒலிம்பிக் சின்னங்களில் ஐந்து வளையங்கள் போடுகிறார்களே, எதற்காக?

ஐந்து கண்டங்களைக் குறிக்க. உலக முழுவதும் அடங்கி விடுகிறதே!

✱ அ. அகமத் பாட்சா, அதிராம பட்டணம்.

ரப்பர் தயாரிக்கப்படும் ரப்பர் மரத்துப் பாலுக்கு, தனிப் பெயர் ஏதாவது உண்டா? இல்லை ரப்பர் பால்தானா?

மரத்திலிருந்து இறக்கியதும் இதற்குப் பெயர் லேடெக்ஸ்.

✱ கு. கமலா, கு. வித்யாவதி, கூனூர்.

நட்சத்திரங்களுக்கு நிறம் உண்டா?

உண்டு. சீரியஸ் - நீலம். ரெகுலர்ஸ் லேகா - வெளிர் நீலம். கோனபஸ், பொமல்ஹட் - வெண்மை. ஆல்டேயர், பெல்லக்ஸ் - மஞ்சள். ஆல்ட்பேரான் - ஆரஞ்சு. ஃபெடல் கியூஸ் - சிவப்பு.

இவற்றின் நிறம் குறித்து மாறுபட்ட கருத்துக்களும் உள்ளன.

✱ சு. சந்திரகுமார், புதுக்கோட்டை.

சந்திர மண்டலத்தில் மனிதனின் எடை எவ்வளவு இருக்கும்?

நூறு கிலோ உள்ள மனிதன் சந்திர மண்டலம் போனால், பத்து கிலோ தான் இருப்பான்! 90% எடை குறைந்து விடும். ஈர்ப்புச் சக்தி குறைந்து விடுவதே இதற்குக் காரணம்.

✱ ஆ. பேச்சிமுத்து மற்றும் நண்பர்கள்.

ஜிம் கார்பெட் என்பவர் யார்?

உலகப் புகழ்பெற்ற வனவிலங்குக் காப்பாளரான இவரைப் பற்றி விரைவில் கோகுலத்தில் ஒரு கட்டுரையே வெளிவர உள்ளது.

சோலைக் குயில்

மூலம் : ஹான்ஸ் கிரிஸ்டியன் ஆண்டர்சன்
தமிழில் : தம்பி சீனிவாசன்

சீனதேசத்துச் சக்கரவர்த்தியின் அரண்மனை மிகப் பெரியது. அதன் மாடங்களும் பாதைகளும் சுற்றிச் சுற்றி வந்தால் நடக்க ஒரு நாள் போதாது. அரண்மனை மட்டுமா? அதன் நந்த வனமும் பெரியது. எத்தனை மரங்கள், எத்தனை மலர்ச் செடிகள், எத்தனை வகைகள்! நடக்க நடக்க நீண்டு கொண்டிருக்கும் அந்த அழகான நந்த வனத்தின் கோடியில் ஒரு மாமரம். அதில் குயில் ஒன்று வசித்து வந்தது. அந்தக் குயில் அடிக்கடி அழகாகக் கூவும். வார்த்தைகளால் அதன் இனிமையை வர்ணிக்க முடியாது. அதன் குரல் இனிமையிலே வெளியூரி லிருந்து வருவோர் போவோர் எல்லா ரும் மயங்கிப் போவார்கள்.

குயிலின் குரல் இனிமை வெளி நாடுகளுக்கும் பரவியது. ஜப்பான் நாட்டிலும் இந்தக் குயிலின் பெருமை பரவியது. குயிலின் இனிமையான குரலில் மனதைப் பறிகொடுத்த அந்த நாட்டுக் கவிஞன் ஒருவன் குயிலைப் பற்றி ஒரு பாடல் எழுதப் போய், அந்தப் பாட்டு எங்கும் புகழ்பெற்று விட்டது. சீன சக்கரவர்த்தியின் காதுக் கும் எட்டியது அந்தப் பாடல். அது வரை தனது அரண்மனை நந்த வனத்தில், அப்படி ஒரு குயில் இருப் பதையே அறியாது வாழ்ந்தார் சக்கர வர்த்தி. அவருடைய மந்திரி, சேனா பதி, அரண்மனை ஊழியர் யாருக்குமே தெரியாது அந்தக் குயிலைப் பற்றி. அவர்கள் எல்லாரும்தான் சுகபோகங்க ளிலே அரண்மனைக்குள்ளேயே வாழ்ந் தார்களே!

சக்கரவர்த்தி சீறினார் : "எனது அரண்மனை நந்தவனத்தில் இப்படி ஒரு அபூர்வ கானக் குயில் இருப்பதை ஏன் யாருமே எனக்குச் சொல்ல வில்லை?"

எல்லாரும் நடுங்கிப் போனார்கள்.



''இன்று நள்ளிரவுக்குள் நான் குயிலின் கானத்தைக் கேட்க வேண்டும்'' என்று ஆணையிட்டார் சக்கரவர்த்தி.

மந்திரி தோட்டத்துக்குப் போனார். ஒரு மாட்டுக்காரப் பெண்ணின் உதவியுடன் குயில் இருக்கும் இடம் தெரிந்து, அங்கே போய்க் குயிலின் இசையைக் கேட்டார். மயங்கி விட்டார். அவருடைய சார்பில் அந்தக் குயிலிடம் மாட்டுக்காரப் பெண் வேண்டிக் கொண்டாள். ''குயிலே, குயிலே, எங்கள் சக்கரவர்த்தியிடம் வந்து பாட்டுப் பாடேன்.''

குயில் மாட்டுக்காரப் பெண்ணின் வேண்டுகோளுக்கு இணங்கியது. அதற்கு அரசவையும், அரண்மனையின் பகட்டான இடமும், கூசும் ஒளியும் பிடிக்கவில்லை. பாட்டும் வரவில்லை! சோலைக் காற்று வரும்படி சாளரத்தைத் திறந்த பின்னரே அதற்குப் பாட வந்தது.

பாட்டைக் கேட்ட சக்கரவர்த்தி சொக்கிப் போய்விட்டார். ''இப்படிப் பட்ட பாடலை எப்போதும் கேட்டதில்லையே'' என்று உருகினார். அவரது கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

''கேள். என்ன பரிசு வேண்டுமானாலும் தருகிறேன் குயிலே. நீ விரும்பினால் தங்கத்திலே உன் காலுக்குக் காலணி செய்கிறேன்'' என்றார் மாமன்னர்.

''வேண்டாம். எனக்கு ஒரு பரிசும் வேண்டாம். பாடலைக் கேட்டு நீங்கள் உருகிக் கண்ணீர் உகுத்ததே என் பாடலுக்குக் கிடைத்த மிகப் பெரிய பரிசாகும்'' என்றது குயில்.

"இந்தக் குயில் இங்கேயே இருக்க வேண்டும். அதற்காகத் தனி தங்கக் கூண்டு தயாரிக்க வேண்டும்'' என்றார் மாமன்னர். குயிலைப் பார்த்துக் கொள்ளப் பத்து ஆட்களை வேலைக்கு வைத்தார். இருந்தாலும் பகலில் இரண்டுமுறை இரவில் ஒரு முறை குயிலுக்குப் பறந்து நந்தவனம் போக அனுமதி உண்டு. அப்போது அதன் கால்களில் பட்டு நூல் கட்டி அதைப் பிடித்தபடி பத்து வேலையாட்களும் கூடவே போவார்கள். திரும்ப அழைத்து வருவார்கள்.

தினமும் பலமுறை குயிலின் பாடலைக் கேட்டு மகிழ்ந்தார் மாமன்னர்.

ஜப்பானிய மன்னருக்கு இந்தச் செய்தி தெரிந்தது. சீனதேசத்து மாமன்னரின் உறவினர்தான் ஜப்பான் சக்கரவர்த்தி. அவர் தங்கத்தால் ஒரு பொம்மைக் குயில் செய்தார். அதில் யந்திரப் பொறி அமைத்துப் பாட வைத்தார். இதை ஒரு வண்ணப் பெட்டியில் வைத்து, தனது உறவினரான சீனத்து சக்கரவர்த்திக்குப் பரிசாக அனுப்பி வைத்தார்.

சீன தேசத்து அரண்மனையிலே அந்தப் பெட்டியையும் அதன் உள்ளே இருந்த தங்கக் குயிலையும் சபையோர் கொண்டாடினார்கள். யந்திரக் குயிலின் பாடலைப் பாராட்டினார்கள். நிஜக் குயிலையும் யந்திரக் குயிலையும் ஒப்பிட்டுப் பார்த்தார்கள். இரண்டுக்கும் போட்டி நடத்த நினைத்தார்கள். இந்த அமர்க்களத்தில் நிஜக் குயிலின் காவலர்களின் கவனம் சிதற நிஜக் குயில் நந்தவனத்துக்கு ஓடிப் போய் விட்டது!

"அது போனால் போகட்டும். இந்தத் தங்க யந்திரக் குயிலே நமக்குப் போதும்" என்று எல்லாரும் சந்தோஷப் பட்டார்கள். திரும்பத் திரும்ப தங்கக் குயிலின் பாடலையே சக்கரவர்த்தி கேட்டுக் கொண்டிருந்தார். ஒரு நாள் வழக்கப்படி ஆர்வத்துடன் அதன் பாடலைக் கேட்க அமர்ந்தார் சக்கரவர்த்தி. விசித்திர ஒலிகளை எழுப்பியது தங்க யந்திரக் குயில்! பாடல் வரவில்லை!

''உள்ளே கருவிகள் தேய்ந்து விட்டன'' என்றார் அரண்மனை மெக்கானிக்.

''சரிப்படுத்து என்று ஆணையிட்டார் சக்கரவர்த்தி.

''முடிந்ததைச் செய்து விட்டேன். இனி இது அடிக்கடி பாடாது. ஆண்டுக்கு ஒரு பாடல்தான் பாடும்'' என்றார் செப்பனிட்டவர்.

இப்படி ஐந்து ஆண்டுகள் ஓடின. சக்கரவர்த்திக்கு சோலைக் குயிலின் இசையைக் கேட்காது மனக் கவலை பிடித்துக் கொண்டது. நாளுக்கு நாள் அவரது உடல் வாடியது. தமது முடிவு காலம் நெருங்கி விட்டது என்று அவர் நினைத்தார். சோலைக் குயில் இல்லாவிட்டாலும் யந்திர தங்கக் குயிலின் பாடலையாவது கேட்க மாட்டோமா என்று அவர் ஆவலாக இருந்தார். ஆனால் அந்த ஆண்டுக்குரிய



பாடலை யந்திரக் குயில் முன்னரே பாடி விட்டிருந்தது.

இப்போது சக்கரவர்த்தி தமது வாழ்க்கை நிகழ்ச்சிகளையெல்லாம் தொகுத்துப் பார்த்தார். தமது நற் செயல்களையும் தாம் செய்த தீய செயல்களையும் எண்ணி எண்ணிப் பார்த்தார். அவர் மனம் கலங்கியது. ''கலங்கிய மனம் அமைதி பெற யாரா வது பாடினால் மன அமைதி கிடைக் குமே. என் குயில் எப்போ பாடும்?'' என்று ஏங்கித் தவித்தார்.

யந்திரக் குயிலுக்கு சாவி கொடுக்க யாருக்கும் தைரியமில்லை. 'படக்' கென்று அதன் விசை முறிந்து விட்டால், அரசரின் கோபத்திற்கு ஆளாக நேருமே! எல்லாரும் சக்கர வர்த்தியைத் தனியே விட்டு விட்டுப் போனார்கள்.

அப்போது திறந்த ஜன்னல் வழியே சோலைக் குயில் பறந்து வந்தது. அரசரின் படுக்கை அருகே வந்து அமர்ந்தது. ''சோலைக் குயிலா!'' என்று வியப்புடன் கேட்டார் அரசர். ''ஆம் அரசே'' என்று பதிலளித்த குயில், ''ஏன் அழுகிறீர்கள்?'' என்று கேட்டது.

''மரணம் என்னை அழைக்கிறது. நான் செய்த தீய செயல்களை எண்ணி இப்பொழுது கலங்குகிறேன். நான் மீண்டும் பிழைத்தால் மக்களுக்கு எவ்வளவு நன்மைகள் செய்யலாம் என்று ஏங்குகிறேன்'' என்று விம்மினார் மன்னர்.

''வருந்தாதீர்கள். மீண்டும் உயிர் பிழைத்து எழுந்தால் மக்களுக்கு நன்மை செய்யலாமே என்று நீங்கள் உண்மையாகவே ஏங்கினால், உங்கள் உயிரை நான் காப்பாற்றித் தருகிறேன். உங்கள் உடல் நிலையை நான் குணப்படுத்தித் தருகிறேன்'' என்றது குயில்.



''உன்னால் முடியுமா? மீண்டும் நான் உயிர் பிழைத்து எழுந்தால் மக்களுக்குக் கண்டிப்பாக நன்மை புரிவேன். இது நிச்சயம்'' என்றார் மன்னர்.

குயில் சிரித்து விட்டுப் பாடத் தொடங்கியது. மன்னருக்குப் புத்துணர்ச்சி வந்தது. ராஜாவின் நோயின் கடுமை மெல்ல மெல்லக் குறைந்தது. அது அவரது மனத்தின் துயரச் சுமையைக் குறைத்துப் பு தி ய உற்சாகத்தைக் கொடுத்தது. இசையின் இனிமையால் அவர் கண்கலங்கி அழுதார்.

மரணப் படுக்கையிலிருந்து மெல்ல எழுந்து அமர்ந்தார். '' குயிலே, அருமை சோலைக் குயிலே. உனக்கு என்ன பரிசு வேண்டும் சொல். நொந்து போன என் மனதுக்கு ஆறுதல் அளித்தாய். நான் புத்துணர்ச்சி பெற்றேன். என் உயிரைக் காப்பாற்றியிருக்கிறாய்! உனக்கு என்ன பரிசு வேண்டும் கேள்'' என்று கேட்டார். அவர் கண்களில் கண்ணீர்.

''கண்ணீரே எனக்குக் காணிக்கையாயிற்று. இதைவிடவா வேறு பரிசு வேண்டும்? எனக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுங்கள். மறுபடி சுக போகத்தில் இருந்து குடிமக்களின் நலன்களை அலட்சியப் படுத்தாதீர்கள்'' என்று கேட்டது குயில்.

''கண்டிப்பாகக் காப்பாற்றுவேன், தினமும் வருவாயா?'' என்று ஆவலோடு கேட்டார் மன்னர்.

''தினமும் இரவு வந்து பாடுவேன். நீங்கள் பூரண குணமடையும் வரை பாடுவேன்''என்றது குயில்.

''இங்கேயே இருந்துவிடேன், எனது தங்கக் கு யி லை உடைத்து நொறுக்கிவிடுகிறேன்'' என்றார் மாமன்னர்.


''வேண்டாம். என்னால் அது முடியாது. நான் நந்தவனத்தில் தான் வாழ வேண்டும். தினம் வருகிறேன். பாடுகிறேன். என் பாட்டால் உங்கள் மனநோய் குணமடையும். உற்சாகமாக இருப்பீர்கள். நாட்டு மக்களைக் கவனியுங்கள். அவர்கள் மகிழ்ச்சியே உங்கள் இலட்சியமாக இருக்க வேண்டும். என் பாடல் உங்களுக்கு இந்த எண்ணங்களை ஏற்படுத்தும்'' என்ற குயில், ''அரசே ஒரு விஷயத்தில் நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்,'' என்றது.

''சொல், சொல்! எதுவானாலும் கவனமாக இருக்கிறேன்.''

''நான் பாடப்பாட நீங்கள் பூரண குணமடைவீர்கள். உங்கள் விவேகம் வளரும். மக்களை அன்போடும் நீதியோடும் ஆள்வீர்கள். ஆனால், யாரிடமும் என் பாட்டே இதற்குக் காரணம் என்பதை நீங்கள் சொல்லிவிடக்கூடாது,'' மன்னர் இணங்கினார்.

குயில் கானம் இசைக்க மாமன்னர் தூங்கினார்.

காலை நேரத்தில் சக்கரவர்த்தியின் மரணச் செய்தியை எதிர்பார்த்து மந்திரிகளும் அரண்மனை உயர் அதிகாரிகளும் கூடி நிற்க, படுக்கை அறைக் கதவைத் திறந்து கொண்டு கம்பீரமாக வெளியே வந்தார் சக்கரவர்த்தி. கண்களில் புத்தொளியுடன் எல்லாரையும் பார்த்துப் புன்னகை புரிந்தார்.



''டாக்டர்... எனக்குத் தினமும் ரயில்ல சேலத்தில இருந்து ஜோலார்பேட்டை போகிற மாதிரி கனவு வருது டாக்டர்!


''அப்படியா! வழியில மொரப்பூர்ல வண்டி நிக்கும்போது எங்க அண்ணனைப் பார்த்தால் நான் விசாரிச்சதாச் சொல்லிடு. தம்பி!

— மு. திருநாவுக்கரசு, மொரப்பூர்.

எல்லோரும் அதிசயப்பட்டனர்.


மரணப் படுக்கையில் கிடந்த அரசர் இப்படி மந்திரம் போட்டது போல் உற்சாகமாக வந்து நிற்கிறாரே! இந்த அற்புதம் எப்படி நிகழ்ந்தது என்று திகைத்தனர்.

மன்னரின் அறிவுக் கண் திறந்து விட்டது. இனி மக்களின் நலன்களை மறந்து அவர் சுகபோகமாக இருக்கப் போவதில்லை. தங்களிடமும் கண்டிப்பாக இருந்து தங்களையும் விரைவில் மாற்றவைக்கப் போகிறார் என்பது பாவம் அவர்களுக்கு எப்படித் தெரியும்?



வர்ணம் தீட்டுங்கள்!

புத்திசாலிக் குருவி



ஒரு காட்டில் பல ஆலமரங்கள் இருந்தன. அவற்றின் நிழல்களில் பறவைகளும் மிருகங்களும் வசித்து வந்தன. ஒரு யானை, ஒரு குரங்கு, ஒரு குருவி இம் மூன்றும் ஒரு பெரிய ஆலமரத்தின் அருகில் வசித்தன. அவை மூன்றும் நல்ல நண்பர்களாய் இருந்தன. ஒரு நாள் அவைகளுக்குள் சண்டை வந்து விட்டது. இது பல வாரங்கள் தொடர்ந்ததால் அவை மனதுக்குள் பெரிதும் வருத்தமடைந்தன. 'நாம் ஒற்றுமையாய் வாழ முடியாதது துர்பாக்கியமே' என்றது யானை. 'நாம் ஏன் நல்ல நண்பர்களாகத் திரும்பவும் இருக்கக் கூடாது?' என்றது குரங்கு. 'நாம் சந்தோஷமாய் இருந்த நாட்களைத் திரும்பப் பெற வேண்டும்' என்றது குருவி.

யானை வெகு நேரம் சிந்தித்து ''நாம் எல்லோரும் ஒற்றுமையாய் வாழ ஒரே வழிதான் உள்ளது. வயதில் பெரியவர்கள்தான் புத்திசாலி. அதனால் நம்மில் யார் எல்லோரையும் விடப் பெரியவரோ, அவரே மற்ற இருவரையும் ஆள வேண்டும்'' என்று கூறியது. அதற்குக் குரங்கு 'இது ரொம்ப நல்ல யோசனைதான். ஆனால், நம்மில் வயதானவர் யார் என்று எப்படிக் கண்டுபிடிப்பது'? என்று கேட்டது. அதற்குக் குருவி 'இங்கிருக்கும் ஆலமரம் ரொம்ப வருடங்களாக இருக்கிறது. நாம் குழந்தையாயிருந்த போது அம் மரம் எப்படியிருந்த தென்பதைக் கூறிக் கண்டுபிடிக்கலாம்' என்றது.

யானையும் குரங்கும் ஒப்புக் கொண்டபின் யானை, 'நான் சிறு குழந்தையாயிருந்த போது இந்த ஆலமரத்தை வந்து முட்டுவேன். அதன் உச்சிக் கிளைகள் ஆடும். அப்போதே என்னை விட ரொம்பவும் உயரம் இந்த மரம். இதிலிருந்து எனக்குச் சிறு வயதிலிருந்தே இந்த மரத்தைத் தெரியும் என்பதைப் புரிந்து கொள்ளலாமே? என்று கூறியது.


அடுத்து குரங்கு, 'நான் சிறு குழந்தையாயிருந்த போது ஆலமரத்தின் உச்சிக் கிளையில் இருக்கும் இலைகளைக் கூட அசைத்துத் தாவிக் குதிப்பேன். இதிலிருந்தே நான் குழந்தையாயிருந்த போதிலிருந்தே இம் மரத்தை எனக்கு தெரியும் என்பதை உணரலாமே? என்றது.

கடைசியாகக் குருவி, 'நான் சிறு குழந்தையாயிருந்த போது என் அம்மா என்னை ஒரு மலைக்கு அழைத்துச் சென்றாள். அங்கிருந்து நாங்கள் சில விதைகளைக் கொண்டு வந்தோம். அந்த விதையிலிருந்து கிளம்பியதுதான் இந்த ஆலமரம். இப்போது குழந்தையிலிருந்தே எனக்கு இம் மரத்தைப் பற்றித் தெரியும் என்பது தெளிவாயிற்றா?' என்று கேட்டது.


யானையும் குரங்கும் மிக மரியாதையுடன் குருவியின் பேச்சைக் கேட்டு 'நீதான் எங்களை விடப் பெரியவன். முடிவு செய்து கொண்ட பேச்சுப்படிதான் நாங்கள் கேட்போம்' என்று கூறின. ஆனால் குருவி வயதானது மட்டுமல்ல. புத்திசாலியாகவும் இருந்தது. 'நீங்கள் கூறுவதை ஒப்புக் கொள்ள மாட்டேன். நாம் மூவருமே சமம்தான். நான் சில திட்டங்கள் வகுக்கிறேன். அதன்படி மூவரும் நடப்போம்' என்று பணிவாகக் கூறியது.

அவை மூன்றும் ஆலமர நிழலில் தங்களுக்குள் சில கட்டுப்பாடுகள் விதித்துக் கொண்டன. இதற்குப் பிறகு அவை மீண்டும் சண்டையிட்டுக் கொள்ளாமல் எப்போதும் போல ஒற்றுமையாய் வாழ்ந்து வந்தன.

– இந்திரா கோபாலன்


வெகுகாலம் முன்பு குசத்துவசர் என்று ஓர் முனிவர்...
வேதம் ஓதுவதே நம் பணி...
படக்கதை: விநு
ஸ்ரீ
கல்யாணம்
ஒரு நாள் வேதம் ஓதிய நாவில் உதித்து, கரத்தில் தவழ்ந்தது...
அட! எத்தனை அழகிய பெண் குழந்தை...!
பிரும்மா தோன்றி...
வேதம் ஓதிய நாவில் பிறந்த இவளுக்கு வேதவதி என்று பெயர் சூட்டு!
அப்படியே ஆகட்டும்.
வேதவதி, லக்ஷ்மியின் அவதாரம் என்பதை அறிவாயாக!
பிரும்மா மறைந்தார்...
என்ன பாக்கியம் செய்தேன்! கண்ணும் கருத்துமாய் வளர்ப்பேன்.



வேதவதி வளர்ந்து தந்தைக்கு ஆசிரமத்தில் உதவினாள்...
பால் கறந்தாச்சு... பூப் பறிச்சாச்சு... சமையலை கவனிக்கலாம்.....
கல்வி கேள்விகளில் சிறந்தாள்...
ஒரு நாள் தம்பன் என்ற அரக்கன் அந்தப் பக்கமாக வர...
ஆகா! எத்தனை அழகான பெண்!
தம்பன் முனிவரை அணுகி...
குசத்துவசரே! எனக்கு உமது மகளை மணம் செய்து கொடுங்கள்!
முனிவர் சிரித்து...
அவள் மகா விஷ்ணுவுக்கே மனைவியாக வேண்டியவள்! உனக்கு எப்படிக் கொடுப்பேன்!


தம்பன் கோபமடைந்தான்...
என் வலிமையை அறியாத நீ ஒழிந்து போ!
தம்பனால் தனக்குத் தீங்கு நேரும் என்று வேதவதி...
கண்ணீர் விடக்கூட நேரமில்லை. தம்பன் கண்ணில் படாமல் ஓடிச் சென்று விட்டாள்...
கானகத்தின் வேறு ஓர் இடத்தில்...
தந்தையை இழந்த துயர்தீர, மகாவிஷ்ணுவை நோக்கித் தவம் செய்ய ஏற்ற இடம்.
வேதவதி வெகு காலம் தவம் செய்தாள்...
திக்விஜயம் செய்த ராவணன் அந்தப் பக்கமாக வந்தான்...
ஆகா! தவநிலையிலும் எத்தனை அழகு! இவளை நான் அடைந்தே தீருவேன்!


மதிகெட்ட ராவணன் வேதவதியை அணுகி, அவள் தோள்களைப் பற்றினான்...
அழகியே எழுந்திரு! உன்னை அடைய இலங்கேசுவரன் வந்திருக்கிறேன்!
தவம் கலைந்த வேதவதி...
அற்பனே! விலகி நில்!
எதற்கு இந்தத் தவக்கோலம்? அரண்மனை வாழ்வு உனக்குக் காத்திருக்கிறது!
மூடனே! நான் மகா-விஷ்ணுவுக்கே உரியவள். ..நீயும் உன் இலங்காபுரியும் அழிய, நானே காரணமாவேன்!
ராவணன் திகைத்த சில கணங்களில், வேதவதி தன் தவ வலிமையால்...
இங்கே ஒரு காட்டுத் தீ மூளட்டும்!
வேதவதி தீக்குளித்தாள்...
உன்னால் தீண்டப்பட்ட நான் இனி உயிர் வாழ விரும்பவில்லை.


அரக்க குணங்களைக் கொண்
-டிருந்தாலும் ராவணன் சிவபக்தன்...
சிவபூஜைக்கு மலர் கொய்து
வருகிறேன்... மற்றவை
தயாராகட்டும்!
ராவணன் பூக் கொய்ய வந்த
நந்தவனத்தில் ஒரு தாமரைப்
பொய்கை...
கூடை நிரம்பிவிட்டது என்றாலும்
தாமரைகள் கண்களைக்
கவர்கின்றன...
லிங்கத்தின் சிகரத்தில்
சூட்ட ஏற்ற மலர்...
அட! என்ன ஆச்சர்யம்!
தீக்குளித்த வேதவதிதான் தாமரையில்
மீண்டும் பிறந்திருக்கிறாள் என்று
அறியாத ராவணன்...
குழந்தை எத்தனை அழகு!
அரண்மனைக்குக் கொண்டு சென்று
அருமையாக வளர்ப்பேன்!


குழந்தையைத் தொட்டிலிலிட்டு மகிழ்ந்தான் ராவணன்...
எத்தனை அழகா சிரிக்கிறது!
ஆனால் அரண்மனை நிமித்தகர்...
பிரபோ! மன்னிக்க வேண்டும். இந்தக் குழந்தை இங்கிருந்தால் இலங்கை அழியும்!
என்ன உளறுகிறாய்? ஒரு குழந்தையால் என்ன தீங்கு நேர்ந்து விடப் போகிறது...?
குழந்தை என்றுமே குழந்தையாய் இருப்பதில்லை, பிரபு!
வளர்ந்த பின் என் அதிர்ஷ்டம் பலிக்கும்போது பாசமே காரணமாக உங்கள் வேதனை பண்டலாம் -காதம்...
அதனால் பாசம் உருவாகிப் பெருகும் முன்பே...
இல்லை, இதனை அழிக்க மாட்டேன்...


குழந்தையைக் கொல்ல
மனமில்லையென்றால்
ஒரு பெட்டியில் வைத்துக்
கடலில் மிதக்க விட்டு
விடுங்கள்!
ராவணன் மிகுந்த மனவருத்தத்தோடு...
கண்ணே...
..போய்வா!
ஈசன் விட்டவழி!
அலைகள்
உன்னைத்
தாலாட்டட்டும்...
ஒரு புயல் உருவாகி அலைகடல்
மீது மிதந்த பெட்டியை வடக்கே
கொண்டு சென்றது....
வெகு சீக்கிரம் கண்டகி, கௌசிகி
நதிகளின் முகத்துவாரங்களின்
இடையே போய்ச் சேர்ந்தது பெட்டி.
புயலும்
பெரு மழையும்
சேரக் கடல்
பொங்கியது...



நீலப் பரப்பினூடே கடல் வெகுதூரம் உட்புகுந்து சென்றது...
குவா... குவா...
இரு நதிகள் மூலம் வெள்ளம் வடிந்த போது பெட்டி நிலத்தில் புதையுண்டது...
கீச் கீச்!
மிதிலை நாட்டின் மன்னன் ஜனகன். மிதிலாபுரி அவன் தலை நகர்...
புயல் ஓய்ந்ததா? மக்களுக்கு அதிகத் துன்பமில்லையே?
மன்னன் என்றாலும் உழைப்பார்வம் உடையவன் ஜனகன்...
மழை நின்றது... நிலம் உழுவதற்கு உகந்த தருணம்...
இந்த இடத்தில் ஒரு யாகசாலை அமைப்பேன்... அட, இது என்ன பெட்டி...!



ஜனகர் பெட்டியைத் திறந்தார்...
ஆகா! பூமிதேவியே எனக்களித்த செல்வம்!
குழந்தையைக் கண்ணும் கருத்துமாய் வளர்த்தார்...
சீதை என்று பெயர் சூட்டுகிறேன்!
சீதை சகல கலைகளிலும் தேர்ந்தாள்...
வளர்ந்தாள், விளையாடினாள்...
படிப்பில் மட்டுமென்ன, பந்தாட்டத்திலும் சீதையை வெல்லமுடியாது!
ஒரு சமயம் பந்து ஒரு பெட்டிக் கடியில் உருண்டு செல்ல...
போச்சு! போச்சு! பிடி! பிடி!


இவ்வளவு பெரிய பெட்டியை எப்படித் தூக்குவது?
பந்தை எப்படி எடுப்பது?
தோழிகள் முயன்று பார்த்து முடியாமல் போக, சீதை...
நகருங்கள்; நான் தூக்கிப் பார்க்கிறேன்...
அந்தச் சமயம் ஜனகர் அந்தப் பக்கம் வர...
பெட்டியைத் தூக்கிவிட்டேன்; பந்தை எடுத்துக் கொள்ளுங்கள்...
ஆ!
என்ன ஆச்சர்யம்! யாராலும் தூக்க முடியாத பெட்டியைத் தூக்கி விட்டாயே!
அப்படி என்ன இதில் இருக்கு?
ஜனகர் பெட்டியைத் திறந்து காட்டினார்...
சிவ தனுசு!
இது எப்படி இங்கு வந்தது?



ஜனகர் வில்லின் கதையைச் சொன்னார்...
ஒருசமயம் பார்வதி தேவியின் தந்தை தக்கன், யாகம் செய்தான். யாகத்துக்கு அவன் தன் மகளையும் மாப்பிள்ளையையும் அழைக்கவில்லை...
தந்தையின் யாகத்தைக் காணப் பார்வதி சென்றபோது...
உன்னை யார் வரச் சொன்னது...?
பார்வதி அவமானப்பட்டுத் திரும்ப, சிவனுக்குக் கோபம் வந்தது...
மேரு மலையையே வில்லாக வளைத்தவன் நான்! போர் தொடுப்பேன்!
அந்த வில்லுடன் சிவன் தக்கனின் யாக சாலையை அணுக....
ஓடுங்கள்!
தப்புங்கள்!
தக்கனின் யாக சாலை அழிவுற்றது...
என்னை மன்னியுங்கள்....



சிவனுடைய கோபம் தணிந்த போதிலும்...
உங்கள் கையில் உள்ள வில்லைப் பார்த்தாலே பயமாயிருக்கிறது....
அஞ்ச வேண்டாம்; மிதிலாபுரி மன்னனிடம் இந்தச் சிவதனுசைக் கொடுத் வைக்கிறேன்!
ஜனகர் கதை கூறி முடித்தார்...
இப்படித்தான் என் முன்னோர்கள் ஒருவரிடம் இந்த வில் வந்து சேர்ந்தது... பெட்டியில் பத்திரப்படுத்தி பூஜித்து வருகிறோம், பரம்பரையாக...
ஜனகர் கவலையுற்றார்...
கல்வியிலும் கலைகளிலும் தன்னிகரற்று விளங்கும் சீதை, சிவதனுசையே தூக்கி விட்டாளே...
இவளுக்கேற்ற கணவனை எப்படித் தேர்ந்தெடுப்பது...?
ஜனகர் பல மன்னர்களுக்கும் ஓலை அனுப்பினார்...
எம்மிடம் உள்ள சிவதனுசைத் தூக்கி நிறுத்தி, நாணேற்றும் ஆற்றல் படைத்தவருக்கு எனது மகள் சீதை மனைவியாவாள்...


சீதையின் அழகும் ஆற்றலும் பற்றி மன்னர்கள் அறிந்திருந்தனர்... ஓலை கிடைக்கப் பெற்ற ஒவ்வொருவரும்...
என் படைகளுடனும் பரிசுகளுடனும் சென்று, பலத்தையும் செல்வத்-தையும் ஜனகனுக்கு உணர்த்துவேன்...
ஜனகர் உறுதியாக...
சிவ தனுசு இது. இந்த வில்லை வளைத்து நாணேற்றுகிற -வருக்கே என்மகள் மனைவியாவாள்...
பலரும் முயன்று பார்த்து...
தூக்கவே முடியவில்லையே..
மேலும் சிலர்....
ஹூம்... தூக்கவே முடியாத போது வளைப்பதாவது; நான் ஏற்றுவதாவது?... நான் போய் வருகிறேன்...
தோல்வியுற்ற மன்னர்கள் கோபம் கொண்டு...
ஜனகன் நம்மை அவமதித்துவிட்டான்... போர் தொடுப்போம்!


ஜனகர் பல போர்களைச் சந்தித்தார். அவர் படைபலம் குறைந்தது...
ஆனாலும்...
சீதை! அநீதியாகப் போர் செய்தவர்கள், புறமுதுகிட்டு ஓடினார்கள். வெற்றி மிதிலைக்கே!
ஜனகரைக் கவலையும் ஆட்கொண்டது.
விரோதிகளை வளர்த்துக்கொண்டது தான் மிச்சம்! சீதைக்குக் கல்யாணமே ஆகாது போலிருக்கே...
ஒரு நாள், விசுவாமித்திரர் ராமலக்ஷ்மணர்களுடன் மிதிலைக்கு வந்தார்...
அதோ மிதிலாபுரி! ஜனகனின் தலைநகர்!
அரண்மனையை நெருங்க, மேல் மாடத்தில் இருந்த சீதையைப் பார்த்தார் ராமர்...
இவருக்காகத்தான் இத்தனை காலமாகக் காத்திருக்கிறேனோ...


விசுவாமித்திரர், ஜனகருக்கு ராமலக்ஷ்மணர்களை அறிமுகம் செய்தார்...
தசரதன் பிள்ளைகள். மாவீரர்கள். ரிஷிகளின் யாகம் காத்து உதவினார்கள்...
ஜனகர் சிவ தனுசுவின் கதையை விவரித்து...
மகரிஷியே! ராமரின் கம்பீரம் என்னைக் கவர்கிறது. இவர் வில்லில் நாணேற்றினால் சீதையின் அழகும் ஆற்றலும் வீணாகாது!
விசுவாமித்திரர் தலையசைத்து சைகை காட்ட ராமர்...


வில்லில் நாணேற்ற அதனை வளைத்தார் ராமர்...
படீர்!
தேவர்கள் பூ மாரி பொழிய...
ஆஹா! என்ன லாகவம்!
வில்லை ராமர் எடுத்ததைப் பார்த்தோம்; முறிந்தது கேட்டோம்!
தசரதருக்குத் தூதர்கள் விரைய அவரும் சுற்றம் பரிவாரத்துடன் வந்தார்...
வரவேணும்! வரவேணும்!
சீதை சபைக்கு அழைத்து வரப்பட்டாள்...
மேன்மாடத்தில் தோன்றி என் கண்களைக் கவர்ந்தவனே தான்!
மேன்மாடத்திலிருந்து நான் பார்த்தபோது என் உள்ளத்தில் புகுந்தவரே தான்!
ராமர் சீதை திருமணம். லக்ஷ்மணருக்கு ஜனகரின் மற்றொரு மகள் ஊர்மிளையும்; பரத சத்ருக்-னர்களுக்கு ஜனகரின் தம்பி மகள்கள் இருவரும் மணப்பெண்களாக அமைந்தனர்.

மலைக்கோட்டை மர்மம்



வி.ர.வசந்தன்

முன் கதை : வெள்ளியாற்றுக்குக் குறுக்கே அணை கட்டக் குக்கிராமமான சந்திரகிரிக்கு மனைவி கமலா, மகன் ஆனந்த், மகள் அஸ்வினியோடு வந்து சேர்கிறார் இன்ஜினியர் பிரேம்நாத். தினமும் மணிமாறனின் மாட்டு வண்டியில் பயணம் செய்து புவனபுரத்திற்கு வந்து படிக்கிறார்கள் ஆனந்தும் அஸ்வினியும். ஒரு நாள் திரும்பும் போது மழை பிடித்துக் கொண்டு, வெள்ளம் வந்து விடுகிறது. காரணமின்றி மணிமாறனை வெறுக்கும் இன்னொரு வண்டிககாரச் சிறுவன் நாகராஜன், மணிமாறன் எவ்வளவு தடுத்தும் கேளாது தனது வண்டியை வெள்ளத்தில் ஓட்டி ஆபத்தை விலைக்கு வாங்குகிறான். மணிமாறனின் எச்சரிக்கையால் வண்டிக்குள் இருக்கும் ரங்கனும் வேம்புவும் குதித்து உயிர் தப்ப, நாகராஜன் வெள்ளத்தில் சிக்கித் தவிக்கிறான். வண்டியோடு மாடும் தள்ளாடித் தவிக்கிறது. இனிமேல் படியுங்கள்...

தையும், அவர்களுக்கு முன்னால் நாகராஜனும், ஊர்த் தலைவரான பாஞ்சாவும் வ ரு வ தை யு ம் பார்த்த மணிமாறன் பெரிதும் திகைப்படைந்தான். நாகராஜன் என்ன பொய்யைச் சொல்லி அவர்களை அழைத்து வருகிறானோ என்று நினைத்த போது அவன் உள்ளம் கலங்கியது.

வண்டியை நிறுத்தி விட்டுத் தயக்கத்துடன் கீழேயிறங்கி மணிமாறனை சட்டையைப் பிடித்து முரட்டுத்தனமாகத் தன்னருகே இழுத்த பாஞ்சா, ''இப்ப நாகராஜன் வண்டிக்கு என்ன பதில் சொல்லப் போற?'' என்று உறுமினான்.

மணிமாறன் சற்றே நடுங்கிய குரலில், ''ஐயா, அங்க நடந்ததைப் பார்த்திருந்தா இப்படி என் மேல கோபப்படமாட்டீங்க... நாகராஜன் சொல்றதை மட்டும் கேட்டுக்கிட்டு ஒரு முடிவுக்கு வராதீங்க'' என்றான்.

சட்டையை விட்டு விட்டு, உருட்டி விழித்து வெறுப்புடன் அவனைப் பார்த்த பாஞ்சா, ''நீ ஒண்ணும் பேச வேண்டியதில்லே. இது நீ வேணுமின்னே திட்டமிட்டுச் செய்த காரியம்... ஏண்டா எத்தனை வருஷமா நாகராஜன் இந்தப் பாதையில வண்டி ஓட்டறான்..? அவனுக்கு எவ்வளவு அனுபவம்? அவனுக்குத் தெரியாததையா நீ புதுசா கண்டுபிடிச்சுட்டே..? வண்டியிலிருந்த பயலுகளை நீ குதிக்கச் சொல்லாம இருந்திருந்தா, அவங்க பாரத்துல வண்டி கவுராம நின்னிருக்கும்... நீ வேணுமின்னே அந்தக் குழந்தைகளைக் குதிக்கச் சொல்லி இருக்கே... அவனுக்கு ஏற்பட்ட நஷ்டத்துக்கு நீதான் பொறுப்பு... என்ன நான் சொல்றது சரிதானே?'' என்று சுற்றி நின்ற கூட்டத்தினரைப் பார்த்துக் கேட்டான்.

உண்மையிலேயே அங்கு என்ன நடந்தது என்பதைச் சரியாக உணர முடியாததால், என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் கூட்டத்தினர் திகைத்து நின்றனர்.

''ம், என்னடா பேசாம நிக்கறே? இப்ப என்ன செய்யப் போறே?'' என்று மணிமாறனை அதட்டினான் பாஞ்சா.

மணிமாறன் நிராதரவாகக் கூட்டத்தினரைப் பார்த்தான். ''நீங்க நினைக்கிற மாதிரி எந்த வஞ்சனை எண்ணத்தோடேயும் நான் அப்படிச் சொல்லல்ல... அந்த இக்கட்டான சூழ்நிலையில எனக்கு வேற எதுவும் தோணல'' என்ற மணிமாறனின் குரல் உடைந்து கலங்கியிருந்தது.

சுற்றி நின்ற கிராமவாசிகளின் முகத்தில் இரக்கமும், பரிவும் தோன்றியபோதிலும், யாரும் வாய் திறந்து எதுவும் பேசவில்லை.

தான் கேட்ட கேள்விக்கு அவன் நேரடியாகப் பதில் சொல்லாமல், கூட்டத்தினரைப் பார்த்துப் பேசியதைக் கவனித்த பாஞ்சா மிகுந்த கோபமடைந்தான். கடும் சீற்றத்துடன் அவனைப் பார்த்தவன், ''ஏலேய், நீ செஞ்ச வேலைக்கு சரியான தண்டனை தந்தாத்தான் உன் திமிர் அடங்கும்... நாளையிலிருந்து உன் வண்டியை நாகராஜன் ஓட்டப் போறான் தெரியுதா?'' என்று கேட்டான்.

மணிமாறன் திடுக்கிட்டான். ''என் வண்டியையும் மாட்டையும் அவனுக்குக் கொடுத்திட்டீங்கன்னா, பிழைப்புக்கு நான் என்ன செய்வேன்...? எங்க அப்பா போனதுக்கு அப்புறம் எனக்கு இருக்கிற ஒரே பிழைப்பு வழி இதுதானே?'' என்று முறையிடும் குரலில் புலம்பினான்.

''அந்த மண்டபத்துல போய் உட்கார்ந்து பிச்சை எடுடா'' என்று கத்திய பாஞ்சா நாகராஜனிடம் திரும்பி ''நாளையில இருந்து இந்த வண்டியை நீயே ஓட்டு'' என்றான்.

வெங்காய மதம்

★ ஆச்சரியப்படுங்கள்! ஒரு மதத்தின் பெயரே ''வெங்காய மதம்.'' இந்த மதம் இந்தியாவில் அல்ல. பிரான்ஸ் நாட்டில் இருக்கிறது. நல்ல வேளை என்கிறீர்களா? இந்த மதத்தைப் பின்பற்றுகிறவர்கள் வெங்காயத்தையே வணங்குகிறார்கள்!

-- ரமா ராமநாதன். நாகர்கோவில்.

அங்கு நடப்பதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த ஆனந்தால் இதற்கு மேலும் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவன் சட்டென்று வண்டியிலிருந்து குதித்து அவர்களை நோக்கி வந்தான். பாஞ்சாவின் அருகில் போய் நின்று, ''ஏங்க, வேணும்னு திட்டமிட்டு, மணிமாறன் வண்டியைக் கவுத்துட்டதா முடிவு செய்யறீங்களே? இன்றைக்கு மழை வந்ததும், பாதையில தண்ணீர் ஓடியதும் திட்டமிட்டு நடந்த காரியங்களா?'' என்று கேட்டான்.

பளிச்சென்று அவன் கேட்ட கேள்விக்கு உடனே பதில் சொல்ல முடியாமல் விழித்த பாஞ்சா, அவன் கேட்ட தோரணையைப் பார்த்து எரிச்சலடைந்தான். கண்களைச் சுருக்கி அவனை உற்றுப் பார்த்தவன், ''ஏ தம்பி, இது எங்க ஊர் விவகாரம், நீ இதுல தலையிட வேண்டாம்'' என்றான்.

ஆனால் ஆனந்த் விடவில்லை. ''எந்த ஊர் விவகாரமா இருந்தா என்னங்க... நியாயம் என்கிறது எல்லா ஊருக்கும் ஒண்ணுதானே... இந்தச் சம்பவம் நடந்த போது நீங்க யாரும் அங்கேயில்லை. நடந்ததைப் பார்த்தது நாங்கதான்'' என்றவன் கூட்டத்தினரைப் பார்த்து, ''முக்கால் ஆள் உயரத்திற்கு மலை மேலே இருந்து பாய்ந்து வரும் வெள்ளத்தில், முட்டாள்தனமா தன்னை நம்பி வந்தவங்களோட வண்டியைத் தண்ணிக்குள் நாகராஜன் இறக்க முயற்சித்தது சரியா... இல்லே... அதுல இருந்த ஆபத்தை எடுத்துச் சொல்லி மணிமாறன் அவனைத் தடுக்க முயற்சித்தது சரியான்னு நீங்களே சொல்லுங்க?'' என்று கேட்டான்.

கிராம மக்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

ஆனந்த் மீண்டும் அவர்களைப் பார்த்து, ''ரங்கனும், வேம்புவும் வண்டியிலேயே இருந்திருந்தா, அந்த எடையில வண்டி கவிழ்ந்திருக்காதுன்னு நாகராஜனும், இவரும் சொல்றாங்க... வெள்ளத்தின் வேகத்தில வெறும் வண்டியையே இழுக்க முடியாம திணறிய மாடு, இவங்களையும் சேர்த்து எப்படி இழுத்திருக்கும்? ...ஒருவேளை இந்த ரெண்டு பேரோடேயும் வண்டி கவிழ்ந்திருந்தா இவங்க கதி என்ன ஆகியிருக்கும்னு கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க... அதனாலதான் மணிமாறன் இருவரையும் கீழே குதிக்கச் சொன்னான்... இதுல திட்டமோ, சதியோ ஒண்ணுமில்லை'' என்றான்.



கூட்டத்தில் ஆங்காங்கே பலரும் அதிருப்தியுடன் நாகராஜனைப் பார்த்து முணுமுணுக்க, கூட்டத்தினரில் ஒருவன் ''மணிமாறன் மேல தப்பு ஒண்ணுமில்ல.... மாட்டையும் வண்டியையும் சேர்த்து இழுத்த வெள்ளம் இந்த இரண்டு குழந்தைகளையும் சேர்த்து இழுக்காம விட்டிருக்குமா..? நாகராஜன் செய்ததுதான் முட்டாள்தனமான காரியம்'' என்று சத்தமிட்டான்.

அவனது பேச்சை ஆமோதித்து கூட்டத்தில் அனைவரும் தலையசைக்க, பாஞ்சாவால் மேற்கொண்டு எதுவும் பேச முடியாமற் போயிற்று. அவன் குரலில் சாந்தத்தை வரவழைத்துக் கொண்டு மணிமாறனைப் பார்த்து, ''சின்னப் பயலாச்சேன்னு சும்மா விடறேன்... அடுத்தவங்க காரியத்துல இனி உங்க அப்பன் மாதிரித் தலையிட்டே அப்புறம் இந்த ஊருக்குள்ள நடமாட முடியாது... ம், இன்னும் என்ன நிக்கற, அந்த புள்ளைகளைக் கொண்டு போய் வீட்ல விடு'' என்று அதட்டினான்.

ஆனந்த் பாஞ்சாவுக்கும், ஊர் ஜனங்களுக்கும் நன்றி தெரிவித்து விட்டு வண்டியில் ஏறிக் கொண்டான். அந்தக் காரியத்தை பாஞ்சா அத்தோடு விட்டு விடுவான் என்றுதான் அவன் நினைத்தான். ஆனால் மணிமாறன் அப்படி நினைக்கவில்லை.

வண்டி பார்வையிலிருந்து மறைந்ததும் பாஞ்சா கண்களில் தீப்பொறி பறக்க, சுற்றி நின்றவர்களைப் பார்த்து, ''என்னையே எதிர்த்து நியாயம் பேசத் துணிஞ்சிட்டீங்களாடா...? எப்ப புதிய மனுஷன் ஊருக்குள்ள வந்தாச்சோ, அப்பவே நாம எல்லோரும் கவனமா இருக்கணும் தெரியுதா, ஊர் இரகசியம் அம்பலமானா என்னவாகும்னு நான் சொல்லித்தான் தெரியணுமா?'' என்று சீறினான்.

அதைக் கேட்டதும் எல்லோர் தலைகளும் குனிந்தன. பாஞ்சா தொடர்ந்து, ''வெள்ளியாற்றுக்குக் குறுக்கே அணை கட்ட ஆரம்பிச்சாச்சுன்னா வெளியாள் நடமாட்டம் இ ங் கே பெருகிப் போகும்... நமக்குள்ள ஒற்றுமை இல்லேன்னா, நம்ம பிழைப்பில மண் விழும்... ஞாபகம் வச்சுக்குங்க'' என்றான்.

ஒரு முதியவர் அவனைச் சமாதானப்படுத்த முயன்றவராக ''அதுக்கும் இதுக்கும் சம்மந்தமில்ல ஐயா. ஊர் ஒற்றுமைன்னு வரும் போது விட்டுக் கொடுத்துடுவோமா?'' என்று தலையைச் சொறிந்தார்.

பாஞ்சா அவரைப் பார்த்தான். அவன் முகத்திலிருந்த கோபம் சற்றுத் தணிந்தது. ''மணிமாறனோட அப்பன் உயிரோட இருந்தவரை நமக்கு எவ்வளவு இடைஞ்சல் செய்தான்கறதை மறந்துட்டீங்களா...? ஒருவழியா அவன் ஒழிஞ்சான். இப்ப அவனுக்குப் பிள்ளை நான்தான்னு மணிமாறன் கிளம்பியிருக்கான். அதோட எப்ப அவன், புதுசா வந்திருக்கிற என்ஜினியர் வீட்டோட சகவாசம் வச்சிக்கிட்டானோ அப்பவே நமக்குப் பகையாயிட்டான். ஏன் தெரியுமா? என்ஜினியர் அரசாங்கத்துக்காரர்'' என்றான்.

''மணிமாறனைக் கூப்பிட்டு என்ஜினியர் வீட்டுக்குப் போகப்படாது.. அவர் புள்ளைகளுக்கு வண்டி ஓட்டக் கூடாதுன்னு சொல்லிடுவோம்... நம்ம பேச்சை அவன் மீறிடுவானா என்ன?'' என்று இடையில் ஒரு குரல் ஒலிக்க, ''ஆமாமா, கண்டிப்பா மணிமாறனைக் கூப்பிட்டு எச்சரிக்க வேண்டியதுதான்'' என்று கூட்டத்தில் ஆங்காங்கே குரல்கள் எழுந்தன.

அப்போது சாலையில் பெரும் சத்தத்துடன் புழுதியைக் கிளப்பிக் கொண்டு,

முல்லாவும் இசையும்

★ இசைக் கலையை நன்கு அறிந்து கொள்ள விரும்பினார் முல்லா. ஊரிலே சிறந்த பாடகரான ஒருவரிடம் சென்று, ''ஐயா, நான் இசையைக் கற்க விரும்புகிறேன். எவ்வளவு கட்டணம்?'' என்று கேட்டார்.

''முதல் மாதம் ஐந்து பொற்காசுகள். பின்னர் இரண்டாம் மாதத்திலிருந்து ஒரு பொற்காசுதான் கட்டணம்,'' என்றார் பாடகர். அதைக் கேட்ட முல்லா, ''என்னிடம் ஒரு காசு இருப்பதால் அதை வாங்கிக் கொண்டு, இரண்டாம் மாதத்துப் பாடத்திலிருந்து கற்றுத் தாருங்கள்'' என்றார்!

-- ஏ. ஹரிகிருஷ்ணன், எலவனாசூர்.



பெரிய மரங்களையும் வேரோடு பெயர்த்தெடுக்கும் சக்திவாய்ந்த புல்டோசர் வண்டிகளும், மண்ணை அகழ்ந்து வெளியேற்றும் இயந்திரப் பொறிகளும், சிறிதும், பெரிதுமான லாரிகளும் அணை வேலைக்காக வருவதை அவர்கள் பார்த்தனர்.

''நான் சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கட்டும்'' என்ற பாஞ்சா அவசரமாகத் திரும்பிச் செல்ல எத்தனித்தான்.

அருகில் நின்று கொண்டிருந்த நாகராஜன், ''ஐயா'' என்று அழைத்துக் கொண்டு அவன் பின்னாலேயே வர, நின்று திரும்பிப் பார்த்தவன் ''இனி, நீ வண்டி ஓட்டிப் பிழைக்க வேண்டாம், உனக்கு வேற வேலை வச்சிருக்கேன், என் கூட வா'' என்று அவனை இழுத்துக் கொண்டு சென்றான்.

சந்திரகிரிக்கு வந்த ஒரு மாதத்தில் ஆனந்தும், அஸ்வினியும் தங்கள் பட்டணத்து வாழ்க்கையை ஓரளவு மறந்து கிராமியச் சூழலுக்கு மனதைப் பழக்கப்படுத்திக் கொண்டனர். ரம்மியமான அந்த மலையடிவார கிராமத்தின் இயற்கை அழகு அவர்கள் மனதைக் கொஞ்சங் கொஞ்சமாகக் கவர்ந்து கொண்டது. மடிப்பு மடிப்பாக விரிந்து கிடக்கும் மலைகளும், மேகந் தவழும் முகடுகளும், பாடிப் பறக்கும் பறவைகளும் அவர்களது ஓய்வு நேரங்களைப் பெரிதும் பகிர்ந்து கொள்ளலாயின.


அன்று பள்ளி விடுமுறை நாளானதால், இருவரும் வெள்ளியாற்றின் கரையோரமாகக் கிளைகளைப் பரப்பிக் கொண்டு நின்ற ஒரு பெரிய மரத்தின் வேரில் கட்டப்பட்டிருந்த படகில் ஏறி உட்கார்ந்தவாறு, சுழித்து ஓடும் நீரோட்டத்தைப் பார்த்துக் களித்துக் கொண்டிருந்தனர். தன் பெயருக்கேற்ப, காலை வெயிலில் பளபளவென்று ஜொலித்தவாறு பாய்ந்தோடிக் கொண்டிருந்தது வெள்ளியாறு.

நீர்த் திவலைகளை அள்ளித் தங்கை மீது தெளித்து மகிழ்ந்த ஆனந்த், திடீரென்று, ''ஏய், படகு நகருது பாரு'' என்று கூச்சலிட்டான்.

அஸ்வினி திடுக்கிட்டுப் பார்க்க, மரத்து வேரில் கட்டியிருந்த படகு விலகி விலகி வந்து, மிதந்து, நதியின் வேகத்தில் கலந்து போக ஆரம்பித்தது. படகைச் சுற்றிச் சுழன்று ஓடும் நீரின் வேகத்தைப் பார்க்கப் பார்க்க இருவருக்கும் கதிகலங்கியது.

மரவேரில் கட்டியிருந்த படகு எப்படி அவிழ்த்துக் கொண்டது என்று புரியாமலும், இதிலிருந்து எப்படித் தப்பிக் கரை சேர்வது என்று தெரியாமலும் இருவரும் கலங்கினர்.

-- வளரும்.




சிகப்பின் பிறப்பு

★ 'டாம்பியர்' என்பவர் வருமான இலாகாத் தலைவராக இருந்த போது, ஆஷ்லே ஈடன் அவருடைய காரியதரிசியாக இருந்தார். ஈடனின் தலைமயிர் செக்கச் செவேலென்று காட்சியளித்தது. அவர் ஒரு புதுமைப்பிரியர். அவசரக் குறிப்புகள் வரைவதற்கு அப்போது சிவப்புப் பென்சில் இந்தியாவில் தோன்றாத காலம் அது. ஒருநாள் வெளிநாட்டு நண்பர் ஒருவரிடமிருந்து ஈடன் ஒரு சிவப்புப் பென்சிலைப் பெற்றார்.அதை எப்படியாவது பயன்படுத்தி ஒரு புதுமையைத் தோற்றுவிக்க வேண்டுமென்று துடிதுடித்தார். அப்போது இலாகாத் தலைவரிடமிருந்து ஒரு குறிப்பு வந்தது. ஒரு சுங்கவரி விவகாரத்தின் முடிவு என்னவாயிற்று என்று கேட்கும் குறிப்பு. அதைப் பார்த்ததும் ஈடன் சிவப்புப் பென்சிலை உபயோகப்படுத்துவதற்கு நல்ல சமயம் என்று மகிழ்ந்தார். ''விவகாரம் தீரவில்லை. சர்க்காரிடமிருந்தும் உத்தரவு எதுவும் இல்லை - ஆஷ்லே ஈடன்'' என்று ஓர் ஓரத்தில் சிவப்பு பென்சிலில் எழுதி அனுப்பி வைத்தார். டாம்பியர் ஈடனிடமிருந்து வந்த குறிப்பை ஆச்சரியத்தோடு பார்த்தார். ''அப்பப்ப இந்த ஈடன் படுத்தும் பாடு சகிக்கவில்லை. பென்சிலைச் சிவப்பு மயிரில் தோய்த்து எழுதியிருக்கிறார்'' என்று இரைந்தார். இந்த நிகழ்ச்சிதான் அரசாங்க அலுவலகத்தில் சிவப்பு பென்சில் பயன்படுத்தக் காரணமாயிற்று.

--பஞ்சை ஆறு. அண்ணாதுரை.
பஞ்சலிங்கபுரம்.

பிருந்தாவனக் கவியரங்கம்



உண்மைதான்

துன்பம் கண்டு துவளாதே
துவண்டு நீயும் தூங்காதே
இன்பம் கண்டு இல்லையென
இனியும் வீணில் கலங்காதே

காலும் கையும் இருக்கும்வரை
கவலை என்பது நமக்கில்லை
நாளும் நன்கு உழைத்திட்டால்
நன்கு உயரலாம் மறவாதே!

ஒழுங்காய் கடமைகள் செய்திடுவாய்
ஒவ்வாத பழக்கம் கைவிடுவாய்
எழுவாய் என்றும் நன்மைதான்
எல்லாம் உணர்வாய் உண்மைதான்

— பி. கே. நித்யகல்யாணி,
தி. கட்டபொம்மன் மாவட்டம்.



நல்ல பிள்ளை நீ

பள்ளி சென்று பாடங் கற்றால்
நல்ல பிள்ளை நீ!
பணிவும் அன்பும் கொண்டிருந்தால்
நல்ல பிள்ளை நீ!
துள்ளி ஆடி மகிழ்ந்து நின்றால்
நல்ல பிள்ளை நீ!
சோம்பலின்றிக் கடமை செய்தால்
நல்ல பிள்ளை நீ!
வைகறையில் துயிலெழுந்தால்
நல்ல பிள்ளை நீ!
வண்ணத் தமிழ்ப் பற்றுக் கொண்டால்
நல்ல பிள்ளை நீ!
பொய்மை பேச மறுத்து நின்றால்
நல்ல பிள்ளை நீ!
பொழுதெல்லாம் உழைத் துயர்ந்தால்
நல்ல பிள்ளை நீ!
அன்னை தந்தை வணங்கி நின்றால்
நல்ல பிள்ளை நீ!
அடுத்தவர்க்கு உதவி செய்தால்
நல்ல பிள்ளை நீ!
என்றும் யார்க்கும் நன்மை செய்தால்
நல்ல பிள்ளை நீ!
எதற்கும் அஞ்சாத் துணிவு கொண்டால்
நல்ல பிள்ளை நீ!

— முத்து முருகன், இட்டக்குடி.

பச்சைக் கிளியே வா!


பச்சைக் கிளியே பச்சைக் கிளியே
பறந்து பறந்தே வா வா வா
இச்சை யுடனே கொஞ்சுத் தமிழை
என்னிடம் கற்க வாவாவா!

கழுத்தை சுற்றியே ஆரம் பெற்றாய்
கவர்ச்சிக் கிளியே வாவாவா
பாலும் பழமும் நிறைய தருவேன்
பயப்படா மல் வாவாவா!

கூண்டிற் குள்ளே இரையே யாக்கிக்
கொடுமை செய்யேன் வாவாவா
வேண்டும் சுதந்திரம் யாவும் உண்டு
விரும்பி விரைந்தே வாவாவா!

— க. கோகிலவாணி, சங்கமங்கலம்.




ஏன் உங்க நாய் நான் சாப்பிடுவதையே பார்த்துக் கொண்டிருக்கிறது?
நீங்க அதன் தட்டில் சாப்பிடுவதைக் கண்டு பிடித்து விட்டதுன்னு நினைக்கிறேன்!
எம். ஆனந்தன்
உங்க பத்திரிகையில் மட்டும் நிறையக் கதைகள் வருதே. எப்படி?
நாங்க கதைகளை ஆசிரியர்களிடமிருந்து வாங்காமல் பழைய பேப்பர்காரனிடமிருந்து வாங்கிடறோம் அதான்!
ஆர். செந்தில்குமார்
அவர் போலி டாக்டர்னு எப்படிக் கண்டு பிடிச்சே?
எனக்கு சர்க்கரை வியாதின்னா போது எவ்வளவு கிலோ சர்க்கரை இருக்குன்னு கேட்டாரே...
கே.எல். குமணன்
சிரி...
காக்கையாரே! பாட்டுப் பாடுன்னு தந்திரமா கேட்டு உன் வடையைத் தின்னுவிட்டேன் பார்த்தியா.
நரியாரே! ஏமாந்தது நீ தான்... அந்த வடை ஊசிப் போய் நூல் வந்தது. அதான் போட்டுவிட்டேன்!
மணப்பூண்டி தமிழ்ச்செல்வி
உங்க ஆட்டோ சத்தம் அதிகம்னு சொன்னியே... குறைவாத்தானே சத்தம் போடுது?
நான் சொன்னது ஆட்டோவுக்கான சார்ஜ் சத்தத்தை!
க. இராமலிங்கம்

அவசரப் பட்டு...

நெல்லை ஆ. கணபதி



சைதாப்பேட்டையில் பிரம நாயகம், தெய்வநாயகம் என இரு நண்பர்கள். இருவரும் படிப்பிலே கெட்டிக் காரர்கள். எங்கு சென்றாலும் சேர்ந்தே செல்வார்கள். சேர்ந்தே விளையாடுவார்கள். விளையாட்டுப் போட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி என்று எதையும் விட்டு வைக்காது கலந்து கொண்டு பரிசைத் தட்டிச் செல்வார்கள். பள்ளிக்கூடத் துக்குக் கேடயமும் பெற்றுத் தந்தி ருக்கிறார்கள்.

பத்தாம் வகுப்பு அரசுத் தேர்வு முடிவுகள் வெளியான போது தங்கள் எண் இல்லாததைக் கண்டு துடித் தார்கள். ''தோல்வி அடைஞ்சிட் டோமே! அப்பா அம்மா திட்டு வார்களே!'' என்று இருவரும் வேத னைப்பட்டனர்.

வீட்டை விட்டுக் கிளம்பி கால் போன போக்கில் சென்றார்கள்.

''டேய் தெய்வநாயகம்! பரீட்சை நன்றாகவே எழுதியிருந்தோம். தோல்வியடைஞ்சது தாங்க முடிய லைடா!'' என்றான் பிரமநாயகம்.

''திக்! திக்! என்று நெஞ்சு துடிக் குதுடா எனக்கும். ஊரை விட்டே ஓடிப் போயிடலாம்!'' என்றான் தெய்வ நாயகம்.

''வெளியூருக்குப் போய் என்ன பண் றது? எனக்கு ஒரு ஐடியா வருது. இருட்டும் வரை சுத்திக் கொண்டே இருப்போம். பிறகு வெளியூர் ரயில் தண்டவாளத்துல விழுந்து செத்துப் போயிடுவோம்'' என்றான் பிரம நாயகம்.

ரயிலுக்கு முன்னால் விழுந்து இறப் பது என்று இருவரும் முடிவு செய்து கொண்டார்கள்.

சாயங்காலம். மார்க்கெட் ரயில்வே கேட் அருகே உள்ள பிள்ளையார் கோயிலுக்குச் சென்றார்கள். ''பிள்ளை யாரப்பா! உன்னைக் கும் பிட்டு விட்டுப் பரீட்சைக்குப் போனோமே. பாஸ் ஆயிட்டா சிதறு தேங்காய் போடறதா வேண்டிக்கிட்டோமே! இப்ப பெயிலாயிட்டோமே! சாகவும் போறோமே!'' என்று மனதுக்குள் அழுது சாமி கும்பிட்டார்கள். பிள்ளை யார் முகத்தில் வழக்கம் போல புன்னகை இருந்தது.

இருட்டியது. ரயில் வருகிற நேரம். கேட் மூடுவதற்கு மணியடித்தது. இருவரும் அருகில் உள்ள புதரில் பதுங் கிக் கொண்டார்கள். கேட் அடைத் ததும் ரயில் வருவது தெரிந்தது. உட னேயே தண்டவாளத்தில் படுத்துக் கொண்டார்கள். இதோ! ரயில் வந்து விட்டது. முன்பக்க விளக்கு நெருங்கி விட்டது என்று கூறிக் கண்களை மூடிக் கொண்டார்கள். ''கிரீச்'' என்று சப்தம்

கேட்டது. ரயில் தங்கள் மேல் ஏறி விட்டது என்று நினைத்தார்கள். ஆனால் ரயில் 'திடீர்' என்று நின்று விட்டதே? நம் மீது ஏறவில்லையே என்று எழுந்தார்கள். திடீரென்று பயணிகளில் ஒருவர் அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்ததால் ரயில் நின்று விட்டது. 'திருடன் திருடன்' என்ற கூக்குரல் கேட்டது. யார் யாரோ ஓடினார்கள். போலீசார் வருவதைக் கண்டதும் நண்பர்கள் இருவரும் பயந்து ஓட்டம் பிடித்தார்கள்.

''என்ன இது? பிள்ளையாரைக் கும்பிட்டுச் சாகப் போனது தப்பாப் போச்சே! நாம் தினசரி கும்பிடுகிற பிள்ளையார் நம்மைக் காப்பாத்திட்டாரே!'' என்றான் பிரமநாயகம்.

''சரி! சரி! வா அடுத்த முயற்சி. கடற்கரைக்குப் போகலாம். ஜனங்களெல்லாம் வீட்டுக்குத் திரும்புகிற நேரம் ஆயிடுச்சு.ரெண்டு பேரும் ஒன்றாகச் சேர்ந்து கடலிலே இறங்கிடலாம்'' என்றான் தெய்வ நாயகம்.

''கடல்தான் சரி. ரயில் மாதிரி கடல் பிரேக் பிடிக்காது!'' என்றான் பிரமநாயகம்.

கடற்கரையில் காற்று வாங்கிய எல்லோரும் வீட்டுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார்கள்.

''டேய் தெய்வநாயகம். சாகிறதோ சாகிறோம், கொஞ்சம் தேங்காய், மாங்காய் பட்டாணி சுண்டல் வாங்கித் தின்று விட்டுச் சாகலாம்'' என்றான் பிரமநாயகம்.

''சரி! சரி! காசு நான் வைச்சிருக்கேன். ரிசல்ட் பார்க்கக் கிளம்பும் போது அம்மா கொடுத்தாங்க. பாஸானதும் கோயிலுக்குப் போய்ப் பிள்ளையாருக்குச் சிதறு தேங்காய் போடச் சொன்னாங்க. நாமதான் பெயிலாகிட்டோமே! கடைசியா சுண்டல் சாப்பிட்டு விட்டுச் சாகலாம்'' என்றான் தெய்வநாயகம்.

சுண்டல் வாங்கித் தின்றார்கள்.

''இந்தப் பொட்டலம் சுற்றிய தாளைப் பிரித்துப் பார்க்கணும். தூக்கி எறிந்திடக் கூடாது. சில சமயம் நல்ல செய்திகள் அதில் அச்சிட்டு இருக்கும் என்று எங்க அம்மா அடிக்கடி சொல்வாங்க'' என்று கூறித் தாளை விரித்தான் தெய்வநாயகம்.

''டேய்! டேய்! இங்கே பாருடா! பிள்ளையார் படம்தான்டா அச்சிட்டிருக்கிறது. இந்தப் பிள்ளையார் நம்மை விடாம துரத்தறார்! நிம்மதியா நம்மைச் சாக விட மாட்டார் போலிருக்கு. பேசாம இந்தப் பிள்ளையாரையும் கையில் வைத்துக் கொண்டு கடலிலே குதித்திடலாம். அவரும் சேர்ந்து தண்ணீரிலே மூழ்கிடுவார்'' என்றான் பிரம நாயகம்.

''ஆமான்டா! ஒன்று, ரெண்டு, மூன்றுன்னு குதிக்கிறதுக்கும் பொருத்தமா இருக்கும். நீ ஒன்று. நான் ரெண்டு, பிள்ளையார் மூன்று! ரெடி, ரெடி, அதோ பெரிய பெரிய அலைகள் வருது வந்துட்டுது.''

தடால்.. தடால்...'' - அவ்வளவுதான் இருவரும் குதித்தே விட்டார்கள். இரவு முழுவதும் வீட்டிற்குத் திரும்பாததால் மறுநாள் இருவரது பெற்றோர்களும் உறவினர்களும் ஊரெல்லாம் தேடினார்கள். சக பள்ளி மாணவர்கள் இவர்களின் எண்கள் ரிசல்ட்டில் வெளிவராத விபரத்தைக் கூறினர். மார்க்கெட் ரயில்வே கேட்டருகே இரு சிறுவர்கள் ரயிலில் சாக வந்து, தப்பி ஓடிய செய்தி கிடைத்தது. பெற்றோர்களுக்குப் பகீரென்றது. கடற்கரை சென்று தேடினார்கள். பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் பரீட்சையில் தோல்வி அடைந்த தெய்வநாயகம் பிரமநாயகம் என்ற மாணவர்களைக் காணவில்லை என்ற செய்தி வெளியானது. மறுநாள் போலீசார் தீவிரமாகக் தேடியதில் கடற்



அபாயச் சங்கிலியைக் கண்டுபிடித்தவர்

★ ஜார்ஜ் வெஸ்டிங் ஹவுஸ் என்பவர்தான் ரயிலிலுள்ளோருக்கு ஆபத்து நேரும் போது இழுக்கக் கூடிய அபாயச் சங்கிலியைக் கண்டுபிடித்தார்.

--எஸ். ஜெயஸ்ரீ, திருச்சி - 14.



கரையில் இரண்டு பேரும் அணிந்திருந்த டிரவுசர்கள் கிடைத்தன. எனவே இரண்டு பேரும் கடலில் விழுந்து இறந்து விட்டதாக முடிவு செய்தார்கள்.

பெற்றோர்கள் துடியாய்த் துடித்தனர். ஆனால்..... கடலில் குதித்த தெய்வநாயகமும் பிரமநாயகமும் நினைவு திரும்பிப் பார்த்த போது ஏதோ ஒரு தீவில் உயிருடன் இருப்பது தெரிந்தது. மெதுவாகக் கண் விழித்தார்கள். தங்களைத் தாங்களே கிள்ளிப் பார்த்துக் கொண்டார்கள். கடலிலே குதிச்ச பிறகும் சாகாமல் இருக்கிறோமே! எப்படி? என்று திகைத்தார்கள். மெல்ல எழுந்தார்கள்.

''டேய் பசங்களா! டீ சாப்பிடு நீங்களா?'' என்று கேட்டுக் கொண்டே ஒரு மீனவப் பெண்மணி வந்து சேர்ந்தாள். ''டேய்! பசங்களா! நாங்க இந்தத் தீவில் வசித்து வரும் மீன் பிடிப்போர். நேற்று இரவு மீன் பிடிக்கச் சென்ற போது வலையில் ஏதோ பெரிய ராட்சத மீன்கள்தான் சிக்கி விட்டது என்று இழுத்து வந்தோம். கடைசியில் பார்த்தால் வலையில் நீங்கள் இருந்தீர்கள். நல்லவேளை வலையில் சிக்கியதால் உயிர் பிழைத்தீர்கள். இல்லையேல் ராட்சத மீன்களுக்கு இரையாகி இருப்பீர்கள்!'' என்றாள் அந்தப் பெண்மணி.


அப்படி இரையாகி இருந்தால் பரவாயில்லையே அம்மா! உயிர் பிழைத்ததுதான் பிடிக்கவில்லை என்றார்கள் இருவரும்.

''நீங்கள் அறியாத சிறுவர்கள். உங்களைப் பெற்றவர்கள் இந்நேரம் எப்படித் துடிப்பார்கள் என்பது உங்களுக்குத் தெரியாது. பெற்ற பிள்ளைகளுக்குத் துன்பம் வந்து விடக் கூடாது என்பதுதான் ஒவ்வொரு தாயும் செய்யும் பிரார்த்தனை! என் பிள்ளைகளும் கணவரும் தினமும் கடலில் மீன் பிடிக்கச் செல்லும் போது நல்லபடியாகத் திரும்பி வர வேண்டுமே என்று நான் கும்பிடாத தெய்வம் கிடையாது. சரி! சரி! பயப்படாதீர்கள். டீ குடிச்சிட்டு தோப்புக்குள்ளே இருக்கிற மீனாட்சி அம்மன் கோயில்லே போய்க் கும்பிட்டு வாங்க. மீன்காரங்க குல தெய்வம் மீனாட்சி அம்மன். சாயங்காலமாக மார்க்கெட்டுக்கு மீன் ஏற்றிக் கொண்டு படகு போகும். இரண்டு பேரையும் அதிலே ஏற்றி வீட்டுக்கு அனுப்பி வைக்கிறோம்'' என்றாள் அந்தச் செம்படவப் பெண்.

''வீட்டுக்கா! மறுபடியா?'' என்றார்கள் இருவரும்.

''ஆமா! உங்க வீட்டுக்குத்தான்,'' என்றாள் பெண்மணி!

சரி! சரி! என்று தலையாட்டினார்கள். ''பிட்டுக்கு மண் சுமந்த மதுரைன்னு பள்ளிக்கூடத்திலே படிச்சிருப்பீங்



''எல்லா சப்ஜெக்டிலும் வீக்கா இருக்கியே... உருப்படியாத் தமிழையாவது எப்ப படிச்சுட்டு வர்றே...?''

''ஒன் வீக் கழிச்சு சார்...!''

களே... அந்தப் பிட்டுதான் எங்க சாப்பாடு இன்னிக்கு. நீங்களும் சாப்பிட்டுப் பாருங்க" என்ற பெண்மணி வெளியே ஏதோ வேலையாகப் போனாள்.

தீவு முழுவதும் மரங்கள் பச்சைப் பசேலெனக் காட்சியளித்தன. நடுவில் சிறிய மீனாட்சி அம்மன் கோவில். பழைய காலத்தில் கட்டிய கோயில் மாதிரி இருந்தது.

''அம்மா! தாயே! மீனாட்சி! ரெண்டு தடவை செத்துப் பிழைச்சுட்டோம். இப்போ இங்கே மூணாம் தடவையா முயற்சி பண்ணப் போகிறோம். நீதான் ஆதரவு தரணும்!" என்றான் பிரம நாயகம்.

"தாயே! வேண்டியவர்க்கு வேண்டிய வரமெல்லாம் நீ கொடுப்பாய் என்கிறாங்க. நாங்க கேட்கும் வரம் எப்படியாவது செத்துப் போகணும்கிறதுதான்! பரீட்சையிலே பெயிலான எத்தனையோ பேரு ரயிலிலே குதிச்சுச் செத்துப் போயிடறாங்க. ஆனால், நாங்க சாகவில்லை. ரயில் நின்று போச்சு. கடலில் விழுந்தோம்! அப்பவும் சாகலை. மீன் பிடிப்பவர்கள் காப்பாற்றி விட்டாங்க. நாங்க பிள்ளையாரை மறந்ததே இல்லை! அதனாலதானோ என்னவோ இரண்டு தடவையும் பிள்ளையார் எங்களைப் பிழைக்க வைச்சிட்டார்! இப்போ மூன்றாவது தடவையா பக்கத்திலே நிற்கிற மரத்திலே தூக்குப் போட்டுச் சாகப் போகிறோம். நீதான் எங்களைச் சாகடிக்கணும்'' என்று கும்பிட்டார்கள்.

அருகிலுள்ள படகில் கட்டியிருந்த கயிற்றை எடுத்தார்கள். கயிற்றை வீசி மரக்கிளையில் சுருக்குப் போட்டார்கள். பலமாக இருக்கிறதா என்று இழுத்துப் பார்த்தார்கள். "டமார்!" என்ற சப்தம் பயங்கரமாகக் கேட்டது.

இரவில் மீன் பிடித்து விட்டு வந்த அசதியால் தூங்கிக் கொண்டிருந்த மீனவர்கள் திடுக்கிட்டுக் கண் விழித்தார்கள். "அம்மன் கோயில் பக்கம் மரம் ஒடிந்து விழுந்து விட்டது. வாருங்கள். வாருங்கள்" என்று எல்லோரும் கத்தினார்கள். எல்லா மீனவர்களும் அந்தப் பெண்மணியும் ஓடி வந்து கூடினார்கள். ஒடிந்து விழுந்த மரக்கிளைகளுக்கிடையே சிக்கித் துவண்டு கிடந்த இரண்டு பையன்களையும் மெதுவாகத் தூக்கினார்கள்.

"பலத்த அடி! ஆனால் சாகவில்லை" என்றார் ஒருவர்!

"என்னடா? பசங்களா பெரிய பெரிய புயல் அடிக்கும்போதெல்லாம் எங்களைக் காப்பாற்றுகிற குலதெய்வம் மீனாட்சி அம்மன்தான் உங்களையும் காப்பாற்றி உள்ளது. நீங்க கடலில் குதித்த போது மீன் வலையில் சிக்கியதால் உங்களை இங்கே கொண்டு வந்தோம். இங்கே வந்த பிறகும் தூக்குப் போட்டுச் சாகப் பார்த்தீங்களா? நல்லவேளை - உளுத்துப் போன மரக்கிளை. நீங்க இழுத்ததும் விழுந்து விட்டது! அதுவும் நல்ல காலம்தான். இல்லையானால் யார் தலையில் விழுந்திருக்குமோ? நீங்களும் பிழைச்சீங்க!'' என்றார் ஒரு பெரியவர்.

"இந்தப் பசங்களை நம்ப முடியாது. இன்னிக்கே கொண்டு போய் அவங்க வீட்டிலே சேர்த்திடுங்க!" என்றாள் ஒரு பெண்மணி.

அவ்வாறே ஒரு படகில் இருவரையும் ஏற்றிக் கொண்டு வந்து சேர்ந்தார்கள் மீனவர்கள். செத்துப் போன பையன்கள் திரும்பி வந்ததைக் காணத் தெருவே திரண்டது. பெற்றோர்கள் கட்டித் தழுவிக் கண்ணீர் விட்டனர்.

''பரீட்சையில் தோல்வியடைந்தால் சாகணுமா? இதற்காகவா பரீட்சை வைக்கிறார்கள்? ஒரு ரயில் கிடைக்காவிட்டால் அடுத்த இரயிலில் பயணம் செய்வதுதானே முறை? நீங்கள் கற்ற

கல்வி இதைத்தான் சொல்லித் தருகிறதா?" என்றார் ஒரு பெரியவர்.

''கஜினி முகமது பதினேழு தடவை தோல்வியடைந்த பிறகும் நம்பிக்கை இழக்காமல் முயற்சி செய்து வெற்றி பெற்றது போல் முயலலாமே. அறிவாளியான உங்களைப் போன்ற மாணவர்கள் இப்படிச் சாகத் துணியலாமா? நல்லவேளை உயிர் பிழைத்தீர்கள். உங்கள் தேர்வு எண் பத்திரிகையில் வெளிவரவில்லை என்று பயந்து விட்டீர்களே. அச்சுப் பிழையாகவும் கூட சில எண்கள் விடுபட்டுப் போயிருக்கலாம் அல்லவா? இதோ பாருங்கள். அடுத்த நாள் பத்திரிகையில் திருத்தம் வெளியிட்டிருக்கிறார்கள். மதிப்பெண் பட்டியலும் வந்து விட்டது. இருவரும் வெற்றி பெற்றிருக்கிறீர்கள். ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டம்'' என்பது போல் அவசரப்பட்டு விட்டீங்க. ஆனால், கும்பிடும் தெய்வம் கை விடவில்லை என்று தட்டிக் கொடுத்தார் தலைமை ஆசிரியர்.

''டேய் பசங்களா! உங்களை எப்படி எப்படியெல்லம் வளர்த்தோம்! அவசரப்பட்டுப் பதறி என்ன காரியம் செய்ய இருந்தீர்கள்?'' என்று கண்ணீர் விட்டனர் தாய்மார்கள்.

''அவசரப்பட்டு செத்துப் போயிருந்தால் இந்த மகிழ்ச்சியை அனுபவித்திருக்க முடியுமா? பெயிலானால் வீட்டை விட்டு ஓடுவதும் செத்துப் போக முயல்வதும் முட்டாள்தனம்'' என்றான் பிரமநாயகம்.

''ஆமாண்டா. மறுபடி முயன்று பாஸ் பண்ணிக் காட்டுவதுதான் புத்திசாலித்தனம்'' என்றான் தெய்வநாயகம்.

பிள்ளையாரை எண்ணிக் கை தொழுது மகிழ்ந்தனர் நண்பர்கள் இருவரும்.

சரித்திர தண்டனை!

★ இங்கிலாந்திலுள்ள கார்லைல் கதீட்ரலுக்குத் தண்டனை விதித்தான் ஒரு மன்னன். அந்தத் தண்டனையை அது 180 வருட காலம் அனுபவித்தது. அக்கோயிலில் மணியடிப்பது கூடாது. பிரார்த்தனை செய்ய யாரும் போகக்கூடாது என்று நிபந்தனையிட்டான். காரணம் 1745 ஆம் ஆண்டில், ''ஸ்டுவர்டுகள்'' பிரிட்டனின் ஆட்சியைக் கைப்பற்ற முயன்ற போது இளவரசன் சார்லி தனது துருப்புக்களுடன் இந்தக் கதீட்ரலுக்குள்நுழைந்தான். அவனைவரவேற்கும் முறையில் மணி அடிக்கப்பட்டது. ஆனால், அவனோ இதைத் தன்னைக் காட்டிக் கொடுக்கும் செய்கையாகக் கருதிவிட்டான். புரட்சி இளைஞர்களை அடக்கி இரண்டாம் ஜார்ஜின் ராணுவம் வெற்றி பெற்ற போது அந்தக் கதீட்ரலுக்கு மேற்சொன்ன தண்டனை அளிக்கப்பட்டது! 1925 வரை இந்தத் தண்டனை அமுலில் இருந்தது. அதற்குப் பிறகு மன்னன் ''யார்க் ஆர்ச்பிஷப்'' பழைய மணியை அகற்றிவிட்டுப் புதிய மணியை வாங்கிக் கட்டினார்! தண்டனை ரத்தாயிற்று. 180 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் மணியோசை முழங்கியது. இது உலக வரலாற்றில் நடந்த உண்மையானதும் விநோதமானதுமான தண்டனை ஆகும்.

--என். நாகராஜன், தேனி.


நீ என்ன செய்வாய்?

★ அறிவியல் மேதை ஐன்ஸ்டீன் ஒரு சமயம் நீக்ரோ சிறுவன் ஒருவனைச் சந்தித்தார். அழுக்குத் தோற்றம் கொண்டிருந்த அவனிடம், ''நீ முகம் கழுவிக் கொண்டு என்னிடம் வந்தால், உனக்கு நான் 25 சென்ட் தருகிறேன்'' என்றார். அவ்வாறே செய்து அவன் காசைப் பெற்றுக் கொண்டான்.

ஐன்ஸ்டீன் அவனிடம், ''இந்தக் காசை என்ன செய்யப் போகிறாய்?'' என்று கேட்டார்.

அதற்கு அச்சிறுவன், ''நீங்கள் உங்கள் தலைமுடியைச் சரியாக வெட்டிக் கொண்டு வந்தால் உங்களுக்குத் தருகிறேன்!'' என்றான் பொறுமையாக!

-- சங்கமங்கலம் எஸ் மனோகரன்.


அல்வா ஊஞ்சல்
தஞ்சை விரா
எங்க வீட்டிலே அல்வா செஞ்சிருக்காங்களே!!
எங்கே... காமி பாக்கலாம்..
இதோ பாருடா !
ஐய்..அல்வா
ரொம்ப ருசியா இருக்கும்டா !
எனக்கும் கொஞ்சம் கொடுடா..
போடா! கிள்ளவே முடியல !
டேய் ஏன்டா அழுவுறே?
பின்ன என்னடா! ரெண்டு பேரும் சாப்பிடலாம்னு... கிள்ள முடியலையே!
கவலைப் படாதே! நான் சூப்பர் ஐடியா சொல்றேன்
நீயும் நானும் சேர்ந்து இழுத்துப் பார்க்கலாம்.
சரிடா!!
இருவரும் இழுக்க ஆரம்பித்தார்கள் இழுக்க இழுக்க நீளமாகப் போய்க் கொண்டே இருந்தது
டேய் அப்படியே மரத்துல கட்டுவோமா?
சரி! அப்படியே செய்யலாம்.
சரி! ரெண்டு பேரும் கட்டிடலாம்.
அல்வாவை மரத்தில் கட்டி இருவரும் ஊஞ்சல் ஆடத் தொடங்கினார்கள்.



ஒரே ஓர் பையன் மட்டும் கணக்கைப் போடாமல், வேறு எங்கோ தன் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தான்.

ஆசிரியருக்கு மிகவும் கோபம் வந்து விட்டது.

''என்ன செய்கிறாய் நீ...? கணக்கிற்கு விடை கண்டாயா இல்லையா...?'' என்று மிரட்டினார்.

''கண்டு விட்டேன் ஐயா...'' என்றான் அந்த மாணவன்.

''எங்கே... குறிப்புப் புத்தகத்தை எடு பார்க்கலாம்...'' என்றார் ஆசிரியர்.

மாணவன், ''இந்தக் கணக்கிற்கான விடையை நோட்டில் போட்டுப்

சுதந்திரம் எனது பிறப்புரிமை!

பார்க்காமல் என் மனதாலேயே கண்டுவிட்டேன் ஐயா...'' என்றான் மாணவன்.

''விடை என்ன...?'' என்றார் ஆசிரியர்.

அவன் பளிச்சென்று சரியான விடையைச் சொல்லி விட்டான். ஆசிரியர் ஆச்சர்யப்பட்டுப் போனார்.

இந்த நிகழ்ச்சி, துவக்கப் பள்ளி வகுப்பில் நடந்தது. பெரியவன் ஆனதும் அந்த மாணவன் பல்கலைக் கழக வகுப்புக்குச் சென்றான்.

கல்லூரி வகுப்புகளில், பேராசிரியர்கள் மணிக்கு மணி மாறி மாறி வந்து, பல்வேறு பாடங்களில் சொற்பொழிவு ஆற்றுவார்கள். அதைக் கேட்கும் மாணவர்கள், உடனுக்குடன் அந்தப் பாடங்களில் குறிப்பு எடுத்துக் கொள்வார்கள்.

ஆனால் அந்த மாணவன் அப்படியெல்லாம் செய்வதில்லை. பேராசிரியர் ஒருவர் இதைக் கவனித்து விட்டார்.

எனவே, ''தம்பி... எழுந்திரு.. நான் இத்தனை நேரமாக வகுப்பில் பாடம் சொல்லிக் கொண்டு இருக்கிறேன்... நீ ஏன் எந்தக் குறிப்பும் எடுத்துக் கொள்ளாமல் அமர்ந்திருக்கிறாய்...?'' என்று வினவினார்.

அதற்கு அந்த மாணவன், ''ஐயா.. தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும்... நான் உங்கள் சொற்பொழிவை என்னுடைய மனத்தையே ஏடாக்கி, அதில் உங்கள் கருத்துக்களை நினைவு எனும் குறிப்புகளாகப் பதிவு செய்து கொண்டு விட்டேன்...'' என்றான்!

''அப்படியானால், இன்றைய தினம் நான் போதித்த பாடத்தைத் திருப்பிச் சொல் பார்க்கலாம்...'' என்று சவால் விட்டுச் சீறினார் பேராசிரியர்.

''சரி ஐயா...'' என்ற அந்த மாணவன், ஒரு வரி கூட விடாமல் அந்த ஆசிரியர் சொன்னவற்றை அப்படியே திருப்பிச் சொல்லி எல்லோரையும் அயர வைத்தான்.

அந்த மாணவனுக்கு அத்தகைய நினைவு ஆற்றல் ஏற்பட்டதற்குக் காரணம் என்ன தெரியுமா? சிறு குழந்தையாக இருந்த போதே,

ஜானகிமணாளன்

அவனுடைய தந்தை தினசரி காலையில் அவனுக்கு ஸ்லோகங்களைச் சொல்லிக் கொடுப்பார். அவற்றைக் கவனமாகக் கேட்கும் அவன், அன்றைய தினம் மாலையிலேயே அதைப் பிழை ஏதும் இன்றித் திரும்பச் சொல்லி விடுவான். அப்படி ஒப்பித்தால் உடனே தந்தை அவனுக்கு ஒரு காசைப் பரிசாக அளிப்பார். அந்தப் பரிசு அவனை ஊக்கப்படுத்தியது. பள்ளிப் படிப்பு முடிவதற்குள் அவன் கையில் கொஞ்சம் கணிசமான தொகை சேர்ந்து விட்டதோடு அவனுடைய அறிவுத் திறனும் வளர்ந்து விட்டது.

அந்த மாணவனிடம் மற்றொரு குணமும் உண்டு. வகுப்பில் பாடம் கேட்டுக் கொண்டே இருப்பான். ஆசிரியர் நல்ல கருத்துக்களைக் கூறும் போது, அவற்றைக் கிரகித்து அப்படியே மனதில் பதியவைத்துக் கொள்வான். அதே ஆசிரியரின் பாடம் சுவையற்ற வெட்டிப் பேச்சாகும் போது, அதைக் கேட்க அவனிடம் பொறுமை இராது. சட்டென்று எழுந்து வகுப்பை விட்டு வெளியேறி விடுவான்! ஆசிரியரின் பொல்லாப்பு வருமே என்பது பற்றியெல்லாம் கவலைப்பட மாட்டான். இளம் வயதில் இப்படி நடந்து கொண்டதால், அவனிடம் தனக்குப் பிடிக்காததை, அல்லது தன் கருத்துக்கு மாறானதை எதிர்த்து நிற்கும் துணிவு ஏற்பட்டது.

பள்ளிப் படிப்பை முடித்துக் கல்லூரியில் அடி எடுத்து வைத்த போது அவனுக்குப் பதினான்கே வயது! உடனேயே அவனுக்குத் திருமணம் நடந்து விட்டது. மனைவி பெயர் தபீபாய் என்பது.

ஒரு சமயம் அவன் தன் மனைவியின் பிறந்த வீட்டுக்குச் சென்றிருந்தான். அப்போது ஒரு சம்பவம் நடந்தது.

ஒரு பிச்சைக்காரன் வந்து பிச்சை கேட்டான். தபீபாய் ஒரு பிடி அரிசியை எடுத்து வந்து அவனுக்குப் போட்டாள்.

அப்போதெல்லாம் வீடுகளில் பெண்கள் தம்முடைய நகை நட்டு களைக் கழற்றிச் சமையல் அறையில் ஏதாவது டப்பா அல்லது சிறிய பெட்டிகளில் போட்டு வைப்பது வழக்கம். தபீபாயின் தாயும் தன் மூக்குத்தியை அப்படித்தான் அரிசிப் பானையில் போட்டு வைத்திருந்தாள். தபீபாய்க்கு அது தெரியாது. பிச்சைக் காரனுக்கு அவள் அரிசியை எடுத்து வரும் போது மூக்குத்தியும் வந்து விட்டது.

தபீபாயும் அதைக் கவனிக்காது பிச்சைக்காரனின் பாத்திரத்தில் போட்டு விட்டாள். போட்ட பிறகுதான் பிச்சைக்காரனின் திருவோட்டில் மூக்குத்தி விழுந்து விட்டதைக் கவனித்தாள்.

தபீபாய் உடனே பதறினாள். "மூக்குத்தியும் விழுந்து விட்டது... அதை எடுத்துக் கொடு..." என்று பிச்சைக் காரனிடம் கேட்டாள். அவ னும் அரிசியைப் புரட்டிப் பார்த்து மூக்குத்தியை எடுத்தான்.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த தபீபாயின் கணவன் எழுந்து பிச்சைக்காரனுக்கு அருகில் வந்தான்.

தபீபாய் கணவனை நிமிர்ந்து பார்த்தாள். "ஒரு பிடி அரிசியைப் பிச்சைக்காரனின் பாத்திரத்தில் போட்டாயே, அதை நீ திரும்பப் பெற்றுக் கொள்வாயா? பிச்சை போட்ட பொருள் அவனுக்குத்தானே சொந்தம்...! அரிசியைத் திரும்பப் பெற மறுக்கும் நீ, அதனுடன் போட்டு விட்ட மூக்குத்தியை மட்டும் திரும்பக் கேட்பது நியாயமாகுமா? அந்த உரிமை உனக்கு ஏது?" என்று கேட்டான்.

இவ்வாறு சிறு வயது முதலே, நேர்மையும் துணிவும் மிக்கவராக இருந்த அந்தச் சிறுவன்தான் லோகமான்ய பாலகங்காதர திலகர்.

திலகர் மகாராஷ்டிர மாநிலம், ரத்தினகிரி என்ற நகரில் 1856 ஆம் ஆண்டு ஜூலை 13 ஆம் நாள் பிறந்தார். தந்தை கங்காதரர் என்று தலைசிறந்த வடமொழி அறிஞர். அவருக்கு ராமச்சந்திரர் என்று ஒரு மகன். அவருடைய தவப் புதல்வனாகப் பிறந்தவர்தான்* பாலகங்காதர திலகர்.

பாலகங்காதரர் என்பது திலகரின் பாட்டனார் பெயர். பெயருக்கு ஏற்ற விதம் அவர் திலகம் போன்று வாழ்ந்தார். மக்களின் நன்மதிப்பைப் பெற்று விளங்கிய காரணத்தால் 'லோகமான்யர்' எனப்பட்டார். அவர் தலைசிறந்த தேசபக்தர்.

திலகர் தனது வாழ்நாள் முழுவதும் நமது பாரத நாட்டு விடுதலைக்காக உழைத்தார். மக்களிடம் நாட்டுப் பற்றை வளர்த்தார். 'சுயராஜ்யம் எனது பிறப்புரிமை. நான் அதை அடைந்தே தீருவேன்' என்று வீர முழக்கமிட்டார்.



ஆங்கில அரசு அவர் மீது தேசத் துரோகக் குற்றம் சாட்டி நாட்டை விட்டு வெளியேற்றிப் பர்மாவில் மாண்டலே நகரச் சிறையில் அடைத்தது. அங்கு அவர் பலவிதக் கொடுமைகளுக்கு ஆளானார். எனினும், அவர் மனம் தளரவில்லை. விடுதலை பெற்றுத் திரும்பிய பிறகு மீண்டும் நாட்டு விடுதலைப் போரில் ஈடுபட்டார்.

நாளடைவில் அவருடைய உடல் நலம் மெல்ல மெல்லப் பாதிக்கப்பட்டு இறுதியில் 1920, ஜூலை 31 ஆம் நாள் தமது 65 ஆவது வயதில் நம்மை விட்டுப் பிரிந்தார்.

அவருடைய பூத உடலைப் பல பெரிய தலைவர்கள் சுமந்து சென்று நல்லடக்கம் செய்தனர். அப்படிச் சுமந்து சென்ற தலைவர்களில் காந்திஜியும் ஒருவர்.

திலகர் இன்று நம்மிடையே இல்லை. ஆனால், அவர் ஆற்றிய பணிகளின் பலனை நாம் இன்று அனுபவித்து வருகிறோம். அவரது வாழ்க்கை நமக்குப் பல நல்வழிகளைக் காட்டி உள்ளது. அவருடைய உயர் குணங்களைக் கடைப்பிடிக்க வேண்டியது ' நமது கடமையாகும்.

ஊனமே! உன்னை ஒருகை பார்க்கிறேன்!



காரைக்குடியில் ஒரு பள்ளி விழா. மேடையில் ஆறு வயதுச் சிறுமி ஒருவள் ஆடுகிறாள். ஒவ்வொரு ஆட்டம் முடிந்ததும் கூடியிருந்தோர் கைதட்டித் தங்கள் பாராட்டைத் தெரிவித்துச் சிறுமியை ஊக்கப்படுத்துகிறார்கள்.

இது என்ன பெரிய செயல் என்று கேட்கிறீர்களா? ஆடிய சிறுமி ஒரு காலை இழந்தவள்! 'ஏற்கனவே ஒரு காலை இழந்த சுதா சந்திரன் பரதம் ஆடிப் புகழ் பெற்றிருக்கிறாரே? அவரது சாதனையைப் பார்க்கும் போது இந்தச் சிறுமியின் சாதனை என்ன பெரிய செயல்' என்று நீங்கள் கேட்கக் கூடும்.

சுதா சந்திரன் செயற்கைக் காலோடு ஆடுகிறார். ஆனால் இந்த ஆறு வயதுச் சிறுமி விமலா, தன்னுடைய ஒரே காலால் மேடையில் ஆடுகிறார்! அதுவும் தொடர்ந்து ஒரு மணி நேரத்திற்கு மேல் மேடைகளில் நிகழ்ச்சி தருகிறார்!

ஒரே காலை வைத்துக் கொண்டு தத்தித் தத்தி ஆடும் இந்த அதிசயச் சிறுமி விமலா காரைக்குடியில் உள்ள ரேணுகா ஊனமுற்றோர் பள்ளியில் 2 ஆம் வகுப்பில் படித்து வருகிறார்.


உடல் ஊனமுற்றாலும் அயராத கடின முயற்சியால் உயரத் துடிக்கும் சிறுமி விமலாவின் சாதனை மற்றவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டு. இவர் இத்துறையில் உலக சாதனை புரிய வேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

தகவல், படம் : முல்லை காந்தி ராமசாமி, தேவகோட்டை.

பொன்னப்பர் தப்பினார்!

பொன்னப்பர் தம் அறிவால் சிங்கத்தை ஏமாற்றித் தப்பித்து விட எண்ணினார். "சிங்கமே! நீ நரசிம்ம அவதாரம் எடுத்த விலங்கு. என்னைக் கொன்று தின் றால் உனக்கும் பாவம் வந்து சேரும். என்னைக் கொன்று நீ பாவத்தைத் தேடிக் கொள்ள வேண்டாம். நானே மரத்தில் ஏறிக் கீழே குதித்துத் தற்கொலை செய்து கொள்கிறேன். அப்புறம் நீ உன் பசியைத் தீர்த்துக் கொள்ளலாம்", என்று கூறினார். சிங்கம் அதற்கு ஒப்புக் கொள்ளவே, மரத்தின் மீது ஏறி அங்கேயே அமர்ந்து கொண்டார். இறங்கவே இல்லை! சிங்கம் தனது முட்டாள்தனத்தை உணர்ந்தது.

பொன்னப்பர் தன் அறிவுத் திறத்தால் உயிர் தப்பினார்.




- மு. அப்துல் ஹாதி.


கதையை முடியுங்கள் போட்டியில் 2வது பரிசு பெற்ற கதை

விசித்திர மீன்கள்


ஆழி



பறவைகள், மீன்களைப் பிடித்துத் தின்பதுண்டு. ஆனால், 'ராட்சசப் பூனைமீன்' கரையின் ஓரம் நிற்கும் வாத்து, கொக்கு முதலிய பறவைகளைப் பிடித்துத் தின்னுகிறது!




'கண்ணாடி மீன்' என்னும் மீனின் உடல் கண்ணாடிபோல் இருக்கும். அதன் உடலின் உள்ளே இருக்கும் ஜீரண உறுப்புக்களையும் முள் எலும்புகளையும் தெளிவாகப் பார்க்க முடியும்!




சாதாரணமாகத் தோன்றும் 'முள்ளம்பன்றி மீன்' எதிரிகளைக் கண்டுவிட்டால், அதன் உடல் திடீரென்று உப்பிக்கொண்டு, அதன் மேலுள்ள முட்கள் குத்திட்டு நிற்கும்! எதிரிகள் பயந்து ஓடிவிடும்!



'கல்பர்' என்னும் விலாங்கு மீனுக்கு அதன் உடலைவிட வாய்தான் பெரிது!





'ஜான் டோரி' என்னும் மீன், இருந்த இடத்திலிருந்தே தன் வாயை மட்டும் முன்னே நீட்டி இரையைப் பிடித்துவிடும்! மத்திய தரைக்கடல் மீன் இது!



'சொலீடஸ்' என்னும் மீனின் கண்கள் வித்தியாசமானவை. அது தன் கண்களை டெலஸ்கோப் மாதிரி மேல்நோக்கித் திருப்பிப் பார்க்க முடியும்! அதனால், தனக்கு மேலே நீந்திக் கொண்டிருக்கிற எதிரியையும் இரையையும் சுலபமாகக் கண்டு கொள்ளுகிறது!


'சிக்லிடே' என்னும் மீன், தான் இட்ட முட்டைகளை வாயில் அடக்கிக்கொண்டுதான் அடைகாக்கும். அந்த முட்டைகள் குஞ்சாகிற வரையில் அந்த மீன் பட்டினிதான்!






'டார்பிடோ' என்னும் மின்சார மீன், மின்சாரத்தை வெளியிடக்கூடியது. அதைச்சுற்றி 2 மீட்டர் அளவுக்குக் கடல் நீரில் மின்சாரம் பாயும். அது வெளியிடும் மின்சாரம் மனிதனையும் வீழ்த்திவிடும்!

பிறந்தது முதல் இறக்கும்வரை— தன் ஆயுட்காலம் முழுவதும்— வாயைத் திறந்தபடியே வைத்திருக்கும் மீன், ஆழ்கடலில் உள்ள 'விரியன் மீன்'. வாயை மூட முடியாதபடி அதன் பற்கள் மிக நீளமாக அமைந்திருக்கின்றன!




'ஜைஜான் டாக்டிஸ் மரோனிமா' என்னும் மீனுக்குத் 'தூண்டில் மீன்' என்று பெயர். அதற்கு அதன் உடலைப் போல் நான்கு மடங்கு நீளமான கயிறு போன்ற தூண்டில் அதன் மேல்தாடையில் உண்டு! அதை இரையின்மேல் வீசிப் பிடித்து இழுத்துச் சாப்பிடுகிறது!




உலகிலேயே மிகவும் சிறிய மீன் 'கோபீஸ்'. இதன் நீளம் 1 செ.மீ.தான்! அதற்கு மேல் இது வளர்வது கிடையாது!







'தட்டை மீன்' இடத்திற்கு ஏற்றபடி தன் நிறத்தை மாற்றிக்கொள்ளும்! அதை இலைகளின் மேல் விட்டால், அதன் உடலில் இலைகளின் வடிவம் தெரியும்! சதுரங்கப் பலகையின் மேல் விட்டால், சதுரங்கப் பலகையின் கட்டங்கள் அதன் உடலில் தெரியும்!

மீன்கள் செத்துப்போனால்தான் வயிறு பாகம் மேலாக மல்லாந்து மிதக்கும்; ஆனால், 'கேட் ஃபிஷ்' என்னும் மீன்களில் ஒருவகை, உயிருடன் எப்போதுமே மல்லாந்து நீந்துகின்றன!







'பிளாக் ஸ்வாலோவர்' என்னும் மீன் தன்னைவிட மிகப்பெரிய இரையைச் சாப்பிடுகிறது! அந்தப் பெரிய இரை அதன் வயிற்றுக்குள் போவதற்கு அதன் வயிறு பெரிதாக விரிந்து கொடுக்கிறது



'ஷைனிங் மௌத்' என்னும் மீன் வாயைத் திறந்தால், பிரகாசமான ஒளிவீசுகிறது. அந்த ஒளியை நாடி மற்ற சிறிய மீன்கள் வரும்போது இது பிடித்துத் தின்கிறது!

'பைல்' என்னும் மீன், தன் எதிரியைக் கண்டுவிட்டால், தன் வாயைத் தரையில் வைத்துக்கொண்டு, செடியோடு செடியாகத் தலைகீழாக இருக்கும்! செடி என்று நினைத்துக் கொண்டு எதிரி போய்விடும்!





'க்ளவுன்' என்னும் 6 செ.மீ. நீளமுள்ள மீனை வேறு எந்தக் கடல்பிராணிகளின் விஷமும் பாதிக்காது! இதன் உடல் முழுவதும் விஷம் பாதிக்காத அளவுக்கு எதிர்ப்புச் சக்தி இருக்கிறது!



கேட்கட்டுமா டாக்டர்?

டாக்டர். கு. கணேசன்

வி. ஸ்ரீராம், மணப்பாறை.

மாலையில் எத்தனை மணியிலிருந்து இரவு எத்தனை மணி வரை படிப்பது நல்லது? பகலில் எப்போது படித்தால் நல்லது?

மாலையில் ஆறு மணியிலிருந்து இரவு எட்டு மணி வரை படிப்பது நல்லது. மனதில் நன்றாகப் பதிய வேண்டிய பாடங்களையும், கஷ்டமான பாடங்களையும் அதிகாலை நான்கு மணியிலிருந்து ஆறு மணி வரை படித்தால் நல்லது. காரணம் காலை வேளையில்தான் உங்கள் நினைவுத் திறன் அதிகமாக உள்ளது. பல நாட்கள் அல்லது பல வாரங்களுக்கு நினைவில் கொள்ள வேண்டிய பாடங்களை - அதாவது அடுத்த மாதப் பரீட்சைக்குப் படிக்க வேண்டிய பாடங்களை - பிற்பகலில் படிப்பது பயன் தரும்.

பி. எஸ். மணிமாறன், பரங்கிப்பேட்டை.


நகம் சொத்தை விழுவது ஏன் டாக்டர்? அதைத் தவிர்க்க வழியொன்று கூறுங்களேன், ப்ளீஸ்!

நகம் வளர்வதற்கு இரும்புச் சத்து, புரதச் சத்து, சல்பர், சிஸ்டின், பாஸ்போலிப்பிட்ஸ் என்று பல சத்துக்கள் தேவை. இவை நம் உடம்பில் குறையும் போது நகம் சொத்தை விழுகிறது. இது தவிர ஃபங்கஸ் (FUNGUS) எனும் காளான் கிருமிகள் நகத்தை அரிக்கும் போதும் நகம் சொத்தை விழுகிறது. இதைத் தவிர்ப்பதற்கான வழிகள் இரண்டு - சத்துள்ள உணவுகளை உண்பது; காளான் நோய்க் கிருமிகளுக்கான எதிர் மருந்துகளை மருத்துவரிடம் ஆலோசித்து வாங்கிச் சாப்பிடுவது!

அ. நவ்சாத், மொரப்பூர்.

சர்க்கரை வியாதி எப்படி வருகிறது? இனிப்புப் பண்டங்கள் அதிகம் தின்பதால் இந்நோய் வருமா?

'இன்சுலின்' (INSULIN) என்ற ஹார்மோன் கணையத்திலிருந்து சுரக்கப்படா விட்டாலோ, அல்லது குறை



வாகச் சுரந்தாலோ நம் இரத்தத்தில் சர்க்கரை (GLUCOSE)யின் அளவு அதிகமாகி சர்க்கரை வியாதியைத் (DIABETES MELLITUS) தோற்று விக்கிறது. இந்நோய் இனிப்புப் பண்டங்களை அதிகம் தின்ப தால் வருவதில்லை; சர்க்கரை வியாதி வந்தவர்கள் இனிப்புப் பண்டங்களைச் சாப்பிடக் கூடாது என்பது மட்டுமே உண்மை!

அ. ஜலீல் சாகுல் ஹமீது,
சென்னை - 45.

எனக்கு அதிகமாக வியர்க்குரு வருகின்றது. அதை எப்படிப் போக்குவது டாக்டர்?

உடம்பில் வியர்வை தாங்காமல் அடிக்கடி துடைத்து, கழுவி அல்லது குளித்து உடம்பைச் சுத்தமாக வைத்துக் கொண்டால் வியர்க்குரு வராது. வியர்க்குரு உள்ளவர்கள் வியர்வை உறிஞ்சுவதற்கு டால்கம் பவுடரை உடம்பில் தூவலாம். வியர்க்குருவில் அரிப்பு எடுத்தால் 'காலமின் லோஷனை'த் தடவலாம். வியர்க்குரு வந்துள்ள சமயங்களில் இறுக்கமான ஆடைகளை அணியக் கூடாது. காற்று உட்புகுமாறு உடைகளைத் தளர்வாக அணிந்து கொள்ள வேண்டும். டெர்லின், பாலியெஸ்டர் துணிகளுக்குப் பதிலாக பருத்தி அணிவது நல்லது.

ஜி. வெங்கி, குத்தாலம்.

குடல் புண் என்பது என்ன? அது எவ்வாறு உண்டாகிறது?

இரைப்பையில் ஹைட்ரோ குளோ




"எனக்குக் 'காசி அல்வா' பிடிக்கும்... உனக்கு...?"
"'ஏசி அல்வா' பிடிக்கும்!"
— ஏ. ஹரிகிருஷ்ணன்.

புண்' (DUODENAL ULCER) வருகிறது. இதற்குப் பல காரணங்களைச் சொல்லலாம். பரம்பரை அம்சம், மன அமைதியின்மை, மது அருந்துதல், புகை பிடித்தல், காரம் மசாலா நிறைந்த உணவுகளை அதிகமாக உட்கொள்ளுதல், காப்பி, டீ போன்ற பானங்களை அடிக்கடி சாப்பிடுதல், நேரந் தவறி சாப்பிடுதல், ஆஸ்ப்ரின், அனால்ஜின் போன்ற வலி நிவாரணி மாத்திரைகளை அளவுக்கதிகமாகச் சாப்பிடுதல் போன்றவை குடல் புண் உண்டாவதற்குக் காரணங்களாகின்றன.

டி. சிவப்பிரகாஷ், சேலம் - 3.

என் கன்னத்தில் மச்சம் உள்ளது. அதை மறைக்க வழி கூறுங்கள் டாக்டர், ப்ளீஸ்!

மச்சத்தை மறைப்பது எளிதல்ல, தம்பி! அதை அறுவை சிகிச்சையின் மூலம் அகற்றினாலும் அவ்விடத்தில் சிறு வடு இருக்கும். எனினும் மச்சத்தை மறைப்பது மிக மிக அவசியம் எனக்



பூனைக்கு மிகப்பிடித்தது எலியா?

ரேவதி



செல்லப் பூனை 'சிலீஸ்' உஷாரானது. மடியில் பால் குடித்துக் கொண்டிருந்த குட்டிகளை உடலோடு இன்னும் நெருக்கமாக இறுக்கிக் கொண்டது.

'சிலீஸ்' எதிர்பார்த்தபடியே பாலுவின் தலை பரண் விளிம்பில் தெரிந்தது. குட்டி போட்டிருந்த தங்கள் அருமைப் பூனை 'சிலீஸ்'சைக் காண அவன்தான் இரண்டு நாற்காலிகளைப் போட்டு ஆவலாக ஏறிப் பார்த்தான். கீழே விழுந்து விடாமல் இருக்க தங்கை மாலு, நாற்காலியைப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

பாலுவின் தலையைக் கண்டதும் 'சிலீஸ்' பற்களைக் காட்டி பயங்கரமாகச் சீறியது. அதன் முகத்தில் தோன்றிய கடுகடுப்பும் ஆத்திரமும் அவனைத் தயங்க வைத்தன. தன்னைச் சுற்றிச் சுற்றி வந்து, வாலை நிமிர்த்தி, உடலோடு உரசிய தங்கள் செல்லப் பூனை 'சிலீஸ்'தானா அது என்று கூட அவனுக்குச் சந்தேகம் தோன்றியது.

''என்ன அண்ணா, குட்டியைத் தொட்டுப் பார்க்க முடிகிறதா?'' என்று கேட்டாள் மாலு.

''பக்கத்துல கூடப் போக முடியாது போல் இருக்கு. அவ்வளவு பயங்கரமா சீறி மிரட்டறது!'' என்றான் பாலு.

''எத்தனை குட்டி இருக்கண்ணா?''

பாலு எண்ணினான். ''ஒன்று, ரெண்டு, மூணு.. மூணு குட்டி....''

''ஐயோ..! குட்டி போட்ட உடனே நான் அம்மாவுக்குத் தெரியாம ஜன்னல்ல காலை வைச்சு ஏறிப் பார்த்தேன். நாலு குட்டி இருந்ததே....! ஒரு குட்டி என்னவாச்சு?''

''நீதான் கணக்குல வீக்காச்சே! சரியா எண்ணினியோ என்னவோ?''

''போண்ணா, நான் இனிமே நாற்காலியைப் புடிச்சுக்க மாட்டேன். அங்கிருந்தே கீழே குதி'' என்று கோபத்தோடு கண்களை உருட்டினாள் மாலா. மிரட்டினாளே தவிர நாற்காலியின் பிடியை விட்டு விடவில்லை.

அம்மாவின் குரல் கேட்டது.

''ஐயோ அண்ணா! அம்மா வரா. நாம்ப குட்டிகளைப் பார்க்க முயன்றோம்னு தெரிஞ்சாலே திட்டுவா. சீக்கிரம் இறங்கு'' என்று அவசரப்படுத்தினாள் மாலு. பாலுவும் அவசரம் அவசரமாக இறங்கினான்.

பாலு இறங்கியதும், மாலு மேலே போட்டிருந்த நாற்காலியை அவசரம் அவசரமாகக் கீழே இறக்கிப் போட்டாள்.

உள்ளே வந்த அம்மா சுற்றுமுற்றும் பார்த்து விட்டு சந்தேகத்தோடு அவர்களை நோக்கினாள்.

''பூனைகிட்டப் போகாதீங்க. சீறிப் பாய்ந்து கீறிடும். தன் குட்டிகளை எடுத்துக் கொண்டு போக வந்திருக்கீங்கன்னு பாஞ்சுடும்,'' என்று இருவரையும் மிரட்டினாள் அம்மா.

''நாங்க பார்க்கவே இல்லேம்மா'' என்றாள் மாலு.

அம்மா சிரித்துக் கொண்டாள்.

''ஒரு கிண்ணத்தில் பாலை ஊற்றிப் பரண் மேலே வைச்சுடுங்க,'' என்று அம்மா உத்தரவிட்டதுதான் தாமதம், மாலு சமையலறைக்கு ஓடி, நொடியில்

பாலோடு திரும்பி வந்தாள். பாலு நாற்காலியை எடுத்து, இன்னொரு நாற்காலி மேல் போட்டான்.

''அண்ணா, இப்போ என்னோட முறை'' என்று கெஞ்சினாள் மாலு. பாலு மறுக்கவில்லை. நாற்காலியை அவன் பிடித்துக் கொள்ள, மாலு கிண்ணத்தோடு நாற்காலியில் ஏறினாள்.

அவளுடைய தலையைக் கண்டதுமே 'சிலீஸ்' சீறியது. தொட்டுப் பார்க்கும் எண்ணத்தை மாற்றிக் கொண்ட மாலு, பால் ஊற்றிய தட்டை மெதுவாக 'சிலீஸ்' இருக்கும் இடத்திற்கு நகர்த்தி வைத்தாள்.

மடியில் பால் குடித்துக் கொண்டிருந்த குட்டிகளை உதறி விட்டு எழுந்த 'சிலீஸ்' தட்டை நெருங்கி வந்து பாலைக் குடிக்க ஆரம்பித்தது.

அதற்குள், எதிர்ப் பரணின் மூலையில், ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த பெட்டிகள் இருந்த இடத்தின் அருகே, ஏதோ சத்தம் கேட்டது. பாதி குடித்துக் கொண்டிருந்த பாலை அப்படியே விட்டு விட்டு 'சிலீஸ்' எதிர்ப் பக்கம் தாவியது. பெட்டிச் சந்துக்குள் தலையை நீட்டி பரபரப்பாகத் தேடியது.

''எலி உள்ளே போயிருக்கு போலிருக்கு. நவராத்திரி கொலு பொம்மை வைத்திருக்கும் பெட்டி. எப்படித்தான் எலி உள்ளே போச்சோ'' என்று அலுத்துக் கொண்ட அம்மா, குச்சியை எடுத்து வந்து பெட்டியை இரண்டு தட்டுத் தட்டினாள். அடுத்த வினாடி குட்டி எலி ஒன்று பாய்ந்து பெட்டிக்குள்ளேயிருந்து வெளியே வந்தது.

பதுங்கிக் காத்திருந்த 'சிலீஸ்'



கண்ணிமைக்கும் நேரத்திற்குள் பாய்ந்து எலியைக் கௌவிக் கொண்டு, பரணுக்கு வந்து தன் குட்டிகளுக்கு விருந்து வைத்தது.

''சனியன்! குடித்துக் கொண்டிருந்த பாலை அப்படியே பாதியில் விட்டு விட்டு, எலி பிடிக்கப் போயிடுத்து பாரேன்!'' என்று வெறுப்போடு வியந்து கொண்டே சென்றாள் அம்மா.

நாட்கள் ஓடின. 'சிலீஸ்' தினமும் எப்பாடு பட்டாவது ஓர் எலியைப் பிடித்து வந்து குட்டிகளுக்குக் கொடுத்து விடும். குட்டிகள் பெரிதாகி விட்டன. முன்பிருந்த மூர்க்கத்தனமும், ஆத்திரமும் இப்பொழுது சிலீஸிடம் இல்லை. பாலுவையும், மாலுவையும் தன் குட்டிகளைத் தூக்கிக் கொண்டு கைகளில் வைத்துக் கொஞ்சக் கூட அது அனுமதித்தது.

''எத்தனை அழகான குட்டிகள்! இலவம் பஞ்சு மாதிரி எப்படி மெத்து மெத்துன்னு இருக்கு!'' என்று வியந்து கொண்டாள் மாலு. அவளுடைய கைகளில் ஒரு குட்டி இருந்தது.

''ஏன்... நம்ம சிலீஸுக்கு மட்டும் என்ன குறைச்சல்? இதன் புஸ்ஸென்ற வால் ஒன்றே போதுமே'' என்று அம்மாப் பூனையை மடியில் வைத்துக் கொண்டு நிமிர்ந்த அதன் வாலை உருவிக் கொடுத்தான் பாலு.

ஏதோ பொறி பறந்தது போன்ற உணர்வு ஏற்பட்டது அவனுக்கு! தங்கையிடம் கேட்டான். ''உனக்கு பிரமையாக இருக்கும்'' என்று கூறி விட்டாள் மாலு.

நாட்கள் ஓடின. அன்றும் வழக்கம் போல் தன் குட்டிகளுக்கு சுண்டெலி விருந்து வைத்து அவை சுவைத்துத் தின்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தது சிலீஸ்.

குட்டிகளை எடுத்துக் கொஞ்ச வந்திருந்த பாலுவும் மாலுவும் அந்தக் காட்சியைப் பார்த்து முகம் சுளித்தனர்.

''சனியன், மூன்று வேளையும் பெரிய கப் நிறைப் பால் வைக்கிறோம். அப்படியும் இந்தச் சனியன் பிடித்த சுண்டெலியை விட மாட்டேங்குதே இந்த சிலீஸ்!'' என்று அருவருப்போடு அலுத்துக் கொண்டான் பாலு.



தரைக்கு வரும் மீன்!

ஆப்பிரிக்காவில் காணப்படும் பூனை மீன் எனப்படும் மீன்கள் இரவில் நீரிலிருந்து நிலப் பரப்புக்கு வந்து விடுகின்றன. நிலத்தில் அங்கும் இங்குமாக ஊர்ந்து இரை தேடுகின்றன. பிறகு பொழுது விடிவதற்குள் மீண்டும் நீரினுள் சென்று மறைந்து விடுகின்றன.

— மகேந்தி. நீடாமங்கலம்.

மாலுவும் முகத்தைச் சுளித்துக் கொண்டாள்.

சிலீஸ் முன் காலைத் தூக்கி நக்கிக் கொண்டே சிரித்தது.

''ஏம்மா சிரிக்கிறே?'' என்று கேட்டது வெள்ளைக் குட்டி.

''இல்லே, இந்த பாலுவும் மாலுவும் உங்களைக் கையிலெடுத்து, ஆகா எத்தனை மென்மையாக இருக்குன்னு உங்க பட்டுப் போன்ற உடம்பைத் தடவிக் கொடுத்துக் கொஞ்சறாங்க. அதே சமயம், நீங்க சுண்டெலியைத் தின்பதைப் பார்த்து முகம் சுளிக்கறாங்களே..! அதை நினைச்சு சிரிக்கிறேன்'' என்றது சிலீஸ்.

குட்டிகள் எதுவும் புரியாது தாயைப் பார்த்தன.

''உங்கள் உடம்பு இப்படி மெத்து மெத்துன்னு பட்டுப் போன்ற மயிர் நிறைந்திருப்பதற்குக் காரணமே நீங்க திங்கற எலி உணவுதான். நம்ம உடம்பு இப்படி மினுமினுன்னு பட்டு மாதிரி மயிர் அடர்ந்து இருக்க, கந்தகச் சத்து தேவை. இந்தக் கந்தகச் சத்து சுண்டெலிங்க உடம்புல கொள்ளையா இருக்கு. அதனாலதான் உங்களுக்குத் தினம் தவறாம எப்பாடுபட்டாவது சுண்டெலி கொண்டு வந்து தரேன். பெரிசாப் போனா, நீங்களே எலி வேட்டை ஆடித் தின்னுப்பீங்க. நீங்க சுண்டெலி திங்கறதைப் பார்த்து அருவருப்படையும் இந்த பாலுவும்

மாலுவும் இந்த எலி உணவால் நீங்கள் பெறும் வளர்ச்சியைப் பார்த்து உங்களைக் கொஞ்ச ஆசைப்படுவதை நினைச்சா சிரிப்பு வராம என்ன செய்யும்?'' என்று விளக்கியது சிலீஸ்.

குட்டிகள் வளர்ந்தன. அவை விளையாட பாலு இலேசான ரப்பர் பந்துகளைப் போட்டு வைத்தான். மாலு, தனது பழைய ரப்பர் வளையங்களைப் போட்டு வைத்தாள். குட்டிகள் பந்தை உருட்டிப் பிடித்து விளையாடின. வளையல்களை இரு பக்கமும் பிடித்து இழுத்துப் பார்த்தன; கழுத்தில் போட்டுக் கொண்டு ஓடிப் பிடித்தன.

ஊரிலிருந்து பாலு மாலுவின் மாமா வந்திருந்தார். அவர் ஓவியம் வரைவாராம். குழந்தைகள் இருவரும் கேட்டுக் கொண்டதால் அவர் சிலிசைத் தன் குட்டிகளோடு உட்கார வைத்து பெரிதாக ஒரு படம் வரைந்தார். அவர் வெளியே போயிருந்த போது, மேஜை மேல் இருந்த அந்தப் படத்தை அருகே சென்று பார்த்தது சிலீஸ்.

அதற்குக் கோபம் கோபமாக வந்தது. எம்பி, தன் முன்கால் நகங்களால் படத்தைப் பிராண்டிக் கிழித்தது.

''ஏம்மா கிழிக்கிறே?'' என்று திகைப்போடு கேட்டது சாம்பல் குட்டி.

''எதிரே நம்மை உட்கார வைச்சு இந்த மாமா படம் வரைஞ்சிருக்கார். ஆனால் என்ன பயன்? நம்ம பின்கால்களிலும் ஐந்து விரலைப் போட்டிருக்கிறாரே! நமக்கு முன் கால்களில் மட்டும்தான் ஐந்து விரல். பின் கால்களில் நான்கு விரல்கள்தான்'' என்றது சிலீஸ். படத்தைக் கிழிப்பதில் குட்டிகளும் சேர்ந்து கொண்டன.

குட்டிகள் பெரிதாயின. ஒன்றை மளிகைக் கடைக்காரர் தூக்கிக் கொண்டு போனார். இரண்டாவதை ஓர் ஓட்டல்காரர் வாங்கிக் கொண்டு போனார். மூன்றாவதை பாலுவின் நண்பன் ஒருவன் தூக்கிக் கொண்டு போனான்.

குட்டிகளைக் காணவில்லையே என்று எங்கே சிலீஸ் ஏங்கித் தவிக்குமோ என்று எண்ணியிருந்த பாலுவும் மாலுவும், அது எதைப் பற்றியும் கவலைப்படாது. ஓடித் திரிந்து விளையாடியதைக் கண்டதும் ஏமாற்றமடைந்தனர்.

அன்று எங்கிருந்தோ ஒரு பெரிய எலியைக் கௌவிக் கொண்டு உள்ளே வந்தது சிலீஸ். அம்மா அதை விரட்டினாள். அவளுக்குப் போக்குக் காட்டி விட்டு அது எலியோடு, திறந்திருந்த பாலுவின் புத்தக அலமாரிக்குள் ஏறி உட்கார்ந்து கொண்டது. பாலு ஸ்கேலை எடுத்துக் கொண்டு விரட்டினான். மாலு தண்ணீரைக் கொண்டு வந்து கொட்டினாள். சிலீஸ், எலியை அப்படியே விட்டு விட்டு உயர் தப்ப ஓடி, திறந்திருந்த ஜன்னல் வழியாக வெளியே பாய்ந்து விட்டது!

அவர்கள் இருந்தது இரண்டாவது மாடியில். கத்தக் கூடத் தோன்றாது இருவரும் கலங்கி நின்றனர்.

''கண்டிப்பாக செத்துப் போயிருக்கும்.''

''சந்தேகம் இல்லை. அந்தப் பாவம் நம்ம இருவருக்கும்தான்!''

இருவரும் ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டிக் கீழே பார்த்தனர். சிலீஸின் இறந்த உடலைக் காணவில்லை!


''ஏதாவது நாய் வந்து இழுத்துக் கொண்டு போயிருக்கும்'' என்று காரணம் சொன்னான் பாலு.

''சரி, நம்ம குற்றத்தை மன்னிக்கச் சொல்லி பிள்ளையார் படத்துக்கு முன்னால் பத்துத் தோப்புக்கரணம் போடலாம்'' என்றான் பாலு. மாலு மறுக்கவில்லை.

பத்தாவது தோப்புக்கரணம் முடிந்தது. 'மியாவ்!' சத்தத்தைத் தொடர்ந்து, உள்ளே வந்த சிலீஸ், மிச்ச எலியைத் தின்ன பாலுவின் அறைக்கு ஓடியது! மிச்ச எலியைக் கௌவிக் கொண்டு ஓடத்தயாராக இருந்த சிலீஸ். பாலுவும் மாலுவும் தன்னை விரட்டாது நிற்பதைக் கண்டதும் திகைத்தது!

''பாவம், இந்த வரை பிழைச்சிருக்கே! விரட்டாதே. தின்னு முடிக்கட்டும்!'' என்றான் பாலு.

''இதான் காரணமா! நாங்களெல்லாம் உயரத்தில் இருந்து கீழே



விழுந்தால் அப்படியே குண்டுக் கட்டாக பொத்தென்று விழுந்து விட்மாட்டோம். எங்களுக்கு ஏற்படும் அனிச்சைச் செயலால், எங்கள் உடலைச் சுழற்றிக் கொண்டு, கால்கள் முதலில் தரையில் படும்படி திருப்பிக் கொள்வோம். அதோடு கால்களை நீட்டி உடலைப் பரத்திக் கொண்டு விடுவோம். பாரசூட் இறங்குவது மாதிரியேதான். தரைக்கு அருகே வரும் போது கால்களை முன்னே கொண்டு வந்து அவை முதலில் தரையில் படும்படி பார்த்துக் கொள்வோம். தலை, உடம்பு முதலில் பூமியில் படாத படி கவனமாக விழுவோம். அதனால் உயரத்திலிருந்து விழுந்தால் நாங்கள் அவ்வளவு சீக்கிரம் இறந்து விட மாட்டோம்'' என்று சிரித்துக் கொண்ட சிலீஸ் மீதி எலியைச் சுவைக்கத் தொடங்கியது.

அறிவியல் உண்மைகள்:

★ குட்டி போட்ட உடனேயே, பசி தாங்காமல் தாய்ப் பூனை ஒன்றிரண்டு குட்டிகளைத் தானே தின்று விடுவது உண்டு. பாசம் பிரச்னை அல்ல.

★ பாலை விட பூனைகள் எலிகளையே அதிகம் விரும்புகின்றன.

★ உடல் மென்மைக்கும், மிருது வான மயிர் வளர்ச்சிக்கும் தேவைப் படும் கந்தகச் சத்துக்காக, கந்தகச் சத்து நிறைந்த எலிகளைப் பூனைகள் வேட்டை யாடுகின்றன.

★ பூனைகளின் உடலில் எதிர் மின்னோட்டம் இருப்பதாக சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். உடலைப் பிடித்து, வாலை உருவி விட்டால் சில நேரங்களில் பொறி கூடப் பறக்குமாம்!

★ பூனையின் முன்கால்களில் ஐந்து விரல்களும் பின் கால்களில் நான்கு விரல்களும் உள்ளன.

★ குட்டிகளை ஆளாக்கும் வரைதான் தாய்ப் பூனைக்குப் பாசம் இருக்கும். அதற்குப் பிறகு அவைகளைப் பற்றி அது கவலையே கொள்ளாது!

★ உயரேயிருந்து விழும்படி நேர்ந்தால், அனிச்சைச் செயல் காரணமாக பூனைகள் தங்கள் உடலைச் சுழற்றி கால்கள் முதலில் பூமியைத் தொடும்படி பார்த்துக் கொண்டு அடிபடாமல் தப்புகின்றன.



அமுதமான பரிசு

கண்ணுக்கு எட்டிய தூரம் வரையிலும், ஏன் அதைத் தாண்டியும் கூட எங்கும் மணல், மணல், மணல்.

பாலை வனத்தின் உச்சி வெயில் அனலாகத்தகித்து மணலைக் கூட வறுத்தெடுத்துக் கொண்டிருந்தது.

பாலைவனத்தில் ஒட்டகங்களைக் கொண்டு தங்கள் விற்பனைப் பொருள்களை நெடுதூரத்திற்குக் கொண்டு செல்லும் வணிகர் குழாம் காரவான். ஒற்றுமையாக; ஒன்றாகத்தான் அவர்கள் போய்த் தீர வேண்டும். அதில்தான் அவர்களுக்குப் பாதுகாப்பு. மணலில் வழிகாண்பது கண்களல்ல. உள்ளுணர்வும் பழக்கமும்தான். அதிற் சிறந்த ஒரு வழிகாட்டியின் உதவியோடு காரவான் ஒரு ஊரிலிருந்து மற்றோரு ஊருக்குச் செல்லும்.

கட்டுக் கோப்பான காரவானிலிருந்து யாராவது பிரிந்து விட்டால் உயிர் பிழைப்பதே அரிது. அப்படியிருக்க....

அதோ அந்த மனிதன் பிரிந்து விட்டானே! திக்கும் தெரியாமல், திசையும் தெரியாமல், பாதையும் தெரியாமல் இங்கும் அங்குமாய் அலைந்து தவிக்கிறானே!

நேரம் செல்லச் செல்ல அவனுடைய நா வறண்டு விட்டது. எங்கும் தண்ணீரைக் காணாமல் தவித்துப் போன அவனுடைய கால்கள் தடு மாறின.

அவனுடைய தோளில் தொங்கிக் கொண்டிருந்த நீர்க் குடுவையும் காய்ந்து போய் விட்டிருந்தது.

கானல் நீரையே கண்டு கண்டு மயங்கிப் போய் விட்டிருந்த அவனது கண்கள் அந்தப் பாலைவனச் சோலையைக் கண்டதும் சற்றே தெளிவு பெற்றன. பெருகி வந்த புத்துணர்வோடு அவன் அதை நோக்கி ஓடினான். அங்கிருந்த சிறு குளத்தில், அவனுடைய உயிருக்கு உயிரான நீர் காத்திருந்தது.

கைகளால் அள்ளி அள்ளி நீரை முகத்தில் தெளித்துக் கொண்டான். தலையில் ஊற்றிக் கொண்டான். பருகினான். மீண்டும் மீண்டும் பருகினான்!

அந்தத் தண்ணீர் அமுதத்தைப் போலச் சுவைத்தது. அது போன்ற நீரை என்றுமே எங்குமே, பருகியதில்லை என்று சுவைத்து சுவைத்துப் பருகினான். உண்மையில் இறைவனால் தனக்கென்றே அனுப்பி வைக் கப்பட்ட அமுதமாகவே அந்த நீரை அவன் கருதினான்.

தனது காலிக் குடுவையில் வழிய வழிய அந்தக் குளத்து நீரை நிரப்பிக் கொண்டு, வழிதேடி மீண்டும் பய

கைலாஷ்

ணித்தான். தக்க சமயத்தில் அவனுக்கு நீரைத் தந்துதவிய அந்த இறைவனே அவனுக்குப் பாதையையும் காட்டி னான்.

பாக்தாத் நகரம் அவனை ''வா, வா'', வென்று வர வேற்றது. ஓட்டமும் நடையுமாக அவன் ஊருக்குள் நுழைந் தான்.

நகரில் அவன் முதலில் கண்டது.

அரசர் - காலீபா ஹரூன் அல் ரஷீதின் அழகிய மாளிகையைத்தான்.

பாக்தாத் பேரரசர் எவ்வளவு உயர்ந்த உள்ளம் கொண்டவர் என்பதை அவன் கேள்விப் பட்டிருக்கிறான். 'அவரு டைய ஆட்சில் நீதியும் நேர்மையும் என்றுமே தவறியதில்லை,' என அவனிடம் எல்லாருமே கூறியிருக்கி றார்கள்.

நீதி, தர்மத்தின் உறைவிடமான அவருடைய ஆட்சியில், பாலை வனத்தில் ஒருவன் பரிதவித்து இறந்து போய்விடக் கூடாது என்பதற்காகத் தான் இறைவன் தன்னைக் காப்பாற்றி னார் என அவன் உறுதியாக நம்பி னான்.

அவனுக்குத் தன் குடுவையிலிருந்த அந்த அற்புதமான அமுதம் போன்ற நீரின் நினைவு வந்தது. அதை மன்ன ருக்கு அன்புக் காணிக்கையாக்க அவன் விழைந்தான். அனுமதி பெற்று அரசருடைய சமூகத்தில் போய் அடக்க ஒடுக்கமாக வணங்கி நின்றான். தன் குடுவையை அவரிடம் பணிவுடன் நீட்டினான். 'அரசே! இவ்வளவு



சுவையுடன் கூடிய தண்ணீரை நான் என்றும் எங்கும் குடித்ததில்லை. அதனால்தான் இந்த அற்புதச் சுவைமிகுந்த நீரை உங்களுக்கும் கொடுக்கலாம் என்று வந்தேன்,'' என அவன் பெருமையுடன் கூறினான்.

அரசர் குடுவையைத் திறந்து ஒரு வாய் நீரை அருந்தினார்.

''உண்மை உண்மை'' அரசர் தலையை மகிழ்ச்சியுடன் ஆட்டிக் கொண்டார். ''அமுதம் போலத்தான் இனிக்கிறது,'' என்று கூறிவிட்டு அதை இறுக மூடித் தன் அருகேயே அவர் வைத்துக் கொண்டார்.

அவனுடைய கதையைக் கேட்ட அரசர் மிகவும் பரிவுடன் ஊர் போய்ச் சேர அவனுக்குத் தேவையான பணத்தை வழங்கினார்.

அரசரைப் பணிந்து நன்றி கூறி வணங்கிவிட்டு விடை பெற்றுச் சென்றான் அவன்.

அதுவரை பொறுமையுடன் பார்த்துக் கொண்டிருந்த அமைச்சரும் மற்ற அலுவலர்களும் அரசரை அப்படியே மொய்த்துக் கொண்டனர்.

''என்ன அரசே! அமுதம் போல இருக்கிறது என்று நீங்களே புகழ்ந்து கூறிய அந்த நீரை நாங்களும் சற்றுப் பருகிப் பார்க்கக் கூடாதா? ஒளித்து வைப்பது போலக் குடுவையை நீங்களே வைத்துக் கொண்டு விட்டீர்களே!'' என்று வருத்தத்தோடும் ஆவலோடும் கேட்டார்கள்.

அரசர் சிரித்துக் கொண்டே குடுவையைத் திறந்தார். ஒரு ஓரமாக வைக்கப் பட்டிருந்த 'துப்பு இங்கே' தொட்டியை அருகே கொண்டு வரச் சொன்னார்.

குடுவையிலிருந்த நீரை அப்படியே அதில் கொட்டினார்.

''இந்தத் தண்ணீர் நாற்றம் பிடித்துக் கெட்டுப் போகும் நிலையிலிருக்கிறது. அந்த வழிப்போக்கன் சாகும் நிலையிலிருந்தபோது இது அவனுடைய உயிரைக் காக்கக் கிடைத்திருக்கிறது. அவனுடைய தாகத்தின் கொடுமையால் இது அமுதம் போல அவனுக்குச் சுவைத்திருக்கிறது,'' என்று கூறினார் அரசர்.

''அவனுக்கு நீங்கள் பணம் கொடுத்தீர்களே? அது ஏன்?'' என அமைச்சர் கேள்வி எழுப்பினார்.

''அமுதம் என்றுதான் நினைத்த ஒன்றை, எனக்குத் தரவேண்டும் என்று விழைந்த அவனுடைய ஒப்பற்ற அன்புக்கு நான் கொடுத்த பரிசு அது'' என்று விளக்கினார், மாமன்னர் ஹாரூன் அல் ரஷீத்.



காட்டில் கச்சேரி

காட்டிலொரு கச்சேரி — எங்கும்
காக்கைவழி விளம்பரமாம்!
கூட்டமாக வந்திடுங்கள் — சின்ன
குயில்தானே பாடகியாம்!


குட்டியானை மிருதங்கம் — கரடி
கூடவந்து கடமடிக்கும்!
எட்டிநின்றே கருங்குரங்கு — வயலின்
ஏந்திவந்தே இசையமைக்கும்!

தேன்கூட்டம் பின்னணியாம் — முயல்கள்
சேர்ந்திசைக்கும் கைத்தாளம்!
மான்கூட்டம் நடுவினிலே — தோகை
மயிலண்ணன் ஆடுவாராம்!

அவையோரம் தவளைகளும் — அங்கே
ஆசையுடன் அமர்ந்திடலாம்!
சுவையாக கழுதைகளும் —ஓரம்
சொகுசாக நின்றிடலாம்!

ஆலமரம் குடைபிடிக்க — விழுது
அழகாக திரையமைக்கும்!
காலமெலாம் நினைவிருக்கும் — இந்தக்
கச்சேரி கேட்டிடுங்கள்!

— நாகரத்தினம், பட்டுக்கோட்டை.



அப்பா! எவ்வளவு சங்கங்கள்! பத்துப் பக்கங்கள் ஒதுக்கினால் கூடப் போதாது போல் இருக்கிறது! ஆனால் பலரும், பெற்றோர் அல்லது பள்ளி ஆசிரியரது கையெழுத்து இல்லாமல் அனுப்பியிருக்கிறார்கள். இப்படி வருபவற்றைக் கண்டிப்பாக வெளியிட மாட்டோம்.

பள்ளிகளில் நடைபெறும் சிறுவர் சங்கங்களைப் பற்றி வெளியிடுவீர்களா என்று ஆசிரியர்கள் கேட்டிருக்கிறார்கள். அவை சிறுவர்க்காக என்றால் கண்டிப்பாக வெளியிடுவோம்.

சிறுவர் சங்கங்களில் நடக்கும் கூட்டங்கள் கலை நிகழ்ச்சிகள், விழாக்களின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களை அனுப்பினால் வெளியிடுவீர்களா என்று சிலர் கேட்டிருக்கிறார்கள். கண்டிப்பாக வெளியிடுவோம். ஆனால் புகைப்படங்கள் கறுப்பு-வெள்ளையாக மட்டும் இருக்க வேண்டும். வண்ணப் படங்களாக இருக்கக் கூடாது. புகைப்படங்கள் இல்லாது செய்தியாக அனுப்பினாலும் வெளியிடுவோம். ஆனால் அவையும் கூடப் பெற்றோர் அல்லது ஆசிரியர் கையெழுத்துடன் அனுப்பப்பட வேண்டும்.

ராம் சூரத்குமார் சிறுவர் சங்கம்,
2, கமலீஸ்வரர் கோவில் தெரு,
சிதம்பரம் - 608 001.

இந்தச் சங்கம் 1984 ஆம் ஆண்டு ஜனவரி முதல் நாளன்று தொடங்கப்பட்டு, சிறப்பாக நடந்து வருகிறது. தலைவர் - டி. ராம் கிஷோர், துணைத் தலைவர் - ஆர். காசி



தாசன், செயற்குழு - எஸ். சுப்ரமணியம், பி. செந்தில் குமார், பி. ஸ்ரீதர், டி. கனகசபை, ஆர். பவபூதி.

குறிக்கோள் : சிறுவர் பத்திரிகைகளைப் படிக்கும் வழக்கத்தைக் குழந்தைகளிடையே பரவலாக்குதல். சிறுவர் பத்திரிகைகளுக்கு எழுதுவோரை ஊக்குவிப்பது. குழந்தைக் கவிஞர், விவேகானந்தர் மற்றும் தேசத் தலைவர்களின் பிறந்த நாட்களைக் கொண்டாடுவது. திருவண்ணாமலை சித்தர் சுவாமி யோகி ராம் சூரத்குமார் அவர்களிடமிருந்து பெறும் பிரசாதத்தை மருத்துவமனைகளில் உள்ள நோயாளி களுக்கு அளித்து மன ஆறுதல் பெற வைப்பது.

மகாத்மா காந்தி சிறுவர் சங்கம்,
36, ஜாபர் பேக் தெரு,
கிருஷ்ணாபுரம்,செஞ்சி - 2, 604 202.

இந்தச் சங்கம் 1969 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6 ஆம் தேதி முதல் நடந்து வருகிறது. தலைவர் - க. இரா. விஜயகுமார், துணைத் தலைவர் - எஸ்.பி. தீபநாதன், செயலாளர் - முரளி, துணைச் செயலாளர் - டி. ரமேஷ், பொருளாளர் - அ. சுதாகரன். செயற்குழு - எஸ். இளவழகன், கே. பாபு, ஆர். சீனுவாசன், கே. அனந்தகுமார், பு. சையத் காஃபார், அரிகிருஷ்ணன்.

குறிக்கோள் : விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது, பொது மக்களுக்குக் குடி நீர் வழங்குவது, நூலகங்களில் சிறுவர் பத்திரிகைகளை வாங்க ஏற்பாடு செய்தல், பேனா நண்பர்களை ஊக்குவித்தல், சிறுவர் சிறுமியரைப் பத்திரிகைகளுக்கு எழுதும் படி உற்சாகப் படுத்துதல், சிறுவர் நிகழ்ச்சிகளை நடத்துதல்.

கோகுலம் சிறுவர் சங்கம்,
திருமழபாடி, திருச்சி மாவட்டம்,
(முழு முகவரி தரப்படவில்லை)

1986 ஆம் ஆண்டு முதல் இச்சங்கம் நடந்து வருகிறது. இதைத் தொடங்கி வைத்தவர் எழுத்தாளர் கல்கிதாசன்.

புரவலர் - கே.எஸ். பாதுஷா, தலைவர் - ஆ. எழிலரசன், செயலாளர் - அரங்க சுர குரு.

பொருளாளர் - சுரபதி, செயற்குழு - ஜெ. மூகாதேவி, அன்பு பாலாஜி, சுந்தர வைத்தியநாதன், கண்ணன், வினோதா, கணபதி, கனகசபை.

குறிக்கோள் : கலை, இலக்கியம், கல்வி, அறிவியல், பணிவு ஆகியவற்றைக் குழந்தைகளிடையே வளரச் செய்தல். மாதந்தோறும் முதல் சனிக்கிழமை கூட்டம் நடத்தி வருகிறது. தேசத் தலைவர்களின் பிறந்த நாள், சுதந்திர-குடியரசு தினங்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

ஒவ்வொரு தேர்வின் போதும் அதிகாலையில் எழுந்து படிக்க, சங்க உறுப்பினர்களே முறைவைத்து எழுப்பி விடுகிறார்களாம்!

1.5.91 அன்று இச்சங்கம் தனது 6 வது ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியுள்ளது. டாக்டர் அ. ஆறு முகம் தலைமை வகிக்க, புரவலர் கே.எஸ். பாதுஷா கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்.

இப்பகுதியில் பங்கு கொள்ள விரும்பும் சிறுவர் சங்கங்கள் மே 91 கோகுலம் இதழைக் காணவும். இதற்கென யாரும் கோகுலத்தின் சார்பில் சந்தா வசூல் செய்யக் கூடாது. கோகுலம் பத்திரிக்கைக்கும் இதற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.


துளிர் சிறுவர் மன்றம்,
53/5, பழைய தெரு, குமாரமங்கலம் P.O.,
திருச்செங்கோடு வட்டம், சேலம் மாவட்டம்,637 205.

1991 ஜனவரி முதல் நடந்து வருகிறது. தலைவர் - ஆ. ராசேந்திரன், துணைத் தலைவர் - எஸ். தேவசுந்தரம், செயலாளர் - எஸ். பத்மநாபன், பொருளாளர் - எம். சங்கர்.

குறிக்கோள் : சிறுவர் சிறுமியரைக் கதை கட்டுரை, கவிதை எழுத ஊக்குவித்தல். சுற்றுப் புற பாதுகாப்பு உணர்வை அறிய வைத்தல், தேசத் தலைவர்களின் பிறந்த நாட்களைக் கொண்டாடுதல், தேசப்பற்றை வளர்த்தல், நாடகம் போடுதல்.

6.2.91 அன்று விளையாட்டுப் போட்டி நடத்திப் பரிசு வழங்கியுள்ளது.

27.5.91 அன்று குமாரமங்கலம் பொது நூலகத்திற்குப் பாவேந்தர் பாரதிதாசனின் படத்தை வழங்கியுள்ளது.



எழுத்துக்குத் தந்தை

ஹாரிஸ்

மகாகவி நாராயணன், நோயின் வேதனை தாங்காது அரற்றிக் கொண்டிருந்தார். அவருடைய மாணவர்கள் செய்வதறியாது தவித்துக் கொண்டிருந்தனர்.

வீட்டு வாசலில் நிழலாடியது. தலைமை மாணவர் வெளியே வந்து பார்த்தார்.

முகத்தில் அறிவொளி வீச, பணிவாக நின்றிருந்த பெரியவர் ஒருவர், வணக்கம் தெரிவித்தார். சீடர் அதை ரசிக்கவில்லை. அவர் முகத்தில் கடுகடுப்புக் கூடியது.

''எதற்காக இங்கே வந்திருக்கிறீர்கள்? என்ன வேண்டும்?

''முடக்கு வாத நோயால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் மகாகவிஞரை இந்த எளியேன் பார்த்து ஆறுதல் கூற விரும்புகிறேன்.''

''பூஜை அறைக்குப் பக்கத்தில்தான் அவர் படுத்திருக்கிறார். புனிதம் நிறைந்த அந்த இடத்திற்கு, தாழ்ந்த குலத்தவராகிய தங்களை எப்படி அனுமதிப்பது? நீங்கள் திரும்பிப் போகலாம்.''

''தம்பி, நான் தாழ்ந்த குலமாக இருக்கலாம். அதே போல் மகாகவியும் உயர்ந்த குலத்தவராக இருக்கலாம். ஆனால், வணங்கும் தெய்வம் காரணமாக நாங்கள் ஒன்று பட்டவர்கள்; கவிதைகளைச் சுவைப்பதில் நாங்கள் ஒன்று பட்டவர்கள். ஒரு முறை தூரத்திலிருந்தாவது பார்த்து விட்டு வர அனுமதிப்பா''—பெரியவர் கல்லும் கரையும்படி சீடரைக் கெஞ்சினார்.

சீடர் மனமிரங்கவில்லை. அவர் கடிந்து பேச எண்ணிய நேரத்தில், உள்ளேயிருந்து மகாகவியின் குரல் கேட்டது.

''அச்சுதா.... யாரோடு பேசிக் கொண்டிருக்கிறாய்?''

வந்தவரைக் கத்தரித்து அனுப்பாமல், சீடர் உள்ளே சென்றார்.

சீடர் வாய் பொத்தி மகாகவியின்



எனக்கு மட்டுமே ஊதா!

• ரஷ்ய இளவரசி பெட்ரோவ்னாவுக்கு ஊதா நிறத்தின் மீது மோகம். அந்த நிறத்துடன் கூடிய பொருள்களையே விரும்புவாள். அதோடு அதைத் தனக்கு மட்டுமே தனி உரிமையாக்கிக் கொள்ளவும் செய்தாள். அவளுக்காக நாட்டிலுள்ள எந்தப் பெண்ணும் ஊதா நிறத்தில் ஆடையணியக் கூடாதென்றும், தடையை மீறினால் மரண தண்டனையென்றும் ஆணை பிறப்பிக்கப் பட்டது!

— ஆ. ஏழுமலை, திண்டிவனம்.

முன் பணிவாக நின்றார்.

"அந்த இராமனுஜன் வந்திருக்கிறார். உங்களைப் பார்க்க வேண்டுமாம். ஒரே பிடிவாதமாக இருக்கிறார் ஏற்கனவே இரண்டுமுறை வந்தார். நாங்கள் உள்ளே வர அனுமதிக்கவில்லை."

"ஏனப்பா அப்படிச் செய்தீர்கள்? மக்களின் அன்பைக் கவர்ந்த ஒரு மாபெரும் மக்கள் கவிஞனை அவமதித்து விட்டீர்களே!"

"அவர் தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவர்."

"கீழே நின்று கொண்டு கிளைகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் உன் போன்றவர்களுக்குத்தான் இந்த பேதமெல்லாம். நானும் அவரும் உயரேயிருந்து கீழே பார்ப்பவர்கள். எங்களுக்குள் எவ்வித பேதமும் இல்லை. மக்களுக்காகக் கவிதை எழுதும் ஒரு அற்புதக் கவிஞனை இப்படி அவமதித்து விட்டீர்களே! சீக்கிரம் போய்க் கூட்டி வாருங்கள்"

சீடர் வேண்டா வெறுப்புடன் சென்று இராமனுஜனைக் கூட்டி வந்தனர்.

"இராமனுஜா, நீவந்து என்னை இன்னும் பார்க்க வர வில்லையே என்று மனதிற்குள் ஏங்கிக் கொண்டிருந்தேன். ஏற்கனவே நீ வந்து, இந்த முட்டாள்கள் உன்னை உள்ளே அனுமதிக்கமறுத்துவிட்டதைஇப்பொழுது தான் அறிந்தேன். இந்தப் பாவத்திற்கு எனக்கு மன்னிப்புக் கிடைக்குமா?"

நாராயணன், இராமானுஜத்தின் கரங்களைப் பற்றிக் கொண்டு அழுதார். இராமானுஜன் தேற்றினார்.

"இராமனுஜா, இந்த முடக்குவாத நோயால் படாதபாடு படுகிறேனே... உன்னுடைய இராமனைக் கேட்டு இதற்கு ஒரு வழி சொல்லக்கூடாதா?"

"கவியரசராகிய உங்களுக்கு, தாழ்ந்த குலத்தானாகிய நானா வழி காட்டுவது?" என்று உருகிப் போன இராமனுஜன், "உங்கள் சுவையைக் கொஞ்சம் மாற்றிக் கொள்ளுங்கள். மீனிலிருந்து சுவைகக ஆரம்பியுங்கள். அந்தப் பேரின்பத்தில் உங்கள் நோய் தானாகவே ஓடிவிடும்" என்றார்.

ஏற்கனவே இராமானுஜன் உள்ளே வந்ததை விரும்பாத சீடர்கள் இப்பொழுது வெகுண்டனர்.



"நீர் தாழ்ந்த குலம் என்பதைக் காட்டி விட்டீர். ஆசாரம் மிக்க ஒரு அந்தணரை நோயிலிருந்து மீட்க வைக்க, அவரை மீன் சாப்பிடும்படியா யோசனை கூறுவது?"

சீடர்கள் இராமானுஜரைத் தாக்க வந்தனர்.


படுக்கையில் கிடந்த நாராயணன் அவர்களைக் கையமர்த்தினார்.

"மூடர்களே.... இராமானுஜனை நான் நன்கு அறிவேன். அவன் கூறியதற்கு உட்பொருள் என்ன என்பது, உங்களுக்குப் புரியாது. ஆனால், எனக்குப் புரிந்து விட்டது. திருமாலின் பத்து அவதாரங்களையும் மச்சாவதாரத்தில் இருந்து தொடங்கிப் பாடும்படி என்னை இராமானுஜன் பணிக்கிறான். அவன் வாக்கில் சத்தியம் இருப்பதை நான் அறிவேன்."

இராமானுஜன் கூறிய யோசனைப்படி நாராயணன் மச்சாவதாரத்திலிருந்து தனது கவிதைகளைத் தொடங்கினார். எந்த வைத்தியத்திற்கும் கட்டுப்படாதிருந்த அவரது முடக்கு வாதம், அவர் தமது காவியத்தை முடிக்கும் போது விலகிப் போயிருந்தது! அந்தக் காவியம்தான் சம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்ட நாராயணீயம். எழுதிய மகாகவியே நாராயண பட்டத்ரி.

நாராயண பட்டத்ரியை 'நாராயணீயம்' எழுதத் தூண்டிய இராமானுஜன், சாதாரண கவி அல்ல. மலையாள மொழிக்கு உருக்கொடுத்து உயர்வு தந்த மக்கள் கவிஞர் எழுத்தச்சன்தான். பிறந்தது தாழ்ந்தகுலமாக இருந்தாலும், இவர் மலையாளத்தில் படைத்த கவிதைகள், அந்த மொழிக்குப் புதிய வேகத்தைக் கொடுத்தது. சம்ஸ்கிருதம் அறியாத பாமர மக்களுக்காக இவர் மலையாளத்தில் பாரதத்தையும், இராமாயணத்தையும் படைத்தார். கேட்பவர்களைத் தாளம் போட வைக்கும் 'கிளிப்பாட்டு' என்ற புதிய செய்யுள் வடிவை அறிமுகம் செய்தவரும் இவரே.

மலையாளத்தில் 'கல்வித்தந்தை' என்று பொருள்படும்படி 'எழுத்தச்சன்' என்றபெயரால்மக்கள் இந்தத் துஞ்சத்து ராமானுஜனை அழைத்து மகிழ்கின்றனர். எழுத்தச்சனின் திருவடி பட்ட புனித மண், தங்கள் குழந்தைகளுக்கு அறியாச் செல்வமாகிய கல்வியைத் தங்கு தடையின்றித் தரும் என்ற நம்பிக்கையில் மக்கள் இன்றும் அவர் வாழ்ந்த 'துஞ்சன் பரம்பி'லிருந்து மண் எடுத்து வருகிறார்கள். குழந்தைகளின் கல்விப் பயிற்சியை அந்த மண்ணில் எழுத வைத்துத் தொடங்குகிறார்கள்.



பம்பரம்

எந்த நாட்டுச் சிறுவர்களாக இருந்தாலும் சரி, பம்பரம் ஆடுவது என்பது சிறுவர்களுக்கு மிகவும் பிடித்தமான விளையாட்டு. நாகரிகத்தின் தொட்டில் என்று போற்றப்படும் கிரேக்க நாட்டினர் கூடக் கயிற்றால் பம்பரம் சுற்றி ஆடியுள்ளனர்.

நாம் மரத்தாலும், சில வகை எலும்புகளாலும் பிளாஸ்டிக்காலும் செய்த பம்பரங்களை மட்டுமே பார்த்திருக்கிறோம். எஸ்கிமோக்கள் பனிக் கட்டியால் செய்யப்பட்ட பம்பரத்தில் விளையாடுவார்கள். தென்கடல் தீவைச் சேர்ந்தவர்கள் எரிமலையின் சாம்பலால் பம்பரம் செய்து பயன்படுத்துகிறார்கள்.


சீனாவில் குழந்தைகள் மட்டுமல்ல, நிறையப் பெரியவர்களும் பம்பரம் விடுவார்கள். 'பம்பர நிபுணர்கள்' என்று இந்த ஆட்டத்தில் பெயர் வாங்கியவர்கள் இருக்கிறார்கள் அங்கே. சுற்றும் போது இசை பாடும் பம்பரம், பம்பரத்துக்குள் சுற்றும் பம்பரம் போன்ற வித்தியாசமான பம்பரங்கள் எல்லாம் ஜப்பானில் வெகு பிரபலம். காற்றிலேயே பம்பரத்தைச் சுற்ற வைக்கும் 'வித்தையை' தென் ஆப்பிரிக்கப் பழங்குடியினரிடம் காணலாம்.

இதெல்லாம் இருக்கட்டும், பம்பரம் எதனால் நிறைய நேரம் சுற்றுகிறது தெரியுமா? அதுவும் ஒரு குறிப்பிட்ட நிலையிலேயே ஏன் சுற்றுகிறது? இதை விளக்கும் அறிவியல் விதியை 'கைரோஸ்கோபிக் இனெர்ஷியா' என்பார்கள். பெயரைக் கேட்டுப் பயந்துவிட வேண்டாம். 'கைரோஸ்கோப்' என்பது, சுற்றிக் கொண்டிருக்கும் விளையாட்டுக் கருவியைக் குறிக்கும். 'இனெர்ஷியா' என்பதை இயங்காத தன்மை என்று சொல்லலாம். ஒரு பொருளைச் சுற்ற விட்டால், அது இனெர்ஷியாவினால், குறிப்பிட்ட இடத்திலேயே சுற்றிக் கொண்டிருக்கும் என்கிறது விஞ்ஞானம். அதாவது பம்பரத்தின் நடுப் பகுதியின் மூலமாக ஒரு நேர்க்கோட்டை நாம் கற்பனை செய்தோமானால் அது எப்போதும் ஒரே திசையைக் காண்பித்துக் கொண்டிருக்கும்.

நாம் வசிக்கும் இந்தப் பூமியே ஒரு மிகப் பெரிய பம்பரம் போன்றது என்று சொன்னால் ஆச்சரியமாக இருக்கிறதா? ஆம். பூமியும் இடைவிடாது சுற்றிக் கொண்டிருக்கிறது. பம்பரம் சுழல எப்படிச் சாட்டையின் உதவியால் ஏற்றப்படும் வேகம் பயன்படுகிறதோ, அதேபோல், பூமி சுழல, சூரியனின் ஈர்ப்புச் சக்தி பயன்படுகிறது.

அதே தத்துவத்தைத்தான் பூமியும் பின்பற்றுகிறது. பம்பரத்துக்கு நடு அச்சும் ஆணியும் இருக்கின்றது அல்லவா, அதேபோல் பூமியின் அச்சு வடக்கு, தெற்கு துருவங்களின் வழியாகச் செல்கிறது. அந்த அச்சின் திசை எப்போதும் 'வடக்கு துருவ நட்சத்திரம்' உள்ள திசையைப் பார்த்தவாறு இருக்கும்.

– ஜி. எஸ். சுப்பிரமணியன்.





பறக்கும் கோப்பை - வான்முகில் - பக். 112 ரூ. 16/- அகரம்,2, சிவன் கோவில் தெற்குத் தெரு, சிவகங்கை - 623 560.

கோகுலம் வாசகர்களால் சுவைத்து மகிழப்பட்ட வான்முகிலின் திப்பிலி ராஜா கதைகளின் 2ம் தொகுதி இது. வயிற்று வலிக்கு மருந்து வாங்கி வைத்துக் கொண்டு படித்துச் சுவைக்க வேண்டிய சிரிப்புக் கதைகள். திப்பிலி ராஜாவின் கோணங்கிகள் நினைத்து நினைத்து சிரித்து மகிழ வேண்டியவை.

தினமும் தீபாவளி - எஸ். திருமலை, பக். 127, ரூ. 12/-, வானதி பதிப்பகம், சென்னை - 17.

ஏழைத் தாய் தந்தையர்க்கு பாரமாக இருக்க விரும்பாத சிறுவன் சங்கர், பள்ளி செல்லாத நேரத்தைக் குப்பைக் காகிதம் பொறுக்குவதில் கழித்து, தானே தீபாவளிக்குச் சட்டை வாங்கிக் கொள்வதுதான் தலைப்புக் கதை. இதைத் தவிர 12 கதைகள் இத்தொகுப்பில் உள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு புதிய கோணத்தைத் தருகின்றன. உமாபதியின் படங்கள் கதைகளுக்கு மெருகூட்டுகின்றன. ஏவிஎம் அறக்கட்டளையின், 1989 ஆம் ஆண்டுக்கான வெள்ளிப்பதக்கத்தைப் பெற்ற தொகுப்பு என்பதும் மதிப்பை உணர்த்தும்.

காவிழந்த சிறுமி - ஆசிரியர் குழு - பக். 180, ரூ. 18/-. மணிமேகலைப் பிரசுரம், தணிகாசலம் சாலை, சென்னை - 17.

சுவையான இரு நெடுங்கதைகள் இதில் உள்ளன. ஒன்று, ஊனமுற்ற சிறுமி நளினியின் மனதைப் புண் படுத்தி இன்பம் காணும் கல்மனம் கொண்ட ஆனந்தியை, நளினியே மாற்றுவது. 2 வது கதை, சிறு சேமிப்பின் பெருமையை விளக்குவது. சிறுவர் சிறுமியர்க்கு என்றாலும், பெரியவர்களும் எளிதில் படித்துச் சுவைக்கும் வண்ணம் குண்டு குண்டான எழுத்துக்களில் புத்தகம் அச்சாகியுள்ளது.

எம்மதமும் சம்மதமே - அழகு பழனிச்சாமி, பக் - 128, ரூ. 15/-.துரை இராமு பதிப்பகம், 6, பிள்ளையார் கோவில் தெரு, பழைய தாம்பரம், சென்னை - 45.


குழந்தைகளுக்காகப் பல ஆண்டுகளாகப் பொறுப்புணர்வோடு எழுதி வரும் அழகு. பழனிச்சாமியின் 18 சிறு கதைகள் இதில் உள்ளன. ஒவ்வொன்றும் ஒரு நல்ல அறத்தை; மன வளர்ச்சியை உணர்த்துகின்றது. சுவையான கதைகள். மனதில் பதியும், பாத்திரப் படைப்புகள்.

பள்ளிப் பிள்ளைகளுக்கான பொது அறிவு விஷயங்கள் 2 ஆம் பாகம், ஆசிரியர் குழு, பக் - 208, ரூ. 21/- மணிமேகலை பிரசுரம், தணிகாசலம் சாலை, சென்னை - 17.

இது அறிவியல் யுகம். நிமிடத்துக்கு நிமிடம் புதிய கண்டுபிடிப்புகள்: சாதனைகள் அறிமுகமாகும் விடியல் யுகம். சற்று அசந்து விட்டால் கூட நமக்குத் தொடர்பு போய்விடும். இந்தச் சாதனை யுகத்தில், பொருள்வாரியாக சாதனை செய்திகளை; அவற்றின் முன் விவரங்களோடு அருமையாகத் தொகுத்துத் தந்துள்ளார்கள். இண்டர்வியுக்களுக்கும், வினாடி வினாக்களுக்கும் செல்வோர் எல்லோரிடமும் இருக்க வேண்டிய தொகுப்பு.

– ரே.

மதிப்புரைக்கு நூல் அனுப்புவோர் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். ஆசிரியர் கோகுலம், ரேஸ்கோர்ஸ் சாலை, சென்னை - 32.



★ அழகான கைகள் கதை மிக அருமை.

மகிழஞ்சேரி, கே. கணேசன்.

★ இந்தியாவின் டிஸ்னி லேண்டை நாங்கள் பம்பாய் சென்று பார்க்காமலேயே, இங்கே இருந்தபடியே கோகுலத்தின் உதவியால் பார்த்து விட்டோம்!

ஆர்ப்பாக்கம், ஆர். துரை.

★ ''பிடித்ததைத் தடுத்தால்...'' ஐந்து பேரின் பேட்டியும் அருமை! ஒவ்வொருவரின் அனுபவமும் சுவையாகவும் - யதார்த்தமாக வும் இருந்தது.

மொரப்பூர், அ. நவ்சாத்.

★ ''சிறுவர் சங்கச் செய்திகள்'' என்ற புதிய பகுதி சிறப்பாகப் படைக்கப் பட்டிருந்தது. பயனுள்ள இப்பகுதி தொடர்ந்து வர வேண் டும் என்பதே எங்கள் விருப்பம்.

தக்கோலம், அ. முஸ்தபா.

★ டாக்டர் என் ஸ்ரீதரனின் 'கிணற்று முனி' கதை மிகச்சிறந்த படைப்பு. அறியாமை யில் உழற்று கொண்டிருக்கும் கிராமத்து மக்களுக்கு ஜீவன் போன்று இளைஞர்கள் உதவியும், உபதேசமும் கிடைக்குமாயின் நமது கிராமங்களில் அறியாமையை மிக விரைவில் விரட்டி விடலாம்.

புதுக்கோட்டை, சிற்பிசோமு.

★ பூதலூர் முத்துவின் ''ஒரு தவளை தும்பியாகிறது'' வெகு இயல்பாய் மனத் தோடு ஒன்றிப் போயிற்று.

தக்கோலம், பி.அ. முஸ்தபா கமால்.

★ ஓவியர் ஆழியின் 'கடிகாரங்கள்' படக் கட்டுரை ஆதிகாலத்திற்கே நம்மை அழைத் துச் சென்று விட்டது.

ஜானகி மணாளனின் 'ஜோசப் மாஜினி' கட்டுரை மாஜினியைப் பற்றி முழுமை யாகப் புரிய வைத்தது.

நீடூர், அ. முஹம்மது நிஜாமுத்தீன்.

★ ஆழி அவர்களின் 'கடிகாரங்கள்' பற்றிய தொகுப்பு சிறப்பாக உள்ளது.

களியக்காவிளை, கே. புஷ்பராஜ்.

★ குடற் புழு வராமல் தடுப்பதைப் பற்றி டாக்டர். கு. கணேசன் அவர்கள் விளக்கிய கருத்து நன்றாகப் புரியும்படி இருந்தது.

கோவிலூர், ந. நவமணி.

★ சேர நம்பியின் பதில் 'கோகுலம்' வளர்ச்சிக்கோர் ஒரு வரப்பிரசாதம்.

அடியக்கமங்கலம், பி. சஹாபுதீன்.

★ ''எங்கப்பாவா கஞ்சன்'' நாடகம் படு சூப்பர். பெற்றோரைத் தூற்றும் பிள்ளை களுக்கு அறிவு புகட்டும் நல்ல கதை.

கோவை, கே. ஜெய்.

★ முதன் முதலில் யானை மீதிருந்து போலோ ஆடிய இந்தியச் சாதனையைப் பற்றியும், போலோ விளையாட்டைப் பற்றியும் உணர்த்திய குண்டுமணி அவர்க ளுக்கு நன்றி.

கோட்டூர், எம். சுந்தரராஜன்.

★ 'மலைக்கோட்டை மர்மம்' ஆரம்பமே செம தூள். அதற்கேற்ற படமும் சூப்பர். அடுத்தது என்ன நடக்குமோ என்ற ஆவ லைத் தூண்டுகிறது!

மொரப்பூர், ஏ. செந்தில்.

★ கால் ஊனமுற்ற தோழிக்கு உதவும் எண்ணத்தில் சைக்கிள் வாங்கிய மல்லிகா எங்கள் எண்ணத்தில் உயர்ந்து விட்டாள். ''சைக்கிள்தான் வேண்டும்'' அருமைங்க!

இந்தியாவிலுள்ள உலக அதிசயம் 'தாஜ் மஹல்' என்றால், அதை ஏலம் போகாமல் தடுத்தார் கர்ஸான் பிரபு என்ற செய்தி அதிசயத்திலும் அதிசயம்!

கருமத்தம்பட்டி, ஆர். அருண் பிரகாஷ்.

★ 'புதையல் வேட்டை' குழந்தைகள் மட்டுமன்றி குடும்பத்தோடு அனைவரும் விளையாடக் கூடிய சிறந்த பொழுதுபோக் காக இருந்தது.

திருவள்ளூர், கே.பி. மதன் மோகன்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: வி. ராஜேந்திரன்.

முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. தொலைபேசி: ஆசிரியர் குழு அலுவலகம்: 2344145; சர்க்குலேஷன் மானேஜர்: 2344190; விளம்பரம் — சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.

ஆறு மாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 60/-; விமானத் தபால்: ரூ. 135/-.

ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 120/-; விமானத் தபால் ரூ. 270/-.



சிங்கம் உமக்கு உறவினரா
சிங்க வால் குரங்கண்ணா!

REGISTERED NO. TN MS (S) 281
Registered as Newspaper in Srilanka

In a class of its own

Exclusive pencils for one and all,



LION
PREMIER®
HB PENCILS

Sleek, Elegant, meant for executives and others, who like style A consistent dark tone for effortless writing - micronized lead for unbreakable points are what adds to its superiority.





LION
PINKY®
PENCILS


Lion 'PINKY' Pencils Pretty Perfect, Ideal for children because of its pretty designs & colours.Strongly bonded lead for unbreakable points and super smooth writing add to its attraction.





LION
Geematic®
DRAWING PENCILS

Lion Geematic Drawing Pencils. A unit for all Professionals like artists, architects, designers & engineers. Give expertise an edge. Available in 14 grades from H to 6H and B to 6B HB and F



LION PENCILS LTD
95, Parijat, Marine Drive
BOMBAY 400 002